Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 14/00
දිනමුරසු වාරමලර් மார்ச் 10-16,2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 450



## சந்திரிகா-ரணில் அதிகரிக்கும் முறுகல்

## புலி வாலை பிடித்த கதை

## பிரதியுக்ஷாவுக்கு நடந்தது என்ன?

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## ஞானம்

உடல் என்பது ஒரு பௌதிக மான பொருள். பல பொருட்களின் கூட்டுக்கலவை. உடலின் மேற்புறம் புலன்கள் புலன்களின் மேல் மனம். மனதின் மேல் புத்தி, புத்தியின் மேல் ஆத்மா, ஆத்மாவிலிருந்து நேரடியான இணைப்பு புத்தியிடம் தானிருக்கிறது. ஆத்மாவின் ஒளி புத்தியின் மேல் படருவதால் நம்புத்தியை நல்லமுறையில் வளர்த்துக் கொள்ள வேண்டும். நல்லபுத்தியுடையவரே சிறந்த ஞானியாக முடியும். அதன் மூலமே ஞானத்தை முழுமையாகப் பெறமுடியும் (பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவின் அருளுரையிலிருந்து)

அ.அரசரெத்தினம்-சேனையூர்-06.



## நாவைப் பேணி நல்லருள் பெறுவோம்

மனித உறுப்புக்கள் எல்லாவற்றிலும் மிகமிக முக்கியத்தும் வாய்ந்தது உள்ளமாகும். இந்த உள்ளம் நமது நாவின் மூலம் கெட்டு விடுகிறது.

நாவை நாம் வீண் பேச்சுக்களினின்றும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் அல்குர் ஆனில் கூறுகிறான் நீங்கள் மொழிபவைகளை றகீப், அதீத் என்னும் மலக்குகள் பதிவு செய்கின்றார்கள் என்று.

இதனால்தான் இறை தூதர் அவர்கள் எடுத்தியம்புகிறார்கள் உடலில் மாமிசப் பிண்டம் ஒன்று உண்டு அது சீர்திருத்திவிட்டால் உடல் முழுவதும் சீர்த்திருத்திவிடும். அது கெட்டுவிட்டால் உடல் முழுவதும் கெட்டுப் போய் விடும் அதுதான் உள்ளம் என. **ஆதாரம்: புகாரி**

நம் வாழ் நாட்களில் பேசும் நல்ல, தீய பேச்சுக்களை அல்லாஹ்வின் இரு அமரர்கள் பதிவு செய்துள்ளதை நாம் மரணித்ததும் நாளை மறுமையில் கண்டு கொள்ளலாம்.

அல்லாஹ் மனிதர்களை பகுத்தறிவு கொண்ட படைப்பாக படைத்துள்ளான். ஆகவே நாம் நாவைப் பேணி உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தி பூரண முஃமின்களாக வாழ வேண்டும்.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

## கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு

இந்த உலகத்திலே நமக்கு உபத்திரமுண்டு ஆனாலும் இயேசு கிறிஸ்து உலகத்தை ஜெயித்ததால், அவரை விசு வாசிக்கும் நமக்கு ஜெயம் கொள்ள அதிகாரம் உண்டு. வியாதிகள், கஸ்டங்கள் வரலாம். நாம் செய்யவேண்டியது ஒன்றே நமது சுயத்தின் மேல் நம்பிக்கை வைக்காது. கர்த்தர்மேல் தேவபலத்தின் மேல் நம்பிக்கை வைக்கவேண்டும்.

உலத்திலுள்ள மருத்துவர்கள் என்னை விடுவிப்பார்கள். என்று கருதுவீர்களானால். ஒரு வேளை கைவிடப்படலாம். லூக்கா 8:43-47 இந்த ஏழை ஸ்த்ரீ பன்னிரண்டு வருஷமாய் வியாதியால் வேதனைப்பட்டாள். மருத்துவர்களால் அவளை விடுவிக்கமுடியவில்லை. இறுதியாக தன்னை உருவாக்கிய இயேசு கிறிஸ்துவிடத்தில் தனது விசுவாசத்தை வைத்தாள். தன்னை முற்றிலுமாக வெறுமையாக்கினாள். அவளது ஆவி தன்னை உண்டாக்கிய கர்த்தரிடமாய் முறையிட்டது.

நீ ஆவியிலே நிறைந்து யாக்கோபைப் போல் போராடி நீர் என்னை ஆசீர்வதித்தா லொழிய உம்மை கோவிடேன் என்று ஜெபி. தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும் உண்மையிலேயே கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.

அக்ஷாள் கமலா-கல்கிஸ்சை.

# கவிதைப் போட்டி இல.447

### பரிசுக்குரிய கவிதை

## ஞானிகள் இல்லை!

செவ்வாய்க் கிரகம் சென்று
உயிர்கள் வாழ்வதற்கு
வசதி செய்ய
விஞ்ஞானிகள்....
ஆனால், செம்மணியில்
செத்துமடிந்த
உயிர்களின் எண்ணிக்கை
உலகுக்குச் சொல்லியழ
எந்த ஞானிகளும் இல்லையே!

என்.தனுசுஜன், சண்டிலிப்பாய்.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

## தேடல்

பிறந்த நாட்டில்
பிழைக்க முடியவில்லை என்று
பிறநாடு நாடிச் சென்றால்
பிரஜா உரிமை இல்லையென்று
விரட்டப்படுவதால் - விண்ணில்
புதிய நாடுதேடி - எம்மவர்
புறப்பட்டுவிட்டார்களோ!

க. விக்னா-திருகோணமலை.

## ஆராய்ச்சி

மனிதனே விண்ணுக்குச் சென்று
மனிதனே ஆராய்ச்சி செய்து
மனிதனே மனிதனுக்கு அழிவை
ஏற்படுத்திக் கொள்வது தான்
இந்த விஞ்ஞான உலகில்
ஆராய்ச்சி என்பது!

எம்.எம்.எம்.ஹில்மி-அளுத்கம



## வாழவிடு

நாங்கள் வாழ
வேறு கிரகத்தில்
இடம் வேண்டாம்!
இந்த நாட்டின்
'கிரகம்' கழிந்து
எங்கள் ஊரில்
வாழவிட்டால் போதும்!

இரா.இராமகிருஷ்ணன்-பொகவந்தலாவை.

## எங்கே நிம்மதி

தண்ணீர் இல்லா
நாட்டினிலே!
கண்ணீரைக்
கண்டுவிட்டு...
பன்னீரைத் தேடிப்
பறந்து நீயும்
சென்றாயோ?

செல்வி.க. பரமேஸ்வரி-தலவாக்கலை.

## உலகிற்குத் தேவை

சந்திரன், செவ்வாய்
சனி என்று சென்று
சாதனை படைக்கும்
விஞ்ஞானிகளே!
சாதாரணம் என்னும்
பெண்ணின் மனதையறிய
கருவியொன்று கண்டு
பிடியுங்களேன்!

எஸ். கண்ணாளன்-மன்னார்.

## போரினால்...

விண்ணைக்குடைந்து
விஞ்ஞானமானது
-என்னதான்
விஞ்சி விஞ்சிப் போனாலும்
மண்ணிலிருக்கும் நாம்
அஞ்சி அஞ்சியே
சாகவேண்டியிருக்கு
நிதம்...நிதம்...

தாராபுரம் நிலாம்-கரம்பை.

## சமாதானம்

ஒன்றுபட்டால்
உண்டுவாழ்வு
இயந்திரங்களுக்குத்
தெரிகிறது
இதயமுள்ளவர்கள்
மறந்துவிட்டார்கள்!

சிவராம்-மட்டக்குளி.

## தேடல்

அடுத்த கிரகங்களில் தேப்
புறப்பட்டிருக்கும் நீங்கள்
பூமியில் எல்லாவற்றையும்
தேடிவிட்டீர்களா?
தேடப்படாத முத்துக்கள் இன்னும்
உறங்கிக்கொண்டே தான் இருக்கின்றன.

ஆ. ரஜனிகாந்தன்-ஒந்தாச்சிமடம்.

## வரட்சி

மனிதா...
பாழ்பட்ட உனது
பாதம்
பட்டதனால்,
விண்ணிலும்
இனி வரட்சியே...!

கி.சத்தியசீலன், டயகம.

## தடை

நிலவுக்குள் நுழையவோ
தடையேதுமில்லை!
பூவுலகுக்குள் நுழையவோ
மனிதத் தடைகள் தான்
எத்தனை?

அ. சந்தியாகோ-கண்டி.

## உறைவிடம்

அமைதிப்பேச்சுக்கள்
அர்த்தமிழந்து போனால்
அடைக்கலம் தேடி
அண்டவெளிக்குத்தான்
போகவேண்டுமோ?

ஏ.உமாதர்சினி- கல்முனை-01.

## சரண்

பாவி மனிதனே!
பாவச்சுமைகளை -முதுகில்
சுமந்து கொண்டா?
சமாதானம் வேண்டிச்
சந்திரனிடம் சரணடைந்தாய்?

செல்வி. பி. சுஜாதா-கொழும்பு-13.

# கவிதைப் போட்டி இல.450



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 16.03.2002

கவிதைப் போட்டி இல.450
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## வேற்றுக்கிரகத்தில்...

இங்கே
பிராணவாயு இல்லை
நச்சு வாயுவும் இல்லை
செழிப்பு இல்லை
அழிப்பும் இல்லை
மனிதர்கள் இல்லை
அதனால்,
மடையர்களும் இல்லை!

பி.சி. அன்ரன்-மட்டுநகர்.

## வயது பேதமின்றி

விண்வெளிப்பயணம்
விரைந்த பனிச்சறுக்கு
வீறுடன் விரையும்
விந்தை தொடர்கையில் -இன்று
வயது பேதமின்றி
விஞ்ஞானத்துடன்
இணைந்திடின் விளைவு
நாளை எப்படியோ..?

திக்கம் சி.மதியழகன்-அல்வாய்.

# வாசக[ர்] சாலை



### முரசுக்குப் பாராட்டு...

முரசே! நீ ஒவ்வொரு வாரமும் அள்ளிச் சுமந்துவரும் அனைத்து அம்சமும் எம்மையெல்லாம் வியக்க வைக்கிறது. 21/02 அன்று சுமந்து வந்த அரசியல் துணுக்குகளும், 'சிறுகதை'களும், 'தேன் கிண்ண'த்துடன் கலந்து வந்த கவிதைகளும் பிரமாதம். இன்னலை மறந்து துள்ளலை வரவழைக்கும் உனது சேவையைப் பாராட்டுகிறேன். மீண்டும் தொடரட்டும்.

அஜந்தகுமார், அக்கரைப்பற்று.

தமிழ் பேசும் மக்களின் தரம் உயர் பத்திரிகையான என் அன்புத் தினமுரசு வாரமலரே! முதல் பக்கம் தொடக்கம் இறுதிப்பக்கம் வரை முத்துமுத்தான அம்சங்களைச் சுமந்துவரும் நீ! வாழ்க! வளர்க! என் இதயத்தினுள்ளும் உன் மனம் சங்கமிப்பதால் சந்தோஷப்படுகிறேன்! நீ எங்களைக் கவர்ந்துள்ள அம்சங்கள் 'தேன் கிண்ணம்', 'சிந்தியா பதில்கள்', 'சினிவிசிட்', 'கவிதை'கள், 'சிறுகதை', தொடர்கதை, அரசியல் இவையாவும் மிக கவர்ந்தவைதான்! ஆகவே உன் பணி மென்மேலும் சிறப்பாகத் தொடர என்பாராட்டுக்கள் உரித்தாகட்டும்!

சண்முகராஜா, அட்டன்.

வியாழன் விடிகாலைப் பொழுதில் துள்ளியெழச் செய்திடும் முரசே!

ஒரு வாரகாலம் காத்திருந்து உன்னை விழிக்குள் முழுவதுமாய் உள்வாங்கி, கனத்த இதயத்துடன் எழுகையில் இனம்புரியா உணர்வொன்று என்னை ஆட்டுகின்றதே அது ஏன்? வினாக்களை மட்டுமே தொடுத்து நிற்கும் சமூகத்தின் மத்தியில் விடைகளையும் சுட்டி நிற்கும் முரசே, நீ தருகின்ற விடயங்களின் உந்துதலில் எத்தனையோ முறை என்னையே புதுவிதமாய்ப் பார்க்கிறேன். குறிப்பாக 'அரசியல் அலசல்', 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', சாதாரணன் பகுதி போன்றவை அரசியல் போக்கிற்கு அர்த்தம் கற்பிக்க, 'சினிமா', 'ஸ்போர்ட்ஸ்' போன்றவை பொழுது போக்கு அம்சங்களைப் புலப்படுத்த, 'கவிதை'களும், 'சிறுகதை'களும், 'இலக்கிய நய'மும் வாழ்வினை நோக்கி புதியதோர் தரிசனத்தைத் தந்து நிற்கின்றன. தொடர்ந்தும் உன் பணி இவ்விதமே தொடர வாழ்த்துக்கள்.

கு. வதனி, களனி வளாகம்.

என்னுள்ளத்தைக் கொள்ளை கோண்ட முரசே! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. நான் ரசிக்கும் 'சிந்தியா பதில்கள்', 'நில்-கவனி-முன்னேறு', 'லேடீஸ் ஸ்பெஷல்' அனைத்தும் அன்றிலிருந்து இன்றுவரை இனிமையாகவே இருக்கின்றது. உந்தன் சிறப்பை நான் இலங்கையில் மட்டுமல்ல, சிங்கப்பூர், சைப்ரஸ் என்று வெளிநாடு சென்றும் கூடக் கைவிடவில்லை. உனக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

பி. தேவி, சைப்ரஸ்.

இனிய முரசே, உனது 448வது இதழில் வெளியாகியிருந்த கவிதைகள் அனைத்தும் பிரமாதம். அத்தோடு இளமுள்ளங்களைக் குஷிப்படுத்தும் விதமாக நீ தந்திருந்த "காதல் துணுக்ஸ்" சுவாரசியம் நிறைந்ததாக இருந்தது. மேலும், நரனின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' வழக்கம் போலவே புரிந்துணர்வு உடன்படிக்கையைப் பற்றி ஒரு தெளிவைத் தந்திருந்தது. கவர்ச்சியான 'சினிமா'ப் பகுதி, ரசிக்கவைத்த 'இலக்கியநயம்', கிண்டல் தனமான சாதாரணன் எல்லாமே வெகு ஜோர். மேலும் மேலும் முரசும் அதன் ஆக்கங்களும் மெருகூற வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளும்,

ஆர். கோகுலன், பரமேஸ்வராசந்தி, திருநெல்வேலி.

பெண்ணென்றும் பாராது என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டாய் முரசே! பத்திரிகை உலகிற்கு நீ முடிசூடா அரசே! வியாழக்கிழமை எப்போ வரும் என்று உன் வரவை எண்ணி ஏங்கித் தவிக்கும் என் இள மனசே! நீ என் கைகளில் கிடைத்து விட்டால் மகிழ்ச்சிக்கடலில் தத்தளிக்குது என் உயிரே! உன்னைப் படிக்கப் படிக்க என்றும் பதினாறு போல் தோன்றுதே என் வயசே! நீ அகிலமெல்லாம் புகழடைய வேண்டும் என்பதே என் இறுதிமூச்சே!

என். ஷர்மிளா, கொழும்பு-13.

# உங்கள் பக்கம்

## மீண்டும் மின்நெருக்கடி...

"மழை பொய்த்ததால், மின்சாரத்தை முறையாக வழங்க முடியவில்லை எனக் கூறுவதற்கு ஒரு மின்சக்தி அமைச்சர் தேவையில்லை." என்ன, எங்கேயோ கேட்ட, பார்த்த வாசகம் மாதிரி இருக்கின்றதா? வேறொன்றுமில்லை. தற்போதைய அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்திருந்தபோது எடுத்துவிட்ட அம்புகள் தான் இவை. அவர் விட்ட அம்புகள் "பூமராங்" போன்று அவருடைய கட்சியைத் தாக்கும் அளவிற்கு மீண்டும் மின்வெட்டு மிகவும் நெருக்கடிக்குள்ளாகி விட்டது. இருவாரங்களுக்கு முன்பு கூட, மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்படும் என பத்திரிரகைகளில் வெளிவந்த ஊகிப்புக்களுக்கு, முந்திரிக்கொட்டையாய் முந்திக்கொண்டு "மின்வெட்டைஅதிகரிக்கும் உத்தேசம் எதுவும் அரசுக்கில்லை. முடிந்தவரை இருக்கும் மின்வெட்டு நேரத்தைக் குறைப்பதற்கே முயற்சிக்கின்றோமே தவிர, அதிகரிப்பதாக இல்லை" என அறிக்கை விட்டனர். ஆனால்,அவை யாவற்றையும் பொய்ப்பித்துக் கொண்டு மீண்டும் மின்வெட்டு ஒரு நாளைக்கு ஐந்து மணித்தியாலங்களாக(பகலில் இரண்டரை, இரவில் இரண்டரை) அதிகரிக்கப்பட்டுள்ளது. நாட்டில் யார் ஆட்சி புரிகின்றார் என்பதைப் பார்த்து மழை பெய்வதில்லை என்பது உண்மை தான். ஆனால், ரணிலின் அரசாங்கம் மழையையே முற்றுமுழுதாக நம்பிக்கொண்டிராமல் மின்நெருக்கடியைத் தீர்ப்பதற்கு வேறு மார்க்கங்களையும் நோக்கி அடியெடுத்து வைக்கும் என நம்பியிருந்த பொது மக்களுக்குக் கிடைத்திருக்கும் ஏமாற்றம் சற்று அதிகமானதே! (அந்த நம்பிக்கைத் தீயிற்கு எண்ணெய் வார்ப்பது போல் மின்சக்தி எரிபொருள் அமைச்சர் விடுத்த அறைகூவல் வேறு) இயற்கை பொய்த்துப் போனதால் ஏற்படும் சிரமைங்களைப் பொறுத்துக் கொள்ள எம் நாட்டு மக்கள் போதுமானளவு சகிப்புத் தன்மை உடையவர்கள் என்பதென்னவோ உண்மைதான். ஆனாலும், மேலைத்தேய நாடுகளில் இந்தப் பிரச்சனை எவ்வாறு கையாளப் படுகிறது என்பதை முன்னுதாரணமாகக் கொள்ளல் நலம். எதற்கெல்லாமோ கண்மூடித்தனமாக மேலை நாட்டுப் பாணிகளைப் பின்பற்றுபவர்கள் ஒரு நாட்டின் முக்கிய பிரச்சனையான மின் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அவற்றைப் பின்பற்றினால் என்னவாம்?

மனோகவி, திருக்கோவில்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net


## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# தென்னிலங்கையில் அதிகரித்து வரும் எதிர்ப்பலைக்கு மத்தியில்

# இரண்டரை மாதத்தில் ஆரம்பக் கட்டப் பேச்சு என அரசாங்கம் அறிவிப்பு

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தைகள் இரண்டரை மாதங்களில் ஆரம்பிக்கப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கட்டங்கட்டமாக பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படும் என்றும் இடையில் முறிந்துவிடாதவாறு அவதானமாகவும் மிகுந்த எச்சரிக்கையுடனும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அரசாங்கத்தின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கூறியிருக்கிறார்.

இதேவேளை புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானப் பாதை கடினமானது என்பதை மீண்டும் வலியுறுத்தியதுடன் போர் நிறுத்த உடன்படிக்கை முறிவடையும் பட்சத்தில் எத்தகையதொரு சவாலையும் எதிர்கொள்ளக்கூடிய விதத்தில் ஆயுதப்படைகள் தயார் நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் அரசும் புலிகளும் செய்து கொண்ட போர் நிறுத்த உடன்படிக்கை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்காது என்று ஆயுதப் படைகளின் தளபதிகள் கூறியிருப்பதாக அரசாங்கம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள சில அம்சங்கள் குறித்த எதிர்ப்பலை தென்னிலங்கையில் வேகமாக அதிகரித்து வருகின்றது.

மக்கள் விடுதலை முன்னணி, அதனுடன் தொடர்புபட்ட பல்கலைக் கழக மாணவர் அமைப்புக்கள் ஒப்பந்தத்திற்கெதிரான தமது எதிர்ப்பை நாடளாவிய ரீதியல் விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்ற அதேவேளை புரிந்ணர்வு ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள சில அம்சங்கள் குறித்து தமது ஒன்றிணைந்த எதிர்ப்பை வெளிக்காட்ட பொதுஜன ஐக்கிய முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் கருத்தொருமைப்பாட்டுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொ.ஐ.மு. உயர் மட்டமும் ஜே.வி.பி.யினது தலைவர்களும் கடந்த வாரம் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

## விறகுடன் இருந்த வெடிமருந்து வெடித்ததில் சிறுமி பலி!

கலவானை சமன்புர என்ற இடத்தில் காட்டிலிருந்து பெற்றுவந்த விறகுகளைக் கொண்டு தீ மூட்டிய போது அவற்றுக்கு மத்தியிலிருந்த வெடி மருந்து நிரப்பப்பட்ட ஒரு இரும்புக்குழாய் வெடித்தில் அருகில் உறங்கிக்கொண்டிருந்த மூன்று வயதுக் குழந்தை ஒன்று ஸ்தலத்திலேயே உயிரிழந்தது.

கனகவல்லி ஜீவன் ராஜா என்ற குழந்தையே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தது.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று அதிகாலை காட்டிலிருந்து கொண்டு வந்த விறகுகளுக்கு மத்தியிலிருந்த கனதியான பொருளொன்றையும் சேர்த்து அடுப்பிலிட்டு தீமூட்டிய போது சற்று நேரத்தில் பாரிய சத்தத்துடன் இரும்பினாலான பொருளொன்று வெடித்துச் சிதறியதாகவும், அறையில் உறங்கிக் கொண்டிருந்த சிறுமி அதனால் தாக்கப்பட்டு உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் அலுவலகத்தில் வைத்து சிறுமி பெற்றோரிடம் ஒப்படைப்பு

மூதூர் கிழக்கு, சம்பூரில் உள்ள புலிகளின் அலுவலகத்திற்குப் பொலீஸாருடன் சென்ற பெற்றோர் கொழும்பில் கடத்தப்பட்ட தமது மகளை கண்ணீர் மல்கப் பொறுப்பேற்றுக்கொண்டனர். கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் கடந்த வியாழனன்று வர்த்தகர் ஒருவரின் மகளான சிறுமி கடத்தப்பட்டு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டு சென்று வைத்திருந்த வேளை புலிகளின் புலனாய்வுப் பிரிவினரால் மீட்கப்பட்டாள்.

சிறுமி கடத்தப்பட்டது தொடர்பான சகல விசாரணைகளையும் புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு சிறுமியை கிராம அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் முன்னிலையில் பெற்றோரிடம் ஒப்படைத்தனர். தமது பிள்ளையைப் பொறுப்பேற்றுக்கொண்ட பெற்றோர் புலிகளுக்கு வெகுவாக நன்றி தெரிவித்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை, சிறுமியைக் கடத்திய தாகக் கூறப்படும் மதியழகன் என்பவர் தலைமறைவாகியுள்ளார்.

## தொண்டமானின் கருத்துக்கு ஈ.பி.டி.பி. கண்டனம்

இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சியில் மாற்றுக்கருத்ததுக்களைக் கொண்டுள்ள தமிழ் கட்சிகளின் பங்களிப்பை குறைத்து மதிப்பிடும் விதத்தில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அண்மையில் வெளியிட்டிருந்த கருத்துக்கு ஈ.பி.டி.பி. கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ். சிவதாஸன் விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் தமிழர்களின் கணிசமான தொகையினராக இருக்கும் மாற்றுக்கருத்து உள்ளவர்களும் வடக்கு கிழக்கு மண்ணில் சுமுகமாக வாழ்வதை உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட அனைவரும் முயற்சிக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளதோடு இப்போது இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசும் புலிகள் 1990ம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண சபையை ஏற்றுக்கொண்டிருந்தால் அதன் பின்னரான அழிவுகளைத் தவிர்த்திருக்க முடியும் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## ரத்வத்தையின் புதல்வர்கள் அடையாளம் காணப்படவில்லை!

கண்டி முஸ்லிம் இளைஞர்கள் பத்துப்பேர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக திங்களன்று தெல்தெனிய நீதிமன்றில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் பிரதான சந்தேக நபர்களாக கருதப்படும் லொஹான் ரத்வத்த, சானுக ரத்வத்த ஆகியோர் அடையாளம் காட்டப்படவில்லை வேறொருவரே அடையாளம் காட்டப்பட்டார். மிகுந்த பரபரப்புக்கு மத்தியில் இந்த அணிவகுப்பு இடம்பெற்றது. அரசு தரப்புச் சட்டத்தரணி இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் சாட்சிகளின் சாட்சியங்கள் முரண்பட்டு நிற்கின்றன. சாட்சிகள் சிருஷ்டிக்கப்பட்டு விட்டன என்று கூறினார்.

இதேவேளை மடவளை முஸ்லிம் இளைஞர்கள் படுகொலைச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தயின் தடுப்புக் காவல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

அனுருத்தவின் தற்போதைய மனைவி, லொஹான், சானுக்கு ஆகியோரின் தாயார் (முன்னாள் மனைவி) அனுருத்தவின் சகோதரர் ஆகியோரும் நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர். விசாரணைக்கென அனுருத்த இம்முறையும் கொழும்பிலிருந்து விசேட ஹெலிகொப்டர் மூலம் கண்டிக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். அவரைவிடுதலை செய்யக்கோரி பலர் பதாகைகளை ஏந்தியவாறு நீதிமன்றுக்கு வெளியே திரண்டு கோஷமெழுப்பினர்.

## திருமலை முஸ்லிம்களுக்கும் புலிகள் 'அழைப்பு'க் கடிதங்கள்

திருக்கோணமலையிலுள்ள நகரப் பகுதி தமிழ் முஸ்லிம் மக்களுக்கு புலிகள் அழைப்புக் கடிதங்களை அனுப்பி வருகின்றனர்.

வரிப்பணம் செலுத்துமாறு கேட்டே இந்தக் கடிதங்கள் அனுப்பப் பட்டிருக்கின்றன. புரிந்துணர்வு சமாதான உடன்படிக்கையில் புலிகள் கப்பப் பணம் பெறும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் புலிகள் தொடர்ந்தும் கப்பம் பெறும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

இதனிடையே மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் முஸ்லிம்களிடமிருந்து கப்பப் பணம் பெறுவதற்கான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம்களிடமிருந்து எந்தத் தரப்பினராவது கப்பப் பணம் பெற முயற்சித்தால் அதுபற்றி தமக்கும் சர்வதேச கண்காணிப்புக் குழுவினருக்கும் அறிவிக்குமாறு படையினர் கேட்டுள்ளனர்.

## யாழ். கொழும்பு விமான சேவை குறைப்பு தினசரி ஏமாற்றத்துடன் திரும்பும் பயணிகள்

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான பயணிகள் விமான சேவைகள் தொடர்ந்து சீர்குலைந்த நிலையிலேயே உள்ளன. இந்தச் சேவையில் ஈடுபட்டுவந்த "ஹெலிடூர்ஸ் விமானங்களின் திருத்த வேலைகள் இன்னமும் பூர்த்தியடையாததால் மாற்று ஏற்பாடாக விமானப்பன்டயின் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சேவைகள் இடம் பெற்று வருகின்றன. இதனால் விமானப் பயணச்சீட்டுப் பெற்ற பெரும் எண்ணிக்கையான பயணிகள் பயணம் தடைப்பட்டதால் ஏமாற்றமடைந்திருக்கின்றனர்.

விமானத்தின் திருத்த வேலைகள் இன்னமும் பூர்த்தியாகாததால் மட்டுப்படுத்தப்பட்ட அளவே சேவைகள் இடம்பெறுகின்றன என்று அந்த நிறுவனத்தின் யாழ். அலுவலக அதிகாரி தெரிவித்துள்ளார். விமானத்தின் திருத்தவேலைகள் பூர்த்தியாகி வழமையான சேவைகள் விரைவில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்ப்பதாகவும் திருத்தவேலைகள் பூர்த்தியடையும் வரை விமானப்படையின் விமானத்தின் உதவியுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சேவையை தொடர முடிகின்றது என்றும்-அவர் தெரிவித்துள்ளார்.

திங்களன்று ஐந்து சேவைகள் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டபோதும், இரு சேவைகளே இடம் பெற்றன ஐந்து சேவைகளிலும் பயணம் செய்வதற்காக பெரும் எண்ணிக்கையான பயணிகள் வந்திருந்தனர். இரு சேவைகள் மட்டுமே இடம்பெற்றதால் பலர் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

## திருமலையிலும் புலிகளின் ஆட்திரட்டல் நடவடிக்கை ஆரம்பம்

திருக்கோணமலையிலும் புலிகள் தற்போது ஆட்திரட்டல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். கடந்த வாரம் திருக்கோணமலை நகரப் பாடசாலைகளில் இருந்து பதினைந்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் காணாமல் போயுள்ளார்கள்.

பாடசாலைகளில் வந்து பிரச்சாரம் செய்யும் புலிகள் "நீங்களெல்லாம் வீட்டிலிருந்து சும்மா செத்தால் எட்டு நாட்களுக்குத்தான் துக்கம் அனுஷ்டிப்பார்கள். பின்னர் மறந்து போய் விடுவார்கள். ஆனால் புலிகளுடன் சேர்ந்து போராடி மரணித்து மாவீரர் பட்டியலில் சேர்ந்தால் காலமெல்லாம் அஞ்சலி செலுத்திக் கௌரவிக்கப் படுவீர்கள்" என்று உணர்ச்சி மேலிட்ட வார்த்தைகளைக் கூறி உடனடியாகச் சம்மதம் தெரிவிக்கும் மாணவர்களை அவர்களது வீடுகளுக்கு கொண்டு சென்று பெற்றோரிடம் அனுமதி பெற்று அழைத்துச் செல்கின்றனராம்.

## கடற்படைக்கு ஆட்சேர்ப்பு

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிரந்தர யுத்தநிறுத்தம் ஏற்பட்டு சமாதானப் பேச்சுக்கான சூழ்நிலை உருவாகிவரும் நிலையில் இலங்கை கடற்படை ஆட்களை திரட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. கடற்படைக்கு 10 ஆயிரம் பேரைச் சேர்ப்பதற்கான பணிகள் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நடைபெறும் என்று கடற் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

கடற்படையின் நிரந்தரப்படைப் பிரிவுக்கும் தொண்டர் படைப்பிரிவுக்குமே தற்போது ஆட் திரட்டல் நடைபெற்று வருகிறது.

பதுளை, குருநாகல், எம்பிலிப்பிட்டிய, மகியங்கனை, கண்டி, தம்புள உட்பட பல பிரதேச செயலக பிரிவுகளில் இதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறுகின்றன.

## தமிழ் முஸ்லிம் பயணிகளுக்கு கிடைத்த தண்டனை!

நாட்டின் பல பாகங்களிலுமிருந்து மட்டக்களப்புப் பகுதிகளுக்குச் செல்வதற்காக கதுறுவெலைக்கு வந்து சேரும் தமிழ் முஸ்லிம் மக்கள் பயணம் செய்வதற்கு பஸ் இன்றிப் பெரும் அவஸ்தைப்பட வேண்டியுள்ளது.

மட்டக்களப்பிலுள்ள பல பஸ் டிப்போக்களிலிருந்து கதுறுவெலைக்கான பஸ் சேவைகளை நடாத்த முன் வந்த போதிலும் அவை கதுறு வெலையிலுள்ள சில இனவாதிகளால் தடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. பகல் 12 மணிக்குப் பின்னர் கதுறு வெலைக்கு வரும் பயணிகள் மாலை 4.30 மணிவரை காத்துக்கிடந்து அவஸ் தைப்பட வேண்டியுள்ளது.

சில தனியார் பஸ் வாகனக்காரர்களிடமிருந்து அதிகளவு லஞ்சம் பெற்றுக்கொண்டு இ.போ.ச. பஸ்கள் சேவையில் ஈடுபடுவதைத் தடுத்திருக்கிறார்கள். இதனால், தனியார் வாகனக்காரர்கள் இரு மடங்கு, மும்மடங்கு சிலவேளைகளில் அதற்கும் மேலும் கட்டணங்களை அறவிடுகிறார்கள்.

கதுறுவெலை இ.போ.ச. பஸ் தரிப்பிடத்தில் மட்டக்களப்பிலிருந்து செல்லும் இ.போ.ச. பஸ்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அதனை, கதுறுவெலையிலுள்ள பெரும்பான்மை தனியார் வாகனக்காரர்களே கட்டுப்படுத்துகிறார்கள்.

ஏற்கனவே இருந்த பொ.ஐ.மு சார்பு தனியார் பஸ் நிர்வாகத்தினரும், தற்போதுள்ள ஐ.தே.மு நிர்வாகத்தினரும் மிக மோசமான அட்டகாசம் செலுத்துவதாகக் கூறப்படுகிறது. வாழைச்சேனை பஸ் டிப்போ நடத்துநர்கள் தாக்கப் பட்டும், பஸ் கட்டண விபரப்பட்டியல் கிழித்தெறியப்பட்டுமுள்ளன. 'பொங்கி'யெழச் சொன்னால் செய்து காட்டும் மட்டக்களப்பு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயம் பற்றிக் கவனிக்கவில்லையென பயணிகள் விசனம் கொண்டுள்ளனர்.

## மக்களிடம் கடன் வாங்கி டெங்கு ஒழிப்பில் ஈடுபடும் இ.செ.ச—சுகாதாரத்துறை பாராமுகம்!

மட்டக்களப்பில் ஏற்பட்ட டெங்கு நோயினால் இதுவரை சுமார் ஏழு பேர் இறந்திருக்கிறார்கள். 60 பேர் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். 20 பேர் இன்னமும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

இத்தனை பேர் இறந்தும் பெருந்தொகையானோர் பாதிக்கப்பட்டுமுள்ள நிலையில் டெங்கு அபாயம் இன்னமும் மக்களை நிம்மதியற்றவர்களாகத் துரத்திக்கொண்டிருக்கிறது.

இவ்வளவு நடந்தும் மட்டக்களப்பிலுள்ள சுகாதார அதிகாரிகளோ அல்லது அநாவசியமான ஹர்த்தால்களுக்கு அழைப்பு விடுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமோ கரிசனை எடுத்ததாகத் தெரியவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

ஆனால், மட்டக்களப்பின் ஆபத்தான நிலை உணர்ந்த செஞ்சிலுவைச் சங்கம் துரித டெங்கு ஒழிப்பில் ஈடுபட்டுள்ளது. மட்டக்களப்பு நகரத்தைப் 12 வலயங்களாகப் பிரித்து கடந்த 25ம் திகதி தொடங்கிய டெங்கு ஒழிப்புப் பணி மார்ச் 8ம் திகதி வரை இடம்பெறுகிறது.

ஆரம்பத்தில் இ.செ.ச. சங்கத்திடம் டெங்கு ஒழிப்புக்கான பணம் இருக்கவில்லை. பொது மகன் ஒருவரிடமிருந்து கடன் பெற்றே ரெக்னிக்கல் மலத்தீன் தெளிக்க வேண்டியிருந்தது.

இத்தனைக்கும் மத்தியில் மட்டக்களப்பில் ஏராளமான தனியார் மருத்துவமனைகளை நடாத்தும் வைத்தியர்களோ, சுகாதார அதிகாரிகளோ டெங்கு ஒழிப்பிற்கான எந்தவித உதவிகளையும் செய்யவில்லை எனப் பொது மக்கள் சீற்றம் கொண்டுள்ளனர்.

# முரசம்

## வழக்குகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

குடியகல்வு சட்டங்களை மீறியவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தடுத்துவைக்கப் பட்டிருக்கிறார்கள்.

இத்தகையவர்கள் பெரும்பாலும் நீர்கொழும்ப சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குடியகல்வ சட்டத்தை மீறியமை எனும்போது தமது வாழ்க்கைப்போராட்டத்தின் ஓர் அங்கமாக அல்லது வயிற்றுப் பிழைப்புக்காக இந்த நாட்டை விட்டு கடல் வழியாக வெளியேறி இத்தாலிக்கோ அல்லது அவுஸ்திரேலியாவுக்கோ செல்ல முற்பட்டவர்கள்தான் இவ்வாறு சிறையில் வாடுகிறார்கள்.

இத்தகைய சட்ட விரோத பயணங்களின் போது பிடிபடும் இலங்கையர்களுக்கு உடனடியாக பிணை வழங்கப்படுவதில்லை.

பல மாதக்கணக்கில் வழக்குகளும் பதிவ செய்யப்படுவதில்லை.

இதனால் மாதங்களையும் தாண்டி வருடக்கணக்கில் இத்தகைய குற்றச்சாட்டக்களுக்காக சிறையில் வாடுபவர்கள் ஏராளம்.

குடியகல்வ சட்ட மீறல்களுக்கு பிணை வழங்கப்படுவதில்லை எனும்போது இந்த நாட்டில் நடைபெறும் மிகப்பெரிய குற்றச்செயல் சட்டவிரோதமாக வெளிநாடுசெல்ல முயற்சிப்பதுதானா என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்தக் கைதிகள் செய்த காரியம் சட்ட விரோதமானது என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டின் பேரில் வழக்குகளும் பதிவ செய்யாது பிணையும் வழங்காது வருடக்கனக்கில் தடுத்து வைப்பது நியாயப்படுத்த முடியாதது.

கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு போன்ற பாரதூரமான குற்றச் செயல்களுக்கே பிணை வழங்கப்படும்போது, குடியகல்வ சட்ட மீறல்களுக்கு பிணை மறுக்கப்படுவது வியப்பான சட்டதிட்டமாகவே காணப்படுகின்றது.

இது விடயத்தில் தமிழர்களே பெரும்பாலும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்காக அல்ல. இதனை ஒரு மனிதாபிமானப் பிரச்சனையாக அரசாங்கம் அணுகவேண்டும்.

இத்தகைய குற்றச்சாட்டுக்களின் பேரில் சிறையில் வாடும் ஆயிரக்கணக்கானவர்களின் விமோசனத்திற்கு சட்டத்துறை ஆவனசெய்யவேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# அதிகரிக்கும் சந்திரிகா–ரணில் முறுகல்!

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே ஒரு அரசியல் விரிசல் ஏற்பட்டு வருவதை இப்போது வெளிப்படையாக அவதானிக்க முடிகிறது.

இது வெறுமெனே சந்திரிகா, ரணில் என்ற இரு அரசியல் வாதிகளுக்கிடையிலான விரிசலல்ல, ஜனாதிபதி, பிரதமர் என்ற இரு பிரதான அதிகார உயர் பீடங்களுக்கிடையிலான விரிசல் என்பதுதான் நாட்டின் அரசியல் யந்திரத்தின் செயற்பாட்டுக்கு ஏற்படுகின்ற ஒரு இக்கட்டான நிலையாகும்.

இலங்கை அரசியலில் எதிரெதிர்க் கட்சிகளைச்சேர்ந்த இரு அதிகார மையங்கள் எதிரெதிர் திசையில் செயற்படுகின்ற நெருக்கடி நிலை இப்போதுதான் முதன்முறையாத் தோன்றியுள்ளது.

இந் நிலை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா 1978ல் வகுத்த புதிய அரசியல் சாசனத்தின் வாயிலாகத் தோற்றம் பெற்றுள்ளது.

அதாவது ஜனாதிபதியும் பிரதமரும் இரு வெவ்வேறு தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்படுபவர்களாக இருப்பதால் ஒரே கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

இப் பிரதான அரசியல் பீடங்களில் உள்ள இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இல்லாதவிடத்து அரசாங்கத்தினுள் கொள்கை முரண்பாடுகளும், அதிகார இழுபறிகளும், இரகசியம் பேணமுடியாத நிலைமைகளும், நடைமுறைச் சிக்கல்களும் தோன்றும் வாய்ப்பு உண்டு.

நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிப்தி ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்ட பின் முன்னொருமுறை இத்தகைய நிலைமை ஏற்பட்டிருந்தாலும் அது இருதுருவ அரசியல் நெருக்கடிக்குத் தள்ளியிருக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் காலத்தில் நடந்த 1994ம் ஆண்டு பொதுத்தேர்தலில், சந்திரிகா பண்டார நாயக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி பாரளுமன்றத்தைக் கைப்பற்றிய தருணத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு கட்சியினராக இருந்த நிலை ஏற்பட்டிருந்தது.

எனினும் அன்றைய ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட் ஜனாதிபதியென்ற அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

ஜனாதிபதி பிரேமதாசாவின் அகால மரணத்தையடுத்து பிரதமராயிருந்த டி.பி. விஜேதுங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றிருந்தார்.

அத்தோடு அது அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு நெருங்கிய வேளையாக இருந்ததாலும் ஜனாதிபதி ஒரு காபந்து ஜனாதிபதியென்ற நிலைமையில் இருந்ததாலும் அதிகார வேற்றுமை பெரிதாகத் தோன்றவில்லை.

ஆனால் இப்போதைய நிலை அவ்வாறில்லை.

ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்பொன்றால் தெரிவு செய்யப்பட்டு மக்கள் தீர்ப்பினைப் பெற்றவராகவும், இன்னும் நான்கு ஆண்டுகள் ஆட்சிக்காலத்தைக் கொண்டவராகவும் உள்ளார்.

அதனால் இன்றைய அரசியல் சாசனத்தின் பிரகாரம் சர்வ வல்லமையும் கொண்ட நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக அவர் அதிகாரம் பெற்றுள்ளார்.

இப்போதிருக்கும் அரசியல் சாசனத்தின் பிரகாரம், அவரே நாட்டின் தலைவராகவும், அரசாங்கத்தின் தலைவராகவும், அமைச்சரவையின் தலைவராகவும், ஆயுதப் படைகளின் பிரதம தளபதியாகவும் விளங்குகிறார்.

இவை அவருக்கு அரசியல் யாப்பின் பிரகாரம் வழங்கப்பட்ட சட்டபூர்வ அதிகாரங்களாகும்.

அத்தோடு, எல்லையற்ற பல அதிகாரங்களை இந்த யாப்பு அவருக்கு வழங்கியுள்ளது.

அதனால்தான் இந்த யாப்பை வகுத்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஒருமுறை கூறியிருந்தார் தன்னால் ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர மற்ற எல்லாவற்றையும் இப்போது செய்ய முடியும் என்று.

இப்போது நிலைமை என்னவென்றால் கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்று பாராளுமன்றத்தைக் கைப்பற்றி ரணிலைப் பிரதமராகக் கெண்ட அமைச்சரவையொன்றை அமைத்துள்ளது.

நாட்டின் நிர்வாகத்தைச் செய்வது அமைச்சரவைதான்.

அமைச்சர்களை ஜனாதிபதியே நியமிப்பவராக இருந்த போதும் அவர் அதில் பெரும் எதிர்ப்பேதும் காட்டாமல் ரணிலின் கோரிக்கைப்படியே நியமனங்களை வழங்கியுள்ளார்.

சர்ச்சைக்குரிய அமைச்சாக இருந்த பாதுகாப்பு அமைச்சையும்கூட அவர் விட்டுக்கொடுத்திருந்தார்.

கடந்த அரசாங்கத்தில் சமுர்த்தி அமைச்சராக இருந்து அவரால் ஊழல் குற்றம் சாட்டப்பட்ட எஸ்.பி. திஸநாயக்காவுக்கும்கூட இம்முறை மீண்டும் சமுர்த்தி அமைச்சைக் கொடுப்பதற்கு சிலகாலம் பின்னடித்தாலும் இறுதியாக தற்போது வழங்கியுள்ளார்.

ஆயினும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் ஒரு சுமுக நிலை பேணப்படுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தற்போது விரிசல்கள் தலையெடுக்கத் தொடங்கியுள்ளன.

பல்வேறு மனக் கசப்புகளும் அதிகாரப் போட்டிகளும் அரசியல் வேறுபாடுகளும் கட்சி நலன்களும் பின்னணியிலிருந்தாலும் இந்த விரிசல்களுக்கு ஒரு பிரதான களமாக அமைந்தது புலிகள் தலைவர் பிரபாகரனுக்கும் பிரதமர் ரணிலும் நோர்வே மத்தியஸ்துவத்துடன் செய்துகொண்ட தற்போதய யுத்த நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தமாகும்.

ஐக்கியதேசியக் கட்சி பாராளுமன்ற ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் அதனை முடக்கக்கூடிய தனது அதிகாரங்களைப் பாவிப்பதற்கு ஜனாதிபதிக்கு பாரிய சங்கடங்கள் இருந்தன.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் என்ற ஒரு ஜனரஞ்சக அங்கீகாரத்தை அது கொண்டிருந்ததோடு, இவ் அரசாங்கம் நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவருமென்ற நம்பிக்கையையும் பெற்றிருந்தது.

அதனால் அதற்கு எதிராக ஜனாதிபதி தனது அதிகாரங்களைப் பிரயோகிக்கக் கூடிய ஒரு தார்மீக அங்கீகாரத்தை வழங்குகின்ற மனோ நிலை மக்கள் மத்தியில் இருக்கவில்லை.

இத்தகைய நிலையில் அவர் பாராளுமன்றத்துக்கும் அமைச்சரவைக்கும் எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் அவரை ஒரு நாட்டின் தலைவியாகவன்றி சர்வாதிகாரியாகவே வெளிக்காட்டும்.

இது வெளிநாட்டு நிதியுதவியில் பெருமளவு தங்கியிருக்கின்ற, தன்னை ஒரு ஜனநாயகப் பாரம்பரியத்



தைக் கடைப்பிடிக்கின்ற நாடாகப் பறைசாற்றுகின்ற ஒரு நாட்டின் ஜனாதிபதிக்குரிய பிரதிமையை (இமேஜை) சர்வதேச மட்டத்தில் கெடுத்துக் கொள்வதாகவும் அமைந்துவிடும்.

அதனால் அவர் பாரிய சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டியவராக இருந்தார்.

ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடு பெருமளவில் குறைக்கப்பட்ட போதும், ஜனாதிபதி பாதுகாப்பு அதிகாரிகள் சிலர் கொலைகள் உள்ளிட்ட பல குற்றச் சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்ட போதும், அவரது மாமனாரும் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் மின்சார அமைச்சருமான அநுருத்த ரத்வத்தயும் அவரது புதல்வர்களும் கைதான போதும் ஆத்திரமுறாதிருக்க வேண்டியவராயிருந்தார்.

ஆயினும் இப்போது அவர் தன் சாணக்கியத்தைச் செயற்படுத்தச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

அவருக்கு வேண்டியிருப்பது இரண்டு விடயங்களே!

அவரிடம் அதிகாரம் இருக்கிறது, ஆனால் அதைச் செயற்படுத்தக்கூடிய மக்களாதரவுடனான மனோ நிலையும், தகுந்த தருணமுமே அவருக்குத் தேவை.

அந்த நிலையை உருவாக்குவதற்கான அரசியற் களத்தையே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி அவர் உருவாக்க விளைகிறார்.

தன்னை ஒரு அதிகார சக்தியாக வெளிப்படுத்தாது நாட்டுக்கு விளையப்போகும் பேராபத்திலிருந்து காக்கவல்ல ஆபத்சகாயனாக வெளிப்படுத்துவதே அவரது அரசியல் வியூகமாகும்.

அத்தோடு இந்த ஒப்பந்தம் தனக்கு மறைக்கப்பட்டு கபடத்தனமாகச் செய்து முடிக்கப்பட்டு, எல்லாம் முடிந்து கைமீறிப் போனதன் பின்னர் தனக்கு அறிவிக்கப்பட்டதாக ஒரு குற்றச்சாட்டை, தன்னை ஒரு பரிதாபத்துக்குரிய நிலைக்கு ஆளாக்கிவிட்டதான ஒரு தொனியில் முன்வைக்கிறார்.

இந்த அணுகுமுறையானது கனசிச்சதமாக அவர் கையாண்டுள்ள ஒரு ராஜதந்திரமாகும்.

தன்மீது ஒரு இனவாதியென்ற தோற்றப்பாடு ஏற்படாதிருக்கும் பெருத்த அக்கறையோடு சமாதானத்தை விரும்புபவராகவும் அதேவேளை நாட்டிற்குப் பொறுப்பாளியாகவும் வெளிப்படுத்தி, தனக்குரிய அதிகாரத்தை சூசகமாக உணர்த்தி, தனக்கு மறைக்கப்பட்ட ரணிலின் தவறை அம்பலப்படுத்தி, நாட்டுக்கு ஒரு அபாயம் ஏற்படக்கூடுமென்ற கிலேச உணர்வையும் பரப்பும் வகையில் நுட்பமாக இதனை அவர் வகுத்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் குறித்து 11 பக்க கடிதமொன்றை அவர் ரணிலுக்கு அனுப்பிவைத்து இதனை ஆரம்பித்துள்ளார்.

அக் கடிதத்தில் புலிகள் தலைவர் பிரபாகரன் கைச்சாத்திட்ட பின்னர், ரணில் கைச்சாத்திட வவுனியா செல்லும் கடைசித்தருணத்தில்தான் தனக்கே ஒப்பந்தம் காட்டப்பட்டதாகவும், அதனால் அதில் திருத்தங்கள் செய்யக்கூடிய சந்தர்ப்பம் தனக்கு வழங்கப்படவில்லையெனவும் குற்றம்சாட்டி, தனது கட்சியின், லக்ஷ்மன் கதிர்காமரின் தலைமையிலான 20பேர் கொண்ட குழுவொன்று இவ் ஒப்பந்தத்தை ஆராய்ந்ததன் பின் அதில் காணப்பட்ட குறைபாடுகளைத் தான் சுட்டிக்காட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் யுத்த நிறுத்தம், மனிதாபிமான நடவடிக்கைகள், நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் பற்றி அக்கறை காட்டியுள்ளதேயன்றி அரசியல் விடயங்கள் பற்றி எதையும் குறிப்பிடவில்லையென்றும், அரசியல் பேச்சுவார்த்தைக்கான ஒரு திகதி, கால அட்டவணை, அரசியல் பேச்சுவார்த்தைக்கு வருவது குறித்த புலிகளின் உத்தரவாதம் எதுவும் இதில் இல்லையென்றும், அரசியல் தீர்வெதையும் எட்டாமல் கால வரையறையற்று நீடித்துச் செல்லக் கூடிய தன்மை தெரிகிறதென்றும் கூறுகிறார்.

இவ் ஒப்பந்தப்படி கடற்படை புலிகளின் ஆயுதக் கப்பல்களைச் சோதனையிடுவது கேள்விக்கிடமாகியுள்ளதாகவும், இதுகுறித்து எழும் பிணக்குகளுக்கு அன்னியரான நோர்வே கண்காணிப்புக்குழுத் தலைவரே தீர்ப்பளிப்பவராக உள்ளாரென்றும், நாட்டின் பாதுகாப்புக் குறித்த ஒரு பிரதானமான விடயத்தில் நாட்டின் இறைமையை மீறும் விதத்தில் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டுகிறார்.


அதுபோல் இரு தரப்பு நிலைகளுக்குமான எல்லை வகுப்பதிலும் கண்காணிப்புக் குழுத் தலைவரான நோர்வே நாட்டவருக்கே இறுதி அதிகாரமளிக்கப்பட்டிருப்பது திகைப்பளிக்கிறதென்றும், சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வரலாற்றில் அன்னிய அரசாங்கமொன்று இலங்கை மண்ணில் எல்லைகளை வகுக்க அதிகாரமளிக்கப்பட்டிருப்பது இதுவே முதற்தடவையென்பதுடன் அது ஒரு தனி மனிதருக்குப் பொறுப்பளிக்கப்பட்டிருப்பதாகவும், இது அரசியல் யாப்புக்கு முற்றிலும் முரணானதெனவும் கடுமையாக விமர்சிக்கிறார்.

இலங்கையின் இறைமையை மீறிச் செயற்படுமளவுக்கு நோர்வே அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட பொறுப்பு மாற்றப்பட்டுள்ள நிலைமையைத் தான் அறியவில்லையென ஆச்சரியம் தெரிவிக்கிறார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய புலிகளின் கட்டுப்பாட்டுக்குளுள்ள மாவட்டங்களில் ஏன் கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட்வில்லையெனவும், இது அங்கு சித்திரவதை, நிதி வசூலிப்பு, ஆட்கடத்தல், ஹிம்சைக்குள்ளாக்குதல் போன்ற பொதுமக்களுக்கெதிரான செயற்பாடுகளுக்கு எதிராக இக் கண்காணிப்புக் குழு தலையிட முடியாதென அர்த்தமாகிறதாவென வினவுகிறார்.

புலிகள் படிப்படியாக வடக்கு கிழக்கின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அரசியல் வேலைகளுக்காக அனுமதிக்கப்படுகின்ற அதேவேளை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள பொதுமக்கள் வெளியே வரக்கூடிய அடிப்படை மனித உரிமை இவ் ஒப்பந்தத்தில் உத்தரவாதப்படுத்தப் படவில்லையென்றும், அத்தோடு ஏனைய அரசியற் கட்சிகள் போன்றவை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வகைசெய்து கொடுக்கப் படவில்லையெனவும் குற்றம் சாட்டி, இவ்வாறு வகைதொகையற்ற எண்ணிக்கையில் புலிகள் இப் பகுதிகளுக்கு வருவது பாரிய பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்துமெனவும் எச்சரிக்கிறார்.

இத்தகைய குற்றச்சாட்டுக்கள் ரணிலுக்கு அனுப்பப்பட்ட கடிதமாக இருந்தாலும் மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட பகிரங்கக் கடிதமாகவே உண்மையில் அமைந்துள்ளது.



அதேவேளை மறுபுறம் ஜே.வி.பி. இவ் ஒப்பந்தத்துக்கு எதிரான தீவிர பிரசாரத்தில் இறங்கியுள்ளது. இது மக்கள் மத்தியில் ஒரு பீதியையும் இனவாத உணர்வலையையும் தோற்றுவிக்க ஏதுவாகும்.

இன்னொருபுறம் சிஹெல உறுமய இவ் ஒப்பந்தத்தை எதிர்த்து வழக்குத் தாக்குதல் செய்துள்ளது.

இதேவேளை இவ் ஒப்பந்தத்தின் சில ஏற்பாடுகள் குறித்து - குறிப்பாக ஆயுதக்களைவு, பாதுகாப்பு அச்சுறுத்தல் போன்றவை குறித்து இதர ஜனநாயக வழிக்கு வந்த தமிழ் கட்சிகள் சிலவற்றுக்கும் குறைபாடுகள் உள்ளதால் இவ் ஒப்பந்தத்துக்கு அவற்றின் பூரண ஆதரவும் கிடைக்க மாட்டாது.

இந் நிலையில் தோன்றும் ஒரு பதட்ட சூழலில் ஜனாதிபதி தனது அதிகாரங்களை மெல்ல மெல்லப் பிரயோகிக்க விளையலாம்.

இதேவேளை இத்தகைய ஒரு சூழல், ஜனாதிபதி மீதான ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை மேற்கொள்ளும் வாய்ப்பை அரிதாக்கி விடும்.

ஏனெனில் இம் மனநிலை பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து கட்சி தாவுவதற்கு சங்கடமானதாக அமையும்.

மேலும் இந் நிலையில் ஜனாதிபதி தூக்கி வீசப்பட்டால், அது நாட்டைக் காப்பாற்ற விளைந்து ஏற்பட்ட ஒரு ஆபத்தாகவே வெளித்தெரிந்து பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவான சூழலைத் தோற்றுவித்து விடும்.

ஆனால், இந்த அரசியல் நகர்வு எவ்வளவு தூரம் அவருக்கு வெற்றியளிக்கப் போகிறது என்பதுதான் கேள்விக்குரியது.

எது எவ்வாறானாலும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான மற்றொரு சந்தர்ப்பமும் பாழாகிவிடலாம் என்பதே இங்குள்ள ஆபத்து.

இதற்கு வழிவகுக்கப் போவது, ரணிலா, சந்திரிகாவா, புலிகளா, நோர்வேயா, அல்லது இந்த ஒப்பந்தமேதானா என்பது ஆய்வாளர்களுக்குரியது.

நரன்

# சாதாரணன் எழுதுவது.....



லண்டனிலிருந்து முழங்கும் ஆனந்தி அக்காவுக்கு, சாதாரணன் வணக்கம்.

ச்சாய்... சொல்லேக்கையே என்ன ஒரு நடப்பாய்க்கிடக்கு. உலங்குவானூர்தி, கரந்தடிப்படை, குரல் தரவல்ல அதிகாரி... எண்டு பி.பி.சி. தமிழுக்குத் தந்த புதுக்கொடையளோட (ஆனந்தி வணக்கம்) எண்டதையும் சேர்த்துக் கொள்ள வேணும். அது உங்கட பங்களிப்பு.

அக்காவின் அந்த முழக்கத்தைக் கேட்டாலே காணும்...'நடந்துவந்த பாதை தன்னைத் திரும்பிப் பாரடா 'மக்கள் எல்லாம் மக்கள் எல்லாம் பிரபாகரன் பக்கம்...' எண்டெல்லாம் புலிகளின் பாட்டுக்களைக் கேக்கிறபோது வாற புல்லரிப்பைப் போல ஒரு புல்லரிப்பு தேகமெல்லாம் ஊரும்.

எங்கட அவலங்களை குரல் தளதளக்க நீங்கள் எடுத்துச் சொல்லி எங்களையே அழ வைக்கிறதையும், புலிகளின் வீரமான போராட்டத்தை ஆதரிச்சுப் பேசி எங்களைப் புளகாங்கிதப்பட வைக்கிறதையும், புலிகளின் துரோகிகளுக்கு நீங்கள் போடுற போட்டைக் கேட்டு 'அப்படிப் போடு, அக்காவா கொக்கா?' எண்டு எங்களை ஆனந்திக்க வைக்கிறதையும் எழுத ஒரு கடிதம் காணாது.

இப்ப எழுத வேண்டி வந்ததுக்குக் காரணம், அண்டைக்கு ஒம்பதே முக்காலுக்கு லெக்சரர் க. வோட நிண்டு பி.பி.சி. கேக்க வந்தது தான்.

'ஆனந்தி வணக்கம்' எண்டு நீங்கள் அறுத்துறுத்துத் தொடங்கேக்கையே தன்ர நொண்ணையை ஆரம்பிச்சிட்டுது அந்தாள்.

இலக்கணம் பிழையாம். 'ஆனந்தியின் வணக்கம்' எண்டோ 'ஆனந்தி தெரிவிக்கும் வணக்கம்' எண்டோதான் சொல்லவேணுமாம். அதென்னது மொட்டையாய் ஒரு கெப்பர் வணக்கம்? எண்டு நொட்டை சொல்லுது மனுசன்.

ஸ்ரைல் விழங்காமல் இலக்கணம் விட்டுக்கொண்டு நிக்கிறாக்களோடை என்னத்தைக் கதைக்கிறது.

இவர் மாதிரி ஆக்களுக்குத் தங்களைவிட வேற யாரும் பெரிசா மதிக்கப்படுறது பிடிக்கிறேல்லை. அது தான் நொட்டையும், நொண்ணையும்!

பி.பி.சி. யில நீங்கள் அழுதழுது யாழ்ப்பாணத்து மக்கள் படுற கஸ்டங்களைத் தொடர் சித்திரமாய்த் தந்தனீங்களெல்லோ?

குப்பி லாம்பில படிக்கிறதும், குண்டுவிழ பங்கருக்குள்ள ஓடுறதும், சூட்டடுப்பில சமைக்கிறதும், சுகவீனம் வந்தால் மருந்தில்லாமல் மாயுறதும் எண்டு எங்கட கஸ்டங்களை எத்தினைமுறை திருப்பித் திருப்பிச் சொல்லியிருப்பீங்கள்... பாசமலர் சிவாஜி மாதிரி உருகி உள்ளம் விம்ம நீங்கள் சொல்லிக்கொண்டு வரேக்கையே 'அக்கா' எண்டு எங்களைக் கதறியழ வைச்சுப் போடுவியள்.

இந்த மனுசன் சொல்லுது. அதெல்லாம் பேர் வாங்கிற நடிப்பாம்!

ச்சீ... இந்தாளும் ஒரு மனுசனோ? எண்டு மகா எரிச்சல் தான் வந்தது எனக்கு. சொந்த இனம் படுற துன்பத்துக்குத் துடிச்சு, அதையே அந்த இனத்தைச் சேர்ந்த எல்லோரும் விம்மி வெடிக்கும் விதமா, ரோசத்தோட பொங்கியெழும் விதமா உங்கள் உதிரப் பதறலை நீங்கள் வெளிப்படுத்திறதில என்ன நடிப்பைக் கண்டுது இந்த மனுசன்?

கேட்டால், மக்களின்ர கஸ்டத்தை மாத்தோணும் எண்டு உண்மையா நினைக்கிற ஒருத்தர் உப்பிடி மக்களை உணர்ச்சிவசப்பட வைக்கமாட்டார். நோய்நாடி நோய்முதல் நாடி மக்களுக்கு என்ன வேணுமெண்டதைச் சரியாய் சிந்திக்கச் செய்திகளைத் தருவார் எண்டு பொடியளுக்குப் பாடம் நடத்திற மாதிரித் தொடங்குறார்.

எங்கட சனம், எங்கட கஸ்டம் எண்டு எடுத்துச் சொன்னாலும் உணர்ச்சியே இல்லாததுகளிட்ட என்ன புத்திமதி வேண்டிக்கிடக்கு?

'எங்கட மக்களின்ர கஸ்டத்தைப் பாத்துக் கண்ணீர் உகுக்கிற ஆக்கள்ர குரல் ஒண்டுதான் எங்களுக்கு ஆமான ஆறுதல். அதையும் கொச்சைப்படுத்திக் கதைக்கிறதெண்டால் மரியாதையாய்ச் சொல்லுறன் சேர் இடத்தைக் காலி பண்ணுங்கோ' எண்டன் அவற்றை பாணியங்களைத் தாங்கேலாமல்.

'பொறும். அவவுக்கு, நாவல் மரத்திலை ஏறி பாவாடைக்குள்ள நாவல் பழங்களைக் கட்டிக்கொண்டு இறங்கிறதுக்குச் சமாதானம் வேணுமெண்டிறா. எங்களுக்கும் அப்பிடியோ? பிள்ளையள் ரண்டையும் இந்தியாவில படிப்பிச்சு, பிறகு குடும்பமாய் லண்டனில செட்டிலாகி, அங்கையிருந்து இந்தியாவுக்கும் கொழும்புக்குமாய் பி.பி.சி. காசில வந்து போய்க்கொண்டு, வளவு மூலையிலே நிண்ட விலாட்டு மாவில காய்புடுங்கி உப்பும் தூளும் தொட்டுத்தின்னுற காலம் திரும்பி வாறதுக்குச் சமாதானம் வேணுமெண்டு ஏங்கினால் சரியோ?

அவையின்ரை பிள்ளைகள் லண்டனில காரோடிக் கொண்டுபோய்ச் செத்தா அழுது துடிக்கிறவையள், இஞ்சத்தைப் பிள்ளையள் செத்துக்கொண்டிருக்கிற 'சீரியஸ்னெஸை'யும் விளங்கவெல்லோ வேணும். 'வெள்ளையா விடாதை' எண்டு ஏதோ உடும்பு புடிக்கிற நாய்க்கு உசாரேத்தி விடுமாப்போல, சனம் சாகச் சாக, உருக்கத்தைக் கூடப் பிழிஞ்சு மிச்சமிருக்கிற சனத்துக்கும் உருவேத்தி விடுறது தானே இவையின்ர வேலை. லண்டனில நிண்டு கொண்டு இவை தமிழ் வீரத்தைப் பாராட்டுவினம். இஞ்ச நாங்கள் செத்துச் சுண்ணாம்பாகிக் கொண்டிருப்பம். அதுவும் அவைக்கு, தமிழ் மக்களின்ர பிரச்சனையளை தமிழ் மக்களுக்கே எடுத்துச் சொல்லிப் பேரெடுக்கிற உத்தியோகமாகிப் போகும்..."

இனப் பற்றோ, தமிழுணர்வோ இல்லாமல் இப்பிடி அலம்பல் கதை கதைச்சிக்கொண்டு போறதை எனக்குச் சகிக்கேலாமல் போச்சு.

காய்வெட்டுவம் எண்டு பாத்தால், அதுக்குள்ள இன்னும் கீழ இறங்கிச் சில விசயங்களையும் சொல்லிப் போட்டுத் தான் போகுது மனுசன்.

அதெல்லாத்தையும் எப்பிடி நான் உங்களுக்கு எழுதுவன் அக்கா? படிச்சவையில எனக்கு மரியாதையே இல்லாமல் போகும்படியான கிலிச கெட்ட கதையள் அவை. கம்பஸிலயும் இவை கூடிப் பத்திரிகைக்காரர் மாதிரித்தான் ஊத்தைக் 'கொசிப்' படிக்கினம் எண்டு நினைக்க எனக்குச் 'சீ' எண்டு போச்சு.

ஆனாலும், அதுகளைச் சாடைமாடையாய் எண்டாலும் உங்களுக்குத் தெரியப்படுத்தோணும் எண்டு தான் கை கூசக்கூச சிலதை எழுதுறன். நீங்கள் இவைக்கு என்ன செய்யோணும் எண்டதைக் கடைசியாய் சொல்லுறன்.

நீங்கள் சாவகச்சேரி டிறிபேக்கில படிக்கேக்கையே அவருக்கு உங்களைத் தெரியுமாம். ஏன் அதுக்கு முந்தி கச்சாய் றோட்டில சக்தி அம்மன் பள்ளிக்கூடத்தில ஆரம்பப் படிப்புப் படிக்கேக்கையே தெரியுமெண்டு சொன்னவர்.

டிறிபேக் கொலிஜ் கூத்தெண்டு கனக்கச் சொன்னது மனுசன். அதுகள் இந்தக் கடிதத்தில வேண்டாம். வேறை ஒரு உபகதை சொன்னவர். அதைச் சொல்லுறன்.

மகேஸ் அக்காவோட கோவிச்சுக்கொண்டு மணியத்தார் சன்னதிக் கோயில்ல போய் இருந்திட்டாராம். பிறகு லொறி ஓடுற குட்டியர் தன்ரை மனுசியை விட்டிட்டு மகேஸ் அக்காவைக் கட்டினவராம்.

கண்டிக்க ஆளில்லாப் பிள்ளை. ஊரில விலாசமாய்த் திரிஞ்சதாம். நாவலப்பிட்டியில லவ் பண்ணிக்கட்டினதாம். கிருலப்பனையில வீடுவாங்கியிருந்து, பாங்கில வேலை செய்து, பிறகு வெளிநாட்டுக்குப் போகேக்க பிள்ளையள் ரெண்டையும் அந்தநாள் காதல் மன்னன் ஜெமினி கணேசன் (நடிகரே தான்) வீட்டில படிக்க விட்டிட்டுப் போனதாம். பிறகு....

வேண்டாம் அக்கா. அந்தக் கதை வேண்டாம். உங்கட கதைக்கு வருவம்.

வெளியாக்கள் ஆரும் சந்திக்கேலாமல் இருந்த பிரபாகரனை அவர் காம்புக்குள்ளயே போய் சந்திச்ச முதல் பத்திரிகையாளர் நீங்கள். பிறகு உங்கட தயவிலதான் தராக்கி சிவராமுக்கும் 'கிளியரன்ஸ்' கிடைச்சது.

அண்டைக்கு உங்களுக்குப் பிடிச்ச-முருங்கைக்காய்க்குள்ள றாலும், பிலாக்கொட்டையும் போட்டுக் காய்ச்சி அதுகள் வைச்ச சாப்பாட்டைச் சாப்பிடுறதுக்கிடையில மத்தியானமே பஜிரோ வந்து ஏத்திக்கொண்டு தம்பு தோட்டத்துக்குத் தலைவரிட்டை அழைச்சுக்கொண்டு போட்டினம்.

தலைவரோட கதைச்சு வந்த பிறகு தான் நீங்கள் என்ர மதிப்பில மிக உயரத்துக்குப் போட்டியள். இண்டைக்கும் தலைவரோட நீங்கள் பேசிக்கொண்டிருக்கும் அந்தப் போட்டோவைப் பாக்கப் பதினாறு கண் வேணும். என்ன ஒரு பாந்தம்! என்ன ஒரு பெருமிதம்!

எங்கட லெக்சரர் க. வுக்கு என்ன செய்யவேணுமெண்டு கடைசியாய்ச் சொல்லுறன் எண்டெல்லோ சொன்னனான்.

பி.பி.சி. யில இருந்து ரெலிபோனில அக்கா அவரை ஒருக்கா நீங்கள் பேட்டி எடுக்க வேணும். அவ்வளவு தான்!

புலியளின்ர துரோகப்பட்டியலில இருக்கிற தமிழ்க் கட்சித் தலைவர்மாரை நீங்கள் போனிலேயே வெருட்டி உருட்டி குறுக்கு விசாரணை செய்யிற மாதிரி இந்தாளையும் ஒருக்காச் செய்ய வேணும். நீங்கள் உறுக்கிற உறுக்கில இந்தாள் கொட்டமெல்லாம் அடங்கி அப்பிடியே வெலவெலத்துப் போய் பேச்சுவராமல் நிக்கிறதை நான் கேட்டு ரசிக்க வேணும்.

எனக்கு அந்தாளின்ர கதையளுக்குப் பதில் சொல்லேலாமல் கிடக்கு. நீங்கள் தான் சரியான ஆள். போனிலேயே தமிழினத்தின் ஒட்டுமொத்த அதிகாரக்குரலில நீங்கள் ஒரு வெருட்டுவிட்டியளெண்டால் தான் லெக்சரர் அடங்குவார்.

எனக்கும் பல கடிதங்களுக்குத் தேவையில்லாமல் போகும். நிம்மதியாய் பி.பி.சி. கேட்டு, பேப்பர்களைப் பாத்து, எந்தவித மறுத்தான் கருத்துக்களாலும் குழப்பப்படாமல் எங்கள் எல்லோர்க்கும் ஒரே கதியான தமிழ்ப் பெரும் எழுச்சியில கலந்திருப்பேன்.

அக்கா ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு....

அன்புடன்,
சாதாரணன்.

# சமாதான சமிக்ஞைகளுக்குப் பின் கீழ் வானில்...

-கிழக்கான்-

மட்டக்களப்பு ரவுணுக்குள்ள இருக்கிற ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கங்களின்ர அலுவலகங்களில விடிய விடிய கிடந்து திண்டு குடிச்சி கும்மாளமடிச்ச பலர் இப்ப அங்காலப்பக்கம் எட்டிக் கூடப் பார்க்காமல் வேற பக்கமாகத் தலையைத் திருப்பிக் கொண்டு போறத தான் காண முடிகிறது.

புலிப்பொடியன்மாருக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான சண்ட சச்சரவுக்கு முடிவு கட்ட நிரந்தர யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் சனங்களிட்ட ஒரு நம்பிக்கை புறந்திருக்கு. படுவான்கரைப் பக்கமிருந்தும் நிறையப்பேர் பயமில்லாமல் ரவுண் பக்கம் வந்து போறாங்க. அதேமாதிரி இங்கால இருக்கிற நிறையப் பேரும் பல விசயங்களுக்காக அங்காலப் பக்கம் போய் பொடியன்மார கண்டு கதச்சிப்போட்டு போறாங்க. இதெல்லாம் இப்ப சர்வசாதாரணம்.

ஆனால், என்னவென்றால் இதுக்கு முதல் சனங்கள் தானும் தன்ரபாடும் என்று இருக்கக்குள்ள ஏனைய இயக்கங்களின் அலு வலகங்களுக்குள்ள கிடந்து திண்டு குடிச்சி உறவு கொண்டாடி வேலை வாய்ப்புக்கள் அது, இதுக்கெண்டு சொந்த பந்தங்களை கூட்டி வந்து முன்னுரிமை கேட்ட படிச்ச கிறவுட் என்று சொல்லுற கூட்டத்த நினக்கக்குள்ள தான் அவஸ்தையா கிடக்குது மனசுக்குள்ள.

பொடியன்மாருக்கும் புதிய ஆட்சில வந்திருக்கிறவங்களுக்குமிடையில யுத்த நிறுத்தம் வந்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்போகுதெண்டு சொல்ற இந்தக் கூட்டம் திடீரென்று எப்படி மாறிப்போயிற்று. பாத்தியளே இதப்போய் எப்பிடி பெரிய விசயம் எண்டு சொல்றது தமிழனுக்கே எரிய வீர குணாம்சங்களில் இதுவும் ஒன்று எண்டு சொல்லி தலையைச் சொறிஞ்சி கொள்ள வேண்டியது தான்.

இதவிட இங்க இருந்து இவ்வளவு காலமும் செயற்பட்ட ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ இயக்கப் பொடியன்மாருட பொறுப்பாளர்கள கூப்பிட்டு ஆமிக்காரர் உங்களிட்ட இருக்கிற ஆயுதத்தை தந்த விபரத்தத் தாருங்கோ என்று கேட்டிருக்கினம்.

ஆயுதங்கள ஒப்படைக்கிறதில எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்ல. ஆனால், எங்கடை ளாட இருக்கிற பொடியன்மாரிட பாதுகாப்புக்கு என்ன செய்யப்போறியள் என்று இவங்க திரும்பிக் கேட்ட போது அதப்பற்றி இப்ப எங்களால ஒண்டும் சொல்ல ஏலாது. இது மேலிடத்து உத்தரவு எண்டு மட்டும் சொல்லியிருக்காங்களாம்.

முந்தியும் இயக்க மோதல்களால் நிறையப் புள்ளயள பலி கொடுத்த ஊரல்லவா இது. இனிவரும் காலங்களிலையாவது அப்படியெதுவும் ஆருக்கும் நடந்திரக் கூடாது. தான்தோன்றீஸ்வரப் பெருமாளே எண்டு உண்மையான நோக்கம் கொண்ட பலர் முணுமுணுக்கிறதையும் கேட்கக்கூடியதாக இருக்கு.

இதேநேரம் படுவான்கரைப் பக்கமிருந்து பொடியன்மார் ஊருக்குள்ள சுதந்திரமாக வந்து போறாங்க. பட்டிருப்பு பாலத்தடியில நிக்கிற அதிரடிப்படைக்காரர்களும், வாகரை மாங்கேணி சோதனைச் சாவடியில் நிக்கிற ஆமிக்காரர்களும் தான் கொஞ்சம் அப்பிடியிப்பிடி கடுமையாக நிக்கிறாங்க. மற்றும்படி எந்த இடத்திலையும் கெடுபிடி ஒண்டையும் பெரிதாகக் காணல்ல.


இதை விடக் கொழும்பில எங்க பார்த்தாலும் ஒகோ என்று ஓடுற துண்டுதுணியில்லாமல், அதை இதையெல்லாம் அப்பிடியே காட்டுற தமிழ்ப்படங்களை திரையிடக் கூடாதெண்டு உத்தரவு போட்டிருக்குதாம். ஆனாலும், பொடியன் பொட்டையளால நிரம்ப திரையரங்குகள் ஒகோ என்று பழையபடி உழைக்கத் தொடங்கி விட்டன.

இதில என்னடா விசயம் என்றால் நம்மட எம்.பி. ஐயா ஒருவர் திரையரங்கிலயும் துண்டு துணியில்லாத இந்தப் படங்களை ஒகோ எண்டு ஓடினது தான் வெளியே தெரியாத விசயம். உழைக்க வேணுமெண்டால் இதையெல்லாம் கண்டு கொண்ணக் கூடாது என்கிறாங்க.

இதைவிட என்னடா இன்னுமோரு விசயம் இருக்குதெண்டும் சொல்றாங்க. வவுனியாவில நடந்த பொங்கு தமிழுக்கு நம்மட மூண்டு எம்.பி. ஐயாமாருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாம். ஆனால், ஜோசப் அண்ணா மட்டும் கலந்து கொள்ளவில்லையாம். கேட்டால் அதவிட முக்கிய சந்திப்பொன்று இருக்குது எண்டு ஏற்பாட்டாளர்களுக்கு சொல்லியிருந்தாராம். அப்பிடியெதுவும் இருந்ததாக ஆருக்கும் தெரியல்ல எண்டு சொல்றாங்க.

முந்திய விட கொழும்புக்கு இப்ப நிறைய பஸ்கள் ஓடிப்போகுது. நிறையப் பேர் போறதும் வாறதுமாக இருக்கிறாங்க. பம்பலப்பிட்டி பாஸ்போட் ஒப்பீஸ் பக்கமும் ஏஜென்சிகள்ர இடமும் தேடி பலபேர் புள்ளையளோட போய் வாறதாக கொழும்புக்குப் போய்வாறவங்க சொல்றாங்க. எனக்கெண்டா ஒரு இளவும் விளங்கல்ல பாருங்க.

# 9வது ஆண்டு நினைவஞ்சலி



திருகோணமலை, கன்னியாய் 6ம் கட்டையைச் சேர்ந்த

## சின்னையா கந்தசாமி அவர்கள்

| மலர்வு: | உதிர்வு: | திதி: |
|---|---|---|
| 03. 04. 1930 | 20. 02. 1993 | 12. 03. 2002 |

ஈழத் திருநாட்டின் எழில் பூத்த திருமலையில்
சூழும் இயற்கை வளம் செறிந்த நிலமதனின்
வெந்நீரூற்றுக்கள் விரைந்து வெளியேறும்
கன்னியாய் எனும் பதியில் கண்ணியமாய் வாழ்ந்து வந்த
சின்னையா நடராசா சீரெல்லாம் பெற்று
சிறப்புடன் வாழ்ந்து வந்தாய்!
பிறப்பிலுயர் இரத்தினம் எனும் மங்கையினை
மணம்முடித்து மக்கள் பல பெற்று
மாண்ப டனே பொருளீட்டி மனை சிறக்க
தரும நெறி வழுவாது வாழ்வாங்கு வாழ்ந்து நலம்
பெருக நல்ல வழி நடந்தாய் நீ...!
அறுபதுடன் மூன்று அகவை தனைக் கடந்து
அமர வாழ்வைத் தேடி அகமகிழ்ந்து ஏகினையோ?
என்றென்றும் உன் நாமம் நிலைநின்று வாழியவே!
பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

தகவல்: சந்திரன், வினோத்-லண்டன்.


**Vella Maxi Credit**

சுவிஸில் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய இலகுவான கடன் வசதிகளை விரைவாக செய்து கொடுக்கின்றோம்

- 100,000 SFR வரை கடன் வழங்கப்படும்
- 10,000 SFRற்கு வருட வட்டி 525 SFR
- ஒரு மாதத்திற்கான கட்டுப் பணம் 877 SFR
- வட்டி வீதம் 9.99%
- ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கும் வழங்கப்படும்
- B/C காட் உள்ளவர்களுக்கு மட்டும்

மேலதிக தொடர்புகளுக்கு
**கந்தராஜா பிரபு**


**Vella Credit**

Spltalgasse 16 (4ம் மாடி)
3011 Bern
Tel: 031/3122426 Fax: 031/3119351
Natel: 079/7139509



**மலையாள மாந்திரீகம்**





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெறவேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெறவேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
T.P: 00941 342463 , 00941 470615, **தேவைகளுக்கு:-**

**39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N)JP**

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NI. JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.


**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

**உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்**
01-342463, 431137,470615- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.


## 2வது, 3வது பிறந்தநாள் வாழ்த்து



திரு. திருமதி தேவன் -ரஞ்னி தம்பதியரின் செல்வப் புதல்வி சரண்யா தனது இரண்டாவது பிறந்த தினத்தையும், செல்வன் புதல்வன் சன்ஜய் தனது மூன்றாவது பிறந்த தினத்தையும் 12.03.2002 அன்று கனடாவில் உள்ள தமது தாத்தா இல்லத்தில் வெகு விமரிசையாகக்

**சரண்யா அன்ரனிற்றோ 12.03.2000**
**சன்ஜய் அன்ரனிற்றோ 16.02.1999**

கொண்டாடுகிறார்கள். இவர்களை அன்பு அப்பா, ஆசை அம்மா, அப்பப்பா.அப்பம்மா,தாத்தா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், அன்ரிமார், ஆசை மாமா, அன்பு மாமி, அக்காமார், அண்ணன்மார், தங்கச்சி மற்றும் பூட்டன், பூட்டி, உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்கலையும் கற்றுச் சீரும் சிறப்புமாக பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: அப்பா, அவுஸ்திரேலியா.

# காத்திரமடையும் யுத்தநிறுத்தம்!

**அலசுவது-இராஜதந்திரி**

**த** தமிழீழவிடுதலைப் புலிகள் அமைப்புக்கும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்க அரசுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து, இரு தரப்புக்குமிடையே நிலவும் யுத்த நிறுத்தத்தைப்பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நோர்வேயின் முன்னாள் இராணுவத்தளபதி ரொன்ட் புரோவ்டே தலைமையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுக்கள் இயங்கவுள்ளன. வடக்கு-கிழக்கு மாகாணங்களின் ஆறு மாவட்டங்களிலும் ஐவரடங்கிய கண்காணிப்புக்குழுக்கள் செயற்படவுள்ளன. இக்குழுக்களில் ஸ்கன்டிநேவிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இடம்பெறுவர்.

கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கையின் ஆயுதப்படைகளுக்கு மிடையே ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்தங்கள் குறுகிய காலமே அமுலில் இருந்தன. முன்னைய யுத்த நிறுத்தங்களைக் கண்காணித்து அமுலாக்கும் விதத்தில் பலம்வாய்ந்த கண்காணிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

ஆனால் இத்தடவை அரச படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்கும் விடயத்தில் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான அனுசரணையாளராக மட்டுமல்லாது, யுத்த நிறுத்தத்தைக்கண்காணிக்கும் தலைமைப் பெறுப்பையும் நோர்வே ஏற்றுள்ளது.

நோர்வே எண்ணெய் வளத்தின் மூலம் கடந்த சுமார் முப்பது வருட காலத்திலேயே செல்வந்த நாடாக உருமாறியது. எண்ணெய் வளம் நோர்வேயில் கண்டு பிடிக்கப்படுமுன்னர் கடல் வளத்தையே அந்த நாடு பெரிதும் நம்பியிருந்தது.

தற்போது செல்வச் செழிப்புடனிருக்கும் நோர்வே, தனது தேவைக்கேற்றாற் போலவே இராணுவ பலத்தைக் கொண்டிருக்கிறதே தவிர, ஏனைய வல்லரசுகளைப் போல எப்போதுமே யுத்த சன்னதம் கொண்ட போக்கு அதனிடம் காணப்படவில்லை.

நோர்வேயின் சர்வதேச ரீதியிலான தொடர்புகள் பெரிதும் அபிவிருத்தி, மற்றும் அமைதிப்பணி சார்ந்தவையாகவே இருக்கின்றன. மூன்றாம் உலக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு பல்வேறு விதத்திலுமான உதவித் திட்டங்களுக்கென நோர்வே கோடிக்கணக்கான பணத்தை ஆண்டுதோறும் வழங்கி வருகின்றது.

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் நோர்வே ஆர்வங்காட்ட ஆரம்பித்தபோது இலங்கையின் இனவாத சக்திகள், தமது எதிர்ப்பை வெளியிட்டன. இருப்பினும் நோர்வே தனது பணியிலிருந்தும் பின்வாங்காது புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்கும், பிரதமர் ரணில் அரசாங்கத்துக்குமிடையே ஏற்படுத்துவது வரை தனது சமரச முயற்சிகளில் முன்னேற்றங்கண்டுள்ளது.

இருந்தபோதிலும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கெதிராகவும் உயர் நீதிமன்றத்தில் சிஹல உறுமயக் கட்சி வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இதுதவிர ஜே.வி.பி என்ற மக்கள் விடுதலை முன்னணி யுத்த நிறுத்தம் தேவையற்றது என்ற ரீதியில் பிரசாரங்களையும் மேற்கொண்டு வருகின்றது.

வடக்கு-கிழக்கு யுத்தம் சூடேறி, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எவ்வித தொடர்புகளுமே ஏற்படாதிருந்த கால கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதன்மூலமே இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றை எட்ட முடியும் என்பதை தென்னிலங்கையின் அனைத்து அரசியல் சக்திகளுமே ஏற்றுக் கொண்டிருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு அரசியல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முன்வர வேண்டுமென ஜே.வி.பி உட்பட அனைத்துக் கட்சிகளுமே கோரிக்கை விடுத்திருந்தன.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் தற்போது யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு அரசியல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது குறித்துப் பரிசீலிக்க ஆரம்பித்துள்ள தருணத்தில் ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற கட்சிகள் போடும் 'காட்டுக் கூச்சல்' விஷமத்தனமானதாகவே இருக்கின்றது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் ஆயுதப்படைகளுக்கு மிடையே யுத்த நிறுத்தம் அமுலிலிருந்து வருகின்றது கடந்த மாதம் பிரதமர் ரணில் விக்கிர மசிங்கவுக்கும், எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே.பிரபாகர னுக்குமிடையே கொண்டுவரப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து நிரந்தர யுத்த நிறுத்தத்துக்கும் அடித்தளமிடப்பட்டுள்ளது.

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு-கிழக்கைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் சிலரை அலரிமாளிகையில் சந்தித்திருந்தார். அச்சமயம் "பேச்சுவார்த்தைகளில் இடையூறுகள் தோன்றினாலும்கூட, யுத்த நிறுத்தம் எவ்விதத்திலும் முறிவடையக்கூடாது" என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த இக்கருத்தை அலசிப்பார்ப்பது அவசியம்.

வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் விரிவடைந்து அப்பிரதேசத்தில் கொடிய யுத்தம் மூண்டமைக்கு முன்பிருந்த ஐக்கிய தேசியக் கட்சியே மூலகாரணமாகவிருந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரசியல் பாடம் புகட்டியவரும், இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகவுமிருந்த ஜே. ஆர். ஜயவர்த்தன தனது ஆட்சிக்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவரீதியாக முறியடிப்பதில் தீவிரமாகவே இருந்தார்.



போர் நிறுத்த அவதானிப்பளர்கள் பிரதமருடன்

ஜே. ஆர். ஜயவர்த்தன ஒருதடவை கருத்து வெளியிடுகையில், "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" எனக் கூறியிருந்தார்.

ஆனால் இன்றைய பிரதமர் ரணில் விக்கரமசிங்கவின் நிலைப்பாடு வித்தியாசமானதாகவே இருக்கின்றது. சமாதான முயற்சிகளில் தடங்கல்கள் ஏற்பட்டால் கூட யுத்த நிறுத்தம் முறிவடையக் கூடாது என்பதே பிரதமர் ரணிலின் விருப்பமாக இருக்கின்றது.

கடந்த காலங்களில் எல்.ரி.ரி.ஈ அமைப்புக்கும் அரச தரப்புக்குமிடையிலான யுத்த நிறுத்தங்கள் முறிவடைந்தபோது ஆயுதப் படையினர் கடுமையாகவே எல்.ரி.ரி.ஈ யினருடன் மோதினர். கடந்த இருதசாப்த காலமாக வடக்கு-கிழக்கு யுத்தம் எத்தரப்புக்கும் வெற்றியைத் தராமல் மிக மூர்க்கமானமுறையில் இடம்பெற்றிருந்தது.

தனிமனித உயிர், உடமைகள் மட்டுமல்ல; அரசின் சொத்துக்களுக்கும் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டு முழு நாடுமே 'அதள பாதாளத்'துக்குத் தள்ளப்பட்ட ஒரு நிலையே காணப்பட்டது.

எதிர்காலத்தில் மீளவும் எல்.ரி.ரி.ஈ அமைப்புக்கும், அரச தரப்புக்குமிடையே யுத்தம் மூளுமேயானால் மிகவும் மோசமான நிலைக்கே நாடு தள்ளப்பட்டுவிடும்.

இந்நிலையில் 'யுத்த அரக்கனுக்கு' கால்கட்டுப் போட்ட ஒரு நடவடிக்கையாகவே புரிந்துணர்வு ஒப்பந்தம் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

யுத்த நிறுத்தமென்னும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை முழுமையாகக் களைத்துவிட்டார்களென்றோ அல்லது தமது போராட்டத்தைக் கைவிட்டுவிட்டார்களென்றோ கருதிவிடமுடியாது.

சமரசப் பேச்சுக்களை எதிர்பார்த்து தமது ஆயுதப் போராட்டத்துக்கு எல்.ரி.ரி.ஈ.யினர் ஒய்வு கொடுத்துள்ளனர் எனக் குறிப்பிடுவதே சரியானதாகும்.

எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே.பிரபாகர னுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் மேலும் பலமடையும் பட்சத்திலேயே சமரசப் பேச்சுக்களும் தகுந்த புரிந்துணர்வோடு இடம்பெறுமென்பதை எதிர்பார்க்க முடியும்.

தென்னிலங்கையில் ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற அரசியல் கட்சிகள் ரணில் -பிரபா ஒப்பந்தத்தை எதிர்க்க ஆரம்பித்துள்ள அதேசமயம், ஜனாதிபதி சந்திரிகாவும் அந்த ஒப்பந்தத்தை முழுமனதுடன் ஏற்காமலிருப்பதையே அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் மூலம் அவதானிக்க முடிகிறது.

நாடளாவிய ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பிரதமர் ரணில் விக்கரமசிங்கவுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது.

கடந்த வாரம் கொழும்பில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் வர்த்தகப் பிரமுகர்கள் கலந்து கொண்டிருந்த விருந்துபசார மொன்றில் பிரதமர் ரணிலுக்கும், எல்.ரி.ரி.ஈ. தலைவர் பிரபாகரனுக்கும் ஏக காலத்தில் வாழ்த்துக்கூறப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் எனக் குறிப்பிடப்பட்ட நிலைமாறி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே.பிரபாகரனும் இருவேறு இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் என்ற ரீதியில் தற்போது நோக்கப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் 'பொங்குதமிழ்' நிகழ்வுகள் என்ற ரீதியில் விரிவான அரசியல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை காலமும் வடக்கு-கிழக்கில் யுத்தச் சூழலே நிலவியிருந்த நிலையில் அப்பிரதேசத்தில் தமிழ் மக்களது அரசியல் நிலைப்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்திலேயே 'பொங்கு தமிழ்' நிகழ்வுகள் அமைந்துள்ளதைக்காண முடிகிறது.

எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் பட்சத்தில் வடக்கு-கிழக்கில் அனைத்து மட்டங்களிலும் தமது தரப்புக்கு விரிவான ஆதரவைத் திரட்டும் விதத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் 'பொங்குதமிழ்' வைபவங்களை நடத்தி வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் சமரச நடவடிக்கைகள் குறித்துப் புதிதாகத் தோற்றம் பெற்று வருகின்ற நல்லெண்ணச் சூழலைக் களங்கப்படுத்தாமல் பாதுகாப்பதே இன்றியமையாததாகின்றது.

இது விடயத்தில் பிரதமர் ரணிலை விட ஜனாதிபதி சந்திரிகாவே கூடுதல் பங்களிக்கவேண்டியவராகின்றார். ஏனெனில் நிறைவேற்று அதிகாரம் என்பது அவரிடத்திலேயே இருக்கின்றது.

எனவே இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் அந்த அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படாமல் இருக்கவேண்டியதையே ஜனாதிபதி உறுதி செய்ய வேண்டியவராகிறார்.

---



## அதிரடி அய்யாத்துரை

***கரு =கருமை,*** *கருமை= இருள், இருள்= மின்வெட்டு...! என்னே பெயர்ப் பொருத்தம் பார்த்தியளோ. நூறு நாளில இருளை அடியோட விலக்கு வன் இல்லாட்டில் தானே விலகிடுவனெண்டவர் இப்ப ஆட்சி தொடங்கி மூண்டுமாசத் தில ஐஞ்சு மணிநேர மின்வெட்டை அறிமுகப்படுத்தியிருக் கிறார். இங்க வேடிக்கை என்னெண்டால் மின் வெட்டுச் செய்யக்கூடாதெண்டு தனக்குப் பொறுப்பில்லையெண்டமாதிரி மற்றப்பக்கத்தில நல் உபதேசம் செய்யிறார் பிரதமர். கரு என்ன கரண்ட வைச்சுக்கொண்டா கஞ்சல்தனம் செய்கிறார்? கருவைக் கருவறுக்கத்தான் கரண்ட்டக் கையில குடுத்ததா அம்மையார் வேற கிண்டிவிட்டிருக்கிறா. பொலிட்டிக்ஸ் எங்கெங்கயோ குரொஸ் கனக்ஷெனெடுக்குது. அதுக்கு நம்ம கரண்டா கட்டாகிறது?*

***மீன்பாடும் தேன்நாட்டில*** *ஒரு பொங்குதமிழ்ப் பெருவிழா வெற்றிகரமா நடந்து முடிஞ்சது எல்லாருக்கும் தெரியும். அதில என்ன விஷேஷமெண்டால் ஏசிக்க ருசிகண்ட அமைச்சர்மார்கூட வேகாத வெய்யிலுக்க சாதாரண சனத்தோட சரிசமனா நிண்டதுதான். பாடசாலைப் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டுவந்து வெய்யில்ல விட்டுட்டு தாங்கள் நிழலில ஒதுங்கப்போன டீச்சர்மாரைப்பார்த்து ஒரு தம்பி சொன்னாராம். "இது பொதுநிகழ்ச்சி, இங்க ஆசிரியர் மாணாவரெண்ட வேறுபாடில்ல. எல்லாருக்கும் ஒரே சட்டம்தான்." அடுத்த கணம் அவையும் ஓடியந்து வெய்யிலுக்கு நிண்டிட்டினமாம். "சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"யெண்டு பாரதி பாடினது இப்ப இப்பதான் பிரக்டிஸில வர ட்ரைபண்ணுது. ட்ரை ட்ரை, சொகுசாயிருந்தால் சுதந்திரம் வருமோ?*

***வீடமைப்பு அமைச்சு*** *கிட்டடியில வீட்டுக்கு விண்ணப்பிக்கச்சொல்லி ஒரு விண்ணப்பப்படிவம் வெளியிட்டதெல்லே. வீடு வழங்கிறது தொண்டுதான். ஆனால் தமிழ் அமைச்சர் ஒருவர், அதுவும் பொங்கு தமிழில பங்கு பற்றின அமைச்சர் பொறுப்பாயிருக்கேக்க அந்த விண்ணப்பப் படிவத்தில தமிழே இல்லாமல் போனதுதான் வேதனையாயிருக்கு. தமிழுக்குச் சம அந்தஸ்தெண்டு அரசியல் சட்டம் சொல்ல, அதை அமுலாக்கிறதுக்கெண்டு ஒரு அமைச்சையே உருவாக்கியிருக்க இப்பிடித் தமிழ் அமைச்சரொருவற்ற அமைச்சே தமிழைக்கோட்டை விட்டால் யாரிட்டச் சொல்லி அழுகிறது?*

***இந்தியாவின்*** *கைக்கூலியெண்டு சொல்லித் துரோகப் பட்டம் சூட்டப்பட்டவருக்கே கூட்டுக்குள்ள இப்ப இந்தியாவைக் கையாளிற பொறுப்பக் குடுத்திருக்காம் பெரிய இடம். இது பரிகாரமா, இல்லை பரிகாசமா இல்லை பரிதாபமா எண்டு தெரியேல்லை. ஆனால் நம்மாள் நல்லா மாட்டிக்கொண்டார். முந்தி அண்டிவைச்ச சமாசாரங்களுக்கெல்லாம் இப்ப றிவேர்சில கதை சொல்லவேண்டி வரக்க முகத்தை எங்க கொண்டுபோய் வைக்கப்போறாரோ தெரியேல்லை! முகமா? இரவல் ஒளியில புகழ் தேடிற 'சந்திரனுக்கு' எங்க சொந்த முகமிருந்திருக்கு??*

அண்டை மண்டலத்திலிருந்து

# காந்தி பிறந்த மண் கசாப்புக் கடையானபோது...

கானகன்

மகாத்மா காந்தி பிறந்த மண் கதறிக்கொண்டிருக்கிறது. பயங்கர பூகம்பம் ஏற்பட்டு அந்தப் பேரழிவிலிருந்து குஜராத் மாநிலம் இன்னும் முழுமையாக மீளவில்லை. ஓராண்டிற்குப் பிறகு அதை விடவும் கொடுமையான சம்பவங்கள் தற்போது நடந்தேறி வருகின்றன. இந்து முஸ்லீம் கலவரம் அங்கே இப்போது கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது. ஞாயிறன்று வரை 400க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

ஆனாலும் நான்கு நாட்கள் வெறியாட்டத்திற்கு பிறகு, வழமை நிலைக்கு வாழ்க்கை மெல்ல மெல்ல திரும்பிக் கொண்டிருப் பது போலத் தோன்றுகிறது.

இப்போது தாக்குதல்களில் காயமடைந்த முஸ்லீம்களுக்கு மருத்துவமனைகளில் சிகிச்சையும் மருந்துகளும் கிடைப்பதில் சிக்கல் என்று செய்திகள் வருகின்றன.

இனி அன்றாட சட்டம் ஒழுங்குப் பிரச்சனைகளில் எந்த முஸ்லீமும் தைரியமாக போலிசாரை அணுகமாட்டார்கள். நான்கு நாள் கலவரங்களில் போலீசார் அவர்களைக் காப்பாற்றுவதற்கு ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடவில்லை. ராணுவம் வந்திறங்கிய பிறகே நிலைமை ஓரளவு கட்டுக்குள் வந்தது.

பிரதமர் வாஜ்பேயி "வன்முறைகள் இந்திய வரலாற்றில் ஒரு கரும்புள்ளி. உலகநாடுகளின் கண்களில் இந்தியாவின் பெருமைக்கு குந்தகம் வந்து விட்டது, ஆயினும் இந்தச் சோதனையான கட்டத்திலிருந்து இந்தியா மீண்டு விடும்" என நம்பிக்கை தெரிவித்தார். முதலமைச்சர் நரேந்திர மோடி நடைபெறும் கொடுஞ்செயல்கள் குறித்து சற்றும் வேதனைப்படவில்லை. மாறாக ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை.

கோத்ராவில் கரசேவகர்கள் மீதான தாக்குதலைக் கண்டு வெகுண்டெழுந்த இந்துக்களின் பதிலடியாகத்தான் இப்படியெல்லாம் நிகழ்கிறது. இதைவிடவும் அதிக உயிரிழப்போ அல்லது பொருட்சேதமோ ஏற்படவில்லை என்றுதான் நாம் நிம்மதி அடையவேண்டும். அந்த அளவு இந்துக்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள் என்றார்.

பெரிய பெரிய கத்திகள், கோடரிகள் மற்றும் பல பயங்கர ஆயுதங்கள் சகிதம் இந்து தீவிரவாதிகள் கொலை வெறியுடன் அலைகின்றனர். கண்ட இடத்தில் முஸ்லீம்கள் வெட்டிக்கொல்லப்படுகின்றனர். கொலைபாதகர்களுக்கு பயந்து எங்காவது பதுங்கிக்கொண்டால் அந்த கட்டடத்திற்கே தீவைக்கப்படுகிறது. சட்டம், ஒழுங்கு முற்றிலுமாக சீர்குலைந்திருக்கிறது. அம்மாநிலத்தில் அரசு இயந்திரம் என்ற ஒன்று இருப்பதாகவே தெரியவில்லை. ஆனால் அங்கு ஆளும் பாரதீய ஜனதா அலட்டிக்கொள்ளவில்லை. தார்மீகப் பொறுப்பேற்று அரசு ராஜினாமா செய்யத்தயாரில்லை, பிரதமர் வாஜ்பேயி சற்று அழுத்தமாகக் கூட கலவரத்தை ஒடுக்குங்கள் என்று கூறவில்லை. இந்திய-பாகிஸ்தான் பிரிவினையின்போது நடந்த கலவரங்களை நினைவூட்டும் வகையில் இன்றைய குஜராத் நிகழ்வுகள் இருக்கின்றன. குகையிலிருந்து வெளிப்பட்ட மனிதன், மீண்டும் குகையினை நோக்கிச் செல்கிறானோ என்று நல்லுள்ளம் கொண்டோர் அச்சப்படும் அளவு விபரீதம்.

1992ஆம் ஆண்டு அயோத்தியில் மூண்ட தீ இன்னமும் கனன்று கொண்டிருக்கிறது நாட்டின் பல்வேறு பகுதிகளில். அன்று அயோத்தியில் பாபர் மசூதியை ஒரு வெறிக்கும்பல் தகர்த்தது. தொடர்ந்து இந்தியாவெங்கும் இந்து-முஸ்லீம் மோதல்கள். மும்பயில் தொடர் குண்டுவெடிப்புக்கள்.

மதத்துவேஷத்தை வளர்த்து ஆட்சிக்கு வந்த பாரதீய ஜனதாவினால், மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் கோயிலைக்கட்ட முடியவில்லை. அதனுடைய கூட்டணிக்கட்சிகளே அத்தகைய முயற்சியை ஆதரிக்கவில்லை. உத்திரப்பிரதேசத்தில்கூட மக்கள் கோவில் பிரச்சனையில் ஆர்வம் காட்டுவதில்லை. சமீபத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க பெரும் தோல்வியினை சந்தித்தது.

தீவிரவாதிகள் மசூதியை இடித்து, அங்கே ராமர் சிலையினை நிறுவி, வழிபடும் வரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அன்றைய நரசிம்மராவ் அரசு, கோயில் கட்டும் பணியைத் தடுத்துவிட்டது. இன்னமும் அந்தப் பணி அங்கே துவங்கவில்லை. ஒன்பது வருடங்களாக திறந்தவெளியில் ஒரு சிறிய கூரைக்குக்கீழ், ராமர் குடும்ப சிலைகள் அங்கே வாடிக்கொண்டிருக்கின்றன.

எப்படியாவது அந்த இடத்தில் ராமருக்கு மாபெரும் கோவில் ஒன்றை எழுப்பி, இந்து மதத்தின் மேன்மையினை நிலைநிறுத்திக் காட்டுவோம் என்று சூளுரைத்திருக்கும் விஸ்வ ஹிந்து பரிஷத் அல்லாடிக்கொண்டிருக்கிறது. சகோதர சங்கபரிவாரங்கள் ஆட்சியில் இருந்தும் கோயில் கட்ட அனுமதிவரவில்லை. பிரச்சனை வேறு நீதிமன்றத்தில் சிக்கித் தவிக்கிறது.

இந்நிலையில்தான் எதிர்வரும் 15 ஆம் திகதி, என்ன நடந்தாலும் சரி கோயில் கட்டும் பணி தொடங்கிவிடும் என்று பரிஷத் அறிவித்திருக்கிறது.

அதற்கு ஆயத்தமாகத்தான் நாட்டின் பலமூலைகளிலிருந்தும் கர சேவகர்களை (அதாவது கரங்களினால் கோயில் கட்டும் திருப்பணியில் ஈடுபடுபவர்கள்) அயோத்திக்கு அழைத்துச் சென்று பதட்டத்தினை உருவாக்கி வருகிறது பரிஷத்.

ஒரு கட்டத்தில் இலட்சக்கணக்கில் அங்கே தொண்டர்களைக் குவித்து, மைதானத்திற்குள் புகுந்த போலிசாரையும் மீறி அங்கே கோயிலைக் கட்டத் துவங்குவது என்பதே பரிஷத்தின் திட்டம். ஆனால் அந்த அளவு தொண்டர்களை அவர்களால் அங்கே குவிக்கமுடியவில்லை. எல்லோரும் வருகிறார்கள். ராமர் சிலையினை தூரத்திலிருந்து பார்த்து, கன்னத்தில் போட்டுக் கொண்டுவிட்டு திரும்பிவிடுகிறார்கள்.

அப்படித்திரும்பிய ராம் சேவகர்களின் ஒரு குழுவினர்தான் குஜராத் மாநிலத்தில் உள்ள கோதார ரயில் நிலையத்தில் எரித்துக் கொல்லப்பட்டார்கள்.

பெப்ரவரி 27 ஆம் நாள் காலை 8 மணியளவில் அக்கொடுஞ்சம்பவம் நடந்தது. முஸ்லீம்கள் அதிகம் வாழும் பகுதியான சபர்மதியை எக்ஸ்பிரஸ் கோத்ரா வந்தடைந்தபோது வெறியர்கள் முஸ்லீம்களுக்கெதிரான கோஷங்களை எழுப்பியிருக்கின்றனர். ரயில் நிலையத்தில்டீ விற்பனை செய்யும் ஒரு முஸ்லீம் நபருடன் தகராறு செய்து, அவரைத் தாக்கியிருக்கிறார்கள். ரயில் நிலையத்திலிருந்து எக்ஸ்பிரஸ் புறப்பட்ட சில நிமிடங்களில் அது நிறுத்தப்பட்டது. ஒரு வன்முறைக் கும்பல் ராம் சேவகர்கள் மீது கற்களை வீசித்தாக்கியது. பெட்ரோல் குண்டுகளும், அமில குண்டுகளும் சரமாரியாக சேவகர்கள் பயணம் செய்த இரு பெட்டிகள் மீது வீசப்பட்டன. சில நிமிடங்களில் அப்பெட்டிகள் தீக்கிரையாகின 57 பேர் மாண்டனர். கருகியவர்களில் 40க்கும் மேற்பட்டோர் பெண்களும் குழந்தைகளும். கோத்ரா ரயில் நிலையத்திற்கருகே உள்ள ஒரு குடிசைப் பகுதியில் வசித்து வந்த காடையர்கள் சிலரின் திட்டமிட்ட சதியே ரயில்பெட்டிகள் எரிப்பு எனக்கூறப்படுகிறது. இன்னும் சிலர் பாகிஸ்தான் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐதான் பின்னிருந்து அவர்களை இயக்கியது என்று கூறுகின்றனர்.

எப்படியானால் என்ன, 57 இந்துக்கள் மரித்தற்கு பழிவாங்கும் பணியில் இறங்கினர் தீவிரவாதிகள். மாநிலமெங்கும் அவர்கள் இஸ்லாமியர்களை மூர்க்கமாகத் தாக்கத்தொடங்கினர்.

நான்கு நாட்கள் தொடர்ந்து வன்முறைஅங்கே கோரத்தாண்டவமாடியது. முஸ்லீம்களின் கடைகள் சூறையாடப்பட்டன. பங்களாக்களும், வீடுகளும், குடிசைகளும் கொளுத்தப்பட்டன. பலர் உயிருடன் எரித்துக்கொல்லப்பட்டனர். ராம் சேவகர்கள் உத்திரப்பிரதேசத்திற்கு சென்று வருவதே பதட்டத்தினை உருவாக்குகிறது என்று பல்வேறு மட்டங்களில் இன்ட்டெலிஜன்ஸ் போலீசார் மத்திய மாநில அரசுகளை எச்சரித்திருக்கின்றனர். மத்திய அரசு கவலைப்படவில்லை.

அடிக்கடி கலவரங்கள் எழக்கூடிய குஜராத் மாநிலத்திலாவது, அந்த அரசு சற்று விழிப்புடன் இருந்திருக்க வேண்டும். ஆனால் அவர்களும் அக்கறை காட்டவில்லை.

ரயில்பெட்டிகள் எரிக்கப்பட்டவுடன் தேவையான அளவு போலீசாரைக் குவித்து மேலும் அசம்பாவிதங்கள் நடைபெறாவண்ணம் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். குறிப்பாக அகில இந்திய அளவில் வி.ஹெச்.பி முழுக்கடையடைப்பு அறிவித்த பின், அது அபாயச்சங்கென்றுணர்ந்து, பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்க வேண்டாமா? அதுவும் நடக்கவில்லை.

முதல்வர் மோடியே ஒரு தீவிரவாதி. சமீபத்தில்தான் அவர் முதல்வரானார். ஏற்கெனவே முதல்வராக இருந்த கேசுபாய் பட்டேல் சரியாக நிர்வகிக்கவில்லை. அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க படுதோல்வியை அடையும் என்ற நிலை உருவான பிறகு பட்டேல் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். மோடிக்கு இடப்பட்ட பணி கட்சியை வலுப்படுத்துவதுதான்.

தீவிர இந்துத்துவக் கொள்கைகளை அமுல்படுத்தி வாக்குகளை பெருக்கிக் கொள்ளவேண்டும். அப்படி ஒருக்கால் வாக்குக்களை பெறமுடியாவிட்டாலும் சரி இந்துத்துவாவை வளர்ப்பதே தனது முதற்பணி என்று கருதுபவர் மோடி அப்படிப்பட்டவர் ஆட்சியில் இருந்தால் என்ன நடக்கும்? அதுதான் நடந்து கொண்டிருக்கிறது குஜராத்தில்.



மார்ச் 4ந் திகதி இரவு வரை 427 பேர் கொல்லப்பட்டிருந்தனர். அவர்களில் மிக அதிகமானவர்கள் முஸ்லீம்கள்தான். முதல் மூன்று நாட்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த போலீசார், கடும் கண்டனங்கள் எழுந்தபின், வேண்டா வெறுப்பாக, கலவரக்காரர்களை அடக்கத் தொடங்கினர். அவர்கள் துப்பாக்கிச் சூட்டில் மரித்தது 70க்கும் மேற்பட்டோர் என்று கூறப்படுகிறது.

ஒரு 70 வயது முன்னாள் முஸ்லீம் எம்.பி., காங்கிரசைச் சேர்ந்தவர், உயிரோடு எரித்துக்கொல்லப்பட்டவர்களில் ஒருவர். பின்னர் சம்பவம் குறித்து பேட்டியளித்த அவரது மனைவி எப்படி தனது கணவர், காடையர்கள் அவர்கள் பங்களாவை சூழந்தபோது, உயர்போலீஸ் அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும் டெலிபோனில் உதவி கேட்டு மன்றாடினார், தனது குடும்பத்தினரை மாடிக்கு அனுப்பிவிட்டு கீழ்தளத்தில் மற்றவர்களுடன் இருந்து கொண்டு தாக்குதலை சமாளிக்க எத்தனித்தார்,. ஆனால் எவ்வாறு அவர் தோற்றுப்போய், 27 பேர் அந்த இடத்தில் உடல்கருகி இறந்தார்கள் என்று கண்ணீர் மல்க பேட்டியளித்திருக்கிறார். தற்போது வேறு ஒரு உறவினர் வீட்டில் தஞ்சம் புகுந்திருக்கிறார், அந்தப் பெண்மணி. இன்னமும் தனது கணவரின் உடலை அடையாளம் கண்டு, இறுதிச் சடங்குகள் செய்யக்கூட அவர் அனுமதிக்கப்படவில்லை. இப்படி குடும்பத்தினரை பறிகொடுத்து அநாதையாக நிற்கும் முஸ்லீம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஏராளம். இனி அவர்கள் எப்படித் தங்கள் வாழ்வினை நடத்தப்போகிறார்கள், தலைநகர் ஆமதாபாத்திலேயே முஸ்லிம்கள் கடுமையாக தாக்கப்பட்ட பிறகு அங்கே எப்படி சமூக நல்லிணக்கம் மீண்டும் மலரப்போகிறது, எந்த நகரிலும், எந்தத்துறையிலும் இந்துக்களும், முஸ்லீம்களும் இணைந்து வாழமுடியுமா போன்ற வினாக்களுக்கெல்லாம் இந்தக் கட்டத்தில் எவராலும் உறுதியாக பதிலளிக்கமுடியாது.

நரேந்திர மோடி அரசு பதவி விலக வேண்டும் என்றோ அல்லது குடியரசுத் தலைவர் ஆட்சி அங்கே அமுல்படுத்தப் படவேண்டுமென்றோ எவரும் கோரவில்லை. அதில் ஒரு சூக்குமம் இருக்கிறதாம்.

கலவரப்பிரச்சனைக்காக ஆட்சி கலைந்து ஆறுமாதங்களில் தேர்தல் நடைபெற்றால், இந்துக்களின் பெருவாரியான ஆதரவுடன் மீண்டும் பா.ஜ.க ஆட்சிக்கு வந்துவிடுமாம். மோசமான நிர்வாகத்தின் காரணமாக முற்றிலுமாக மக்கள் நல்லெண்ணத்தை இழந்திருக்கும் பாரதீய ஜனதாவிற்கு அப்படி ஒரு வாய்ப்பு கொடுக்கக்கூடாது என்பதில் எதிர்க் கட்சிகள் மிக கவனமாக இருக்கின்றனவாம். எவ்வளவு அக்கறை பாருங்கள் இக்கட்சிகளுக்கு நாட்டு நலனில்.

வி.எச்.பி.யின் முழுக்கடையடைப்பிற்கு தமிழ்நாட்டில் எந்த ஆதரவும் இல்லைதான். ஆனால் இந்துத்துவ சக்திகளுக்கு ஜெயலலிதாவிடமிருந்து தீவிர ஆதரவு கிடைத்தது. கோத்ரா சம்பவத்திற்கு மறுநாள், மற்ற கட்சித் தலைவர்களைச் சாடி கடும் அறிக்கை விட்டார் அவர். அனைத்துக் கட்சித் தலைவர்களும் சம்பவத்தை கண்டனம் செய்திருந்தனர். இவரோ எவரும் கண்டிக்காதது வேதனைக்குரியது, இறந்தவர்கள் இந்துக்கள் என்பதால் வாய்மூடி மௌனிகளாக இருப்பதா, சிறுபான்மையினர் இப்படிகொல்லப்பட்டிருந்தால் எப்படி நீங்கள் எல்லாம் கூப்பாடு போட்டிருப்பீர்கள். அரசியலமைப்புச் சட்டத்தில் அனைவரும் சமம், எல்லையில் பதட்டம் நிலவும் இவ்வேளையில், பெரும்பான்மை சமூகம் தாக்கப்படுவதா என்ற ரீதியில் அவர் அவ்வறிக்கையில் கூறியிருந்தார்.

1992ல் கூட கரசேவையை ஆதரித்து, இந்துக்களின் உணர்வு மதிக்கப் படவேண்டும் என்று பேசியவர்தான் இந்த ஜெயலலிதா.

சிறுபான்மையினர் மத்தியில் தீவிரவாதம் பெருகுவதை பல கட்சிகள் கண்டும் காணாமலிருந்தன. அதன் விளைவாக நாட்டில் அடிப்படைவாதம் பூதாகாரரூபத்தை எடுத்தது என்பதும், எதிர்வினையாக இந்து தீவிரவாதம் வளர்ந்தது என்பதும் சரிதான். ஆனால் இரு சமூகங்களும் ரத்தக் களறியில் சிக்கிக் கொண்டிருக்கும் வேளையில் இந்துக்களைத் தூண்டிவிடும் வகையில் பேசலாமா? யார் அவருக்கு எடுத்துச் சொல்வது? ஆஹா, எவ்வளவு அரிதானதோர் உண்மையினைக் கூறிவிட்டார் என்றல்லவா பலர் அவரை சிலாகித்தனர். ஆனால் கவலரத்தில் நூற்றுக்கணக்கில் முஸ்லீம்கள் மாண்டது பற்றியோ, காடையர்களை போலீசார் ஒடுக்காதது குறித்தோ அவர் அதிகம் கவலைப்படவில்லை. துரதிஷ்டவசமாக, மத்திய, மாநில அரசுகள் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மட்டும் கூறிவிட்டு அமைதியாகி விட்டார்.

பொருளாதாரச் சிக்கல்கள் அதிகமாக மதச்சண்டைகளும் சாதிச் சண்டைகளும் பெருகுவது தவிர்க்கவியலாதது தான். ஆனால் குறைந்த பட்சம் சமூக நல்லிணக்கம் வேண்டும் அதற்கு ஆக்கபூர்வமாக என்ன செய்யலாம் என்று சிந்திக்கும் தலைவர்கள் இன்றில்லாதது தான் மிகவும் துரதிஷ்டம். ■







## எதிர்பார்ப்பு


ஆப்கானிஸ்தானின் வடக்கு முன்னணியினர் வசம் இருக்கும் தலிபான் சிறைக்கைதிகள்தான் இவர்கள். இருபது அடி பரப்பளவுள்ள அறைகளுக்குள் இருபதுக்கும் மேட்பட்டவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கைதிகளுக்கு நாளொன்றுக்கு ஒரு வேளை உணவு மாத்திரமே வழங்கப்படுகின்றது. சிறைக்குள் எவராவது மோதிக்கொண்டால் இருவருக்குமே மோசமான சித்திரவதைகள் உண்டு. தப்பிக்க முயற்சித்தால் சந்தேகமின்றி மரண தண்டனை நிறைவேற்றப்படும். இந்த சிறையில் இருந்த வயது முதிர்ந்த சிலர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டனர். விடுவிக்கப்படுபவர்களின் பெயர்கள் சிறைக்கு வெளியில் இருந்து அறிவிக்கப்பட்டபோது தங்கள் பெயரும் அந்த பட்டியலில் இடம்பெற்றிருக்கிறா என்பதை அறிய சோகம் கலந்த வற்றிப்போன எதிர்பார்ப்புகளுடன் சிறைக்கம்பிகளுக்குள்ளால் வெளியில் பார்க்கிறார்கள்.

# தகவல் பெட்டி

## மரண நிலையம்

விமானம் என்றால் விமான நிலையத்தில் மட்டும்தான் தரையிறங்க வேண்டும் என்ற விதிமுறையை நிராகரித்துவிட்டு சவச்சாலை ஒன்றில் தரையிறங்கிய விமானத்தையே இங்கு காண்கிறீர்கள். ஃபால்கன் 20 என்ற சரக்கு விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக அதனை திடீரென தரையிறக்கவேண்டி ஏற்பட்டது. சர்வ வசதிகளுடன் கூடிய ஓடுபாதையை தேடிப் பறக்கும் நிலையில் இல்லை என்பதை உணர்ந்த விமானி டிட்ரொயிட் மாநிலத்தில் உள்ள ஒரு சவச்சாலையில் விமானத்தை தரையிறக்கினார். விமானத்திற்கு சிறிதளவு சேதம் ஏற்பட்டது. எவரும் உயிரிழக்கவில்லை. ஆபத்திலிருந்து மீண்ட விமானி சொன்னார். "சவச்சாலைவரை போய்விட்டு திரும்பி வந்திருக்கிறோம்."



எந்தவொரு மதமும் போரை, அழிவுகளை மனித அவலங்களை ஆதரிப்பதில்லை. ஆனால் உலகில் இடம்பெறும் யுத்தங்களில் 90 சதவீதமானவைக்கு மத ரீதியிலான பிரிவினைகளே அடிப்படையாக உள்ளன. இந்தியாவில் மதக்கலவரங்கள் சகஜமான விடயம்போல் ஆகிவிட்டது. தத்தமது மதங்களின் மேலாண்மையை உயர்த்திக் காண்பிக்க பாடுபடும் தீவிர இந்து, முஸ்லிம் மதவாதிகள் வன்முறைகளுக்கு தூபமிடுகிறார்கள். அழிவுகள் என்று வரும்போது உபதேசிப்பவர்கள் ஒதுங்கிக்கொள்ள ஒன்றுமறியாதவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். குஜராத்தில் சுமார் 60 இந்துக்கள் ரயிலில் வைத்து உயிருடன் எரிக்கப்பட்டார்கள். மறுநாள் தொடக்கம் அதற்குப் பழி தீர்க்கும் நடவடிக்கையாக சுமார் 500 முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள். இந்தக் கொலைகளில் எதையும் மதத்தின் பேரால் நியாயப்படுத்த முடியுமென்றால் மனிதனை விடவும் மதங்கள்தான் வெட்கப்பட வேண்டும்! தனது தாய் தந்தை இரண்டு சகோதரர்கள் உட்பட பலரை 'மதக்கலவரத்தில்' பலி கொடுத்துவிட்டு கடுமையான காயங்களுடன் உயிர் தப்பிய முஸ்லிம் சிறுவனையே இங்கு காண்கிறீர்கள் இவனது எதிர்காலத்தை மதங்கள் பொறுப்பேற்குமா?



## மதத்தின் பெயரால்

## வேகம்

ஓடினாள் ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்துக்கே ஓடினாள் என்பதுபோல வேகம் வேகம் என்று வேகமாக ஓடி வாழ்க்கை ஓரத்துக்கு ஓடிய கார் ஒன்றைத்தான் படத்தில் காண்கிறீர்கள்! அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் கடந்த ஞாயிறன்று இடம் பெற்ற கார் ஓட்டப் போட்டியின்போது பிரேஸில் நாட்டு சாரதியின் கார் பாதையை விட்டு விலகி மற்றொரு காருடன் மோதுண்டு பகுதி, பகுதியாக உடைந்து பறக்கும் காட்சிதான் இது. இந்தக்கார் பாதையை விட்டு விலகி ஏற்படுத்திய தடங்களால் 19 கார்கள் ஒன்றோடு ஒன்று மோதி போட்டியை விட்டு இடையில் விலகின.

## நாய்ச் சவாரி

யானை சவாரி குதிரைச் சவாரி என்று ஆரம்பித்து நாய் சவாரி வரை நாகரீகம் வளர்ந்து விட்டதோ என சிந்திக்கிறீர்களா..?இது தமிழகத் தலைநகரான சென்னையில் நடைபெற்ற ஒரு சர்க்கஸ் நிகழ்ச்சியின் போது க்ளிக் செய்யப்பட்ட படம் பழக்கப்படுத்தப்பட்ட நாய் ஒன்று சிறுவன் ஒருவனை சில்லு வண்டியில் இழுத்துச் செல்கிறது.



# பிரதியுக்ஷாவின் கொலை மர்மம் துலங்குமா?

தமிழ்நாட்டிலிருந்து
மயன்

'கடல் பூக்கள்' புகழ் பிரதியுக்ஷா மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். சித்தார்த்த ரெட்டியுடனான பிரதியுக்ஷாவின் காதலுக்கு சித்தார்த்த ரெட்டியின் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்த தன் காரணமாக இருவரும் தற்கொலை முயற்சி செய்து பிரதியுக்ஷா இறந்து விட்டதாகவும், சித்தார்த்த ரெட்டி குற்றுயிராக இருப்பதாகவும் முதலில் கூறப்பட்டது.

ஆனால், பிரதியுக்ஷாவின் உடலில் பல இடங்களில் காணப்பட்ட காயங்கள் அவரின் சாவில் சந்தேகத்தை ஏற்படுத்தியது. அதனால், பொலிஸார் விசாரணையை வேறு கோணத்தில் முடுக்கி விட்டனர். அத்தோடு பிரதியுக்ஷாவின் தாயாரின் வேண்டுகோளுக்கிணங்க இரண்டாவது முறையாகவும் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

அப்போது பிரதியுக்ஷாவின் மார்பில் நகக்கீறல்களும், பல்லடையாளங்களும் கண்டுபிடிக்கப்பட்டது. கழுத்தின் பின்புறத்திலும் நகக்கீறல்கள் காணப்பட்டன. தொடையில் காயங்களும், உள்ளாடையில் ரத்தக்கறைகளும், ஆண் உயிரணுக்கள் உறைந்த அடையாளங்களும் காணப்பட்டன.

எனவே, பிரதியுக்ஷாவை இரண்டு அல்லது மூன்று பேருக்கு மேற்பட்ட கும்பலொன்று பல தடவைகள் பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்திய பின்னர் பலவந்தப்படுத்தி நஞ்சினை ஊசி மூலமேற்றிக் கொலை செய்திருக்க வேண்டும்.

அல்லது, கழுத்தை நெரித்த அடையாளங்களும் இருப்பதால் கழுத்தை நெரித்துக் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். பிரதியுக்ஷாவின் சாவில் ஏற்பட்ட திருப்பங்களும் மர்மங்களும் நடிக நடிகையர் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொலிஸ் உயரதிகாரிகள் நேரடியாக தலையிட்டு விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மயக்க நிலையில் இருக்கும் பிரதியுக்ஷாவின் காதலர் சித்தார்த்த ரெட்டிக்கு நினைவு திரும்பினால் பல மர்ம முடிச்சுக்களுக்கு விடை கிடைக்கும் என்பதால் அவர் சிகிச்சை பெற்றுவரும் மருத்துவமனையை சுற்றி பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

எது எப்படியோ 'கடல் பூக்கள்' மூலம் நம் உள்ளங்களை மகிழ்ச்சிக் கடலில் மூழ்க வைத்து திரை வானில் மின்னிய இவ் அழகிய நட்சத்திரம் குறுகிய காலத்தில் ஆயுளை முடித்துக்கொண்டு மண்ணோடு சங்கமமாகிவிட்டது.



பிரதியுக்ஷா

## பனிப்போர்

கமல், விஜயகாந் இருவரும் மேடைகளில் ஒருவரை ஒருவர் புகழ்ந்து தள்ளினாலும், உள்ளுக்குள் பெரும் பனிப்போர் நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கின்றது.

இதில் கமலுக்கு ஆதரவாக டீ.ஆர் போன்றோரும், விஜயகாந் அணிக்கு ஆதரவாக நெப்போலியன் போன்றோரும் களமிறங்கும் தத்தமது அணிகளுக்கு ஆதரவைத் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். பிரச்சனை சூடு பிடிக்கும் போலுள்ளது.

## சித்தியைத் தொடர்ந்து அண்ணாமலை

பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட சீரியல் அண்ணாமலை! சித்தி யூனிட் அப்படியே அண்ணாமலைக்கு தாவியிருக்கின்றது. அதே அளவு பேசப்படுமா என்கிற ஆர்வம் எல்லாருக்கும் எழுந்தது நியாயம்தானே!

அண்மையில் சித்தி வந்த அதே சிலாட்டில் அண்ணாமலை ஆரம்பமாகியுள்ளது. வழக்கமான நாடகத்தனம் எதுவுமில்லாமல் அட்டகாசமான கிராமத்துப் பின்னணியில் கதை ஆரம்பிக்கிறது. பாழடைந்த அரண்மனை... அதன் மதில் சுவர்களில் கடந்தகால எச்சங்கள் என்று எதிர்பார்ப்பைக் கிளப்புற மாதிரி தெளிவாகக் கொண்டு போகிறார்கள். பட்ஜெட் பற்றிய கவலை இல்லாமல் பண்ணியிருக்கிறார்கள் என்பது ஒவ்வொரு காட்சியிலும் தெளிவாக விளங்குகின்றது. தொழில்நுட்ப ரீதியிலான மிரட்டல்கள், இசை என்று அடுத்து நடக்கப்போகிற அதிரடிகளை எதிர்பார்க்கிறமாதிரி வெகு நுட்பமாகச் செய்திருக்கிறார்கள். என்ன ராதிகாவுக்கு அந்த ஓல்டு 'கெட் அப்' தான் ஒட்டவில்லை! ஏற்கனவே சித்திக்காக கவிதாபாரதி -ராஜ்பிரபு இரட்டையர்கள் திரைக்கதை-வசனம் எழுத வைத்திருந்தார்கள். இதில் பத்திரிகையாளர் பாபுயோகேஸ்வரன் அந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டிருக்கிறார்!

கிராமத்து வசனங்கள் பிரமாதம்! ராதிகா... வாண்டுகளுக்கு கதை சொல்ல ஆரம்பிக்கும்போது தூரத்தில் சங்கொலி... சங்கொலிக்கான விளக்கம், சொல்லப்போகிற கதைக்கான முன்னோட்டம் மாதிரி. மலைக்குகைகளில் வாழ்கிற சாமியார் மாதிரி ஒருத்தரை ருத்ர தாண்டவம் ஆட விட்டிருப்பதும் பின்னணியும் அட்டகாசம்!

இதே வேகத்தோடு சூடு கிளப்புவாரா சி.ஜே.பாஸ்கர்?! பொறுத்திருந்து பார்ப்போம்!



## வித்தியாசமான தலைப்போடு புதிய இயக்குநர்

ஏ.எம்.ரத்னம் தனது வாரிசான ஏ.எம்.ஜோதி கிருஷ்ணாவை இயக்குநராக அறிமுகப்படுத்தியுள்ளார். இருபத்திரெண்டு வயதான ஜோதி கிருஷ்ணாவின் கதை இளமை சொட்டுகிற மாதிரித் தான் அமைக்கப்பட்டுள்ளது. படத்திற்கு 'எனக்கு 20 உனக்கு 18' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

தலைப்பே வித்தியாசமா இருக்கே? என்றால் அந்த வயதில் நடக்கிற காதல் கதைதான் கதை என்கிறார்கள் ரத்னம் யூனிட். இருபதாகப் 'புன்னகை தேசம்' தருணையும், பதினெட்டாக மாடலழகி திரிஷாவையும் ஜோடி சேர்த்திருக்கிறார் ஜோதி கிருஷ்ணா. இரண்டுக்கும் நடுவே 'ஸ்ரேயா' என்ற இன்னொரு புதுமுகம்.

## அஜித்- ஷாலினி சுற்றுலா

அஜித் - ஷாலினி இருவரிடையே பிரச்சனை என்று ஏறத்தாழ அனைத்துச் செய்தி ஊடகங்களும் பரபரப்பாகச் செய்திகளை வெளியிட்டுத்தள்ளிவிட்டன.

ஆனால், அண்மையில் ஷாலினியோடு சுற்றுலா போயிருந்த அஜித் கண்ணில் பட்ட காட்சிகளையெல்லாம் தனது கமராவில் சுட்டுக் கொண்டு வந்திருக்கின்றார். அனைத்தும் கைதேர்ந்த புகைப்படக் கலைஞர்களின் கைவண்ணத்தையும் மிஞ்சிவிட்டதாக இருந்தனவாம்.

## பொரிந்து தள்ளுகிறார் ராதிகா சௌத்ரி

நாயகியாக அறிமுகமான ராதிகா சௌத்ரி இப்போது ஒரு பாடலுக்கு நடனமாடும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

ஏன் ஒரு பாடலுக்கெல்லாம் ஆடுறீர்கள்? என்று கேட்டால், பொரிந்து தள்ளுகிறார். "முதல் படத்தில் கவர்ச்சியா நடித்ததால தொடர்ந்தும் அதே பாணியிலேயே நடிக்கும் படி கேட்கிறாங்க. எனது நடிப்புத்திறமையை எப்படி வெளிப்படுத்திறது என்றே தெரியல்ல" என்கிறார். அத்தோடு நின்றுவிடாமல் முன்னாம்பிறை ஸ்ரீதேவி மாதிரி நடிப்பது தான் தனது லட்சியம் என்கிறார். அட பாவம்... ஆசை யாரைத்தான் விட்டது!



பிரபு -பிரபுதேவா

## காதோடு சொல்லுகிறோம்

**இ**டையழகியின் குடும்பத்தார் முன்பெல்லாம் சென்னை வந்தால் இடையழகியின் வீட்டில் தானாம் தங்குவார்கள். இப்போதெல்லாம் அந்தப் பக்கமே தலை வைத்தும் படுப்பதில்லையாம். இடையழகியின் தங்கை கோணல் வீட்டில் தான் தங்குகிறார்களாம்.

**அ**லைபாயும் நடிகர் நடித்த 'கில்' பண்ணும் படத்தில் ஒடியோ உரிமையைப் பலகோடிக்கு வாங்கிய நிறுவனம் கன்னத்தில் கைவைத்துக் கொண்டு இருக்கின்றதாம். ஏனெனில், எதிர்பார்த்தளவு கசெற்கள் விற்கப்படவில்லையாம். அதனால் தயாரிப்பாளரிடமே திருப்பிக் கொடுக்க நினைத்தால் அவர் ரத்தினச் சுருக்கமாக 'நோ' சொல்லிவிட்டாராம்.

**மூ**ன்று ரோஸ்களை வைத்து ஒரு ரோஸின் அண்ணன் தயாரித்த முடிந்த பாடில்லை. அண்ணன் தனது வங்கிக் கணக்குகளையெல்லாம் விடுவதை அறிந்த தொடையழகி ரோஸ் அண்ணனைக் கழட்டி விட்டாராம். அண்ணன் என்னடா..? தங்கை என்னடா...?

**க**றுப்பு டான்ஸரும், மலை மலை நடிகையும் ரோஸ் கூட்டத்திற்காக ஆட்டம் போட்டனர். அப்போது ஓர் காட்சிக்காக 5 அடி மீனை அம்ம போட்டுத் துடிக்க விடும் போது நடிகை சரியாகச் சங்கடப்பட்டாராம். அ லட்டா?

**ஜீ**ன்ஸ் நாயகனுக்கு ஆரம்பம் முதலே அவரது தந்தைக் குலம் தா கவனித்து வந்தார். ஆனால், இப்போது மனேஜர் ஒருவரை நியமித்துள்ள தந்தையும் மகனும் என்றாலும் வாயும் வயிறும் வேறல்லவோ...?





மோனல்-குணால்

## மினி சினி

* 'அம்மையப்பா' படத்திற்குப் பத்துப் பிரிண்ட்டுகள் தான் போடப்பட்டனவாம்.
* 'சீனியர் ஜூனியர்' படத்தின் சாட்டிலைட் உரிமை நாற்பத்திரெண்டு லட்சத்திற்கு விற்கப்பட்டிருக்கிறது.
* கொஞ்சக் காலத்திற்குத் தெலுங்குப் பக்கம் போவதில்லை என்று தீர்மானித்துள்ளார் சௌந்தரி.
* தன்னைக் கேட்காமல் வேறு படங்கள் எதையும் ஒப்புக் கொள்ள வேண்டாம் என கிரணுக்குத் தடா போட்டிருக்கிறார் இயக்குநர் சரண்.
* 'ஷாஜஹான்' படத்தைத் தெலுங்கில் இயக்குகிறார் அதன் இயக்குநர் ரவி.
* 'வருஷமெல்லாம் வசந்தம்' படத்தை நாற்பது நாட்களில் முடித்திருக்கிறார் டைரக்டர் ரவிசங்கர்.
* தினமும் மூன்று மணிநேரம் மட்டுமே தூங்குகிறாராம் நடிகர் விக்ரம்.
* சினிமா வாய்ப்புகளே வேண்டாம் என உதறிவருகிறாராம் ராஜஸ்ரீ.
* மும்தாஜை மட்டும் வைத்து விளம்பரம் செய்ததமையால் 'விவரமான ஆளு' தயாரிப்பாளர் மீது கடுப்பாக இருக்கிறார் சத்யராஜ்.
* 'மின்னலே' புகழ் கௌதம் இயக்கத்தில் நடிக்கிறார் அஜய்.



கமல்

# சினி விசிட்

## அசோக் சாம்ராஜுடன் திருமணமா? மறுக்கிறார் மந்த்ரா!

நடிகை மந்த்ரா, சினிமா பட தயாரிப்பாளர் ஒருவரை ரகசிய காதல் திருமணம் செய்து கொண்டு, நடிப்புக்கு முழுக்கு போட்டுவிட்டார் என்று அவரைப் பற்றி திரையுலக வட்டாரத்தில் பரபரப்பாகச் செய்தி அலைந்து கொண்டிருக்கிறது! இது பற்றி உண்மையா? என்று மந்த்ராவை வடபழனியில் உள்ள அவரது ஃப்ளாட்டில் சந்தித்துக் கேட்டால்! "இந்த வதந்திக்கு எப்படி முற்றுப்புள்ளி வைக்கறதுன்னு தெரியலை" என்று கவலையோடு மறுக்கிறார்.

அவர் தொடர்ந்து கூறும்போது என்னை முதன் முதலில் 'பிரியம்' என்ற தமிழ் படத்தில் கதாநாயகியாக அறிமுகம் செய்தவர் அசோக் சாம்ராஜ். அவரும், எனது தந்தையும் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். எனவே, தமிழில் அடுத்து நான் நடிக்க வேண்டிய புதுப் படங்கள் பற்றி அவரிடம் எனது தந்தை கருத்துக் கேட்பார். மொத்தத்தில் அசோக் சாம்ராஜ் எங்கள் குடும்ப நண்பராக இருந்து வந்தார். அவருக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள்கூட இருக்கின்றனர்.

அசோக் சாம்ராஜுக்கும், எனக்கும் எந்த தொடர்பும் கிடையாது. 'பிரியம்' படத்துக்கு பிறகு அவரது தயாரிப்பில் உருவாகும் ஒரு படத்தில் நடிப்பதற்காக என்னை அணுகினார். ஆனால் சில காரணங்களால் அந்தப் படம் தயாரிக்கும் திட்டம் கைவிடப்பட்டது. அதற்குப் பிறகு இதுவரை அசோக் சாம்ராஜை நான் நேரில் சந்தித்ததும் இல்லை, பேசியதும் இல்லை.

நான் ஒரு தெலுங்கு படத்தில் நடித்தபோது காளஹஸ்தி கோயிலுக்கு சாமிகும்பிடப் போனேன் அந்த சமயம் அங்கு அசோக் சாம்ராஜும் வந்திருந்தார். எங்களை கோயிலில் பார்த்த சிலர் தவறாக புரிந்து கொண்டு, அவரை நான் ரகசிய திருமணம் செய்வதற்காகவே கோயிலுக்கு வந்திருக்கிறேன் என்பதாக பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்து விட்டனர் என்றார்.

எல்லாம் அந்த காளஹஸ்தி அம்மனுக்குத் தான் வெளிச்சம்.

**முகப்பில்**

கமல்



சிநேகா

## மீள் பிரவேசம் செய்கிறார் பாண்டியராஜன்

பாண்டியராஜன், அபிதா நடிக்கும் 'கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால்..' என்ற படம் தயாரிக்கப்படுகிறது. இரண்டு நாயகர்கள் நடிக்கும் இப்படத்தில் பாண்டியராஜனுடன் புதுமுகம் ராகேஷ் நடிக்கிறார். ராகேஷ் ஜோடியாக 'சேது' படநாயகி அபிதாவும், பாண்டியராஜன் ஜோடியாக லாவண்யாவும் நடிக்கிறார்கள். மற்றும் ராஜீவ், ஸ்ரீமன், சகுமார், எம்.எஸ். பாஸ்கர், மதன் பாபு, ஜானவி, காந்திமதி, பூரணி, சண்முக சுந்தரி,நெல்லை சுந்தரராஜன்,மும்தாஜ் ஆகியோர் நடிக்கிறார்கள்.

படத்தின் கதை, வசனத்தை ராகவி மூவி மேக்கர்ஸ் கதை இலாகா கவனிக்க, திரைக்கதை எழுதி இயக்குகிறார் வி.எஸ். ராஜரிஷி.

ஜெரியால் ஒளிப்பதிவு செய்ய, கலையை டைகர் பாலனும், எடிட்டிங்கை டி.ராஜகுமாரும், நடனத்தை எஸ்.சேகாதர், அம்பி மகேந்திரன் ஆகியோரும் சண்டைப்பயிற்சியை புயல் வண்ணனும் கவனிக்க, பாடல்களை பா.விஜய், நா.முத்துக்குமார் எழுத ஜீவா-மருது இசையமைக்கிறார்.

## சொந்தக் குரலில் பாடுகிறார் ப்ரியங்கா

விஜய், ப்ரியங்கா சோப்ரா நடிக்கும் 'தமிழன்' படத்தில் ப்ரியங்கா ஓர் பாடலைத் தனது சொந்தக் குரலில் பாடியுள்ளார்.

படத்தின் கதைப்படி விஜய்யும், ப்ரியங்கா சோப்ராவும் சந்தோஷமாக இணைந்து பாடி ஆடுவதாக கவிஞர் வைரமுத்து ஒரு பாடலை எழுதியிருக்கிறார். "உள்ளத்தைக் கிள்ளாதே! கிள்ளிவிட்டுச் செல்லாதே! காயத்தில் முத்தம் வையப்பா!" என்று ப்ரியங்கா சோப்ரா பாட, பிறகு விஜய் "முத்தம் கொடுத்து முழு ஆளை நீ தின்னுவாய்... தாங்காது யப்பா... யப்பா..." என்று பாட வேண்டும். இப்பாடலையே விஜய், ப்ரியங்கா சோப்ரா இருவரும் இணைந்து பாடியுள்ளனர்.

தமிழ் கற்றுக் கொள்ள ஆர்வம் காட்டும் ப்ரியங்கா சோப்ரா, இப்பாடலை முதலில் ஆங்கிலத்திலும், பிறகு இந்தியிலும் எழுதி வைத்துக்கொண்டார். பிறகு இசையமைப்பாளரிடம் ஒவ்வொரு வரிக்கும் என்ன அர்த்தம் என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டு பாடினார். ப்ரியங்கா சோப்ரா பாடிய பாடலைக் கேட்ட விஜய், இந்தப் பாடலை என்னை விட ப்ரியங்கா சோப்ரா நன்றாகப் பாடியிருக்கிறார்" என்று பாராட்டித்தள்ள... இறக்கை கட்டிப் பறக்கிற மாதிரி இருக்காம் சோப்ராவுக்கு!

தமிழ்ப் படவுலகில் 45 ஆண்டு இடை வெளிக்குப் பிறகு ஒரே படத்தில் கதாநாயகனும், கதாநாயகியும் இணைந்து சொந்தக் குரலில் பாடி நடிப்பது 'தமிழன்' படத்துக்காக மட்டுமே என்பது குறிப்பிடத் தக்கது. தவிர, திரையுலகில் அறிமுகமாகி நடித்துவரும் உலக அழகிகளில் முதன் முறையாகச் சொந்தக் குரலில் பாடிய நடிகையும் சோப்ரா தான்.



## சேரனின் 'பொக்கிஷம்'

மிகவும் ஆழமான கதைகளைத் தொடர்ந்து தந்துவரும் இயக்குநர் சேரன் அடுத்து இயக்கவுள்ள படம் 'பொக்கிஷம்'. இப்படத்தின் நாயகனாகச் சேரன் நடிப்பதாக முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், இப்போது நாயகனாக முரளி நடிக்கிறார். முரளியின் தம்பியாக சேரன் நடிக்கிறார். நாயகியாக 'பாண்டவர் பூமி' ஷமிதாவிற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

...த்த படம்
...ம் மோப்பம்
...ராம. ஊம்...
...க ஒரு பாடலில்
...மணியின் வயிற்றில்
...அடடே...திருப்பதிக்கே
...தான் கால்ஷீட்டுக்களைக்
...ாராம் வாரிசு நாயகன்.

## பூலான் தேவி கெட்டப்பில் சிம்ரன்

பொன்னம்பலம், கனல் கண்ணன் ஆகிய ஸ்டண்ட் மாஸ்டர்கள் கதாநாயகனாக நடிக்கத் தொடங்கி விட்டார்கள். இவர்களைத் தொடர்ந்து இன்னொரு ஸ்டண்ட் மாஸ்டரான ரம்போ ராஜ்குமார் என்பவரும் நடிக்கவுள்ளார்.

கே. ராஜேஸ்வர் இயக்கும் 'கோவில் பட்டி வீர லட்சுமி' என்ற படத்தில் வில்லன் வேடத்தில் நடிக்கிறார். இப்படத்தில் வீர லட்சுமியாக, பூலான் தேவி கெட்டப்பில் நடிக்கிறார் சிம்ரன்.

## இரட்டை வேடத்தில் ஜோதிகா

நடிகைகளில் இரட்டை வேடம் போடுவது மிகக்குறைவு என்று தான் சொல்ல வேண்டும். 'மாயா பஜார்' படத்தில் ஊர்வசி, அதன் பின்னர் 'கோட்டை மாரியம்மன்' படத்தில் ரோஜா ஆகியோர் நடித்தனர்.

இப்போது ஜோதிகாவும் ஓர் படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கவுள்ளார். கன்னடத்தில் தயாரிக்கப்படும் 'பாசிகர்' என்ற படத்தில் ஜோதிகா நடிக்கவுள்ளார்.

## நடிகைன்னு எதுவும் எழுதலாமா...?

'சூலம்' தொடரில் சவலட்சுமியோடு மல்லுக்கு நிற்கும் நிர்மலாவை ஞாபகமிருக்கா?! இல்லாமல் என்ன? தீர்க்கமான பார்வை, வில்லத்தனமான வேலைகள் என பொம்பளை நம்பியார் மாதிரி சின்னத்திரை வட்டாரத்தில் பெயர் வாங்கிய நடிகை!

அவரது குடும்பத்தையே சந்திக்கு இழுக்கற மாதிரி 'டாக்டர் பிரகாஷ்' விவகாரத்தில் சம்பந்தப்படுத்தி செய்தி பரவிக்கிடக்கிறது. இது பற்றி அவரிடம் கேட்டபோது...

"அப்பாவுக்கு ட்ரீட்மெண்ட் எடுக்கப் போனப்போ ஒரு டாக்டரா அவரை எனக்குத் தெரியும் அவ்வளவுதான். மத்தபடி அவருக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் எப்பவோ நடிச்ச படத்தோட ஸ்டில்லை எடுத்துப் போட்டு என் பேரை ரிப்பேர் பண்ண முயற்சிக்கிறாங்க" என்று வருத்தப்படுகிறார்.

இவர் மறைந்த நடிகர் ஜெய்சங்கரின் தம்பி மகள். சின்னத்திரைக்கு வருவதற்கு முன்பே படங்களில் நடித்திருக்கிறார். முதல் படத்திலேயே நீச்சல் உடை போட்டுக் கலக்கியவர்.

"நடிகைன்னா என்னவேணாலும் எழுதிடறாதா? அவளுக்கும் மனசு இருக்கு. வாழ்க்கை இருக்கு. இப்படிக் கன்னா பின்னான்னு எழுதினா என்ன அர்த்தம்? என்னைப் பத்திச் சொல்றவங்க நான் நடிச்சதா சொல்ற 'வீடியோ டேப்'பைக் கொண்டுவந்து காட்ட முடியுமா? வெறுமனே பத்திரிகை பரபரப்புக்காக சம்பந்தமே இல்லாத என்னோட வாழ்க்கையை சீரளிச்சிடாதீங்க ப்ளீஸ்" என்று கையெழுத்து கும்பிடுகிறார்!

## என்னிதயத்துடிப்பு!

என்னினிய நண்பர்களே!
சுமக்க முடியாத வேதனை,
சொல்ல முடியாத மௌனம்,
ஆற்றமுடியாத மனது,
இவற்றிடையே என்னிதய இதழ்கள்
விம்மியழுவது எனக்கு மட்டுமே
தெரிகிறது!

உங்கள் நட்பினால்
உங்களைப் பிரிந்து செல்லும்
பாதைகளில் கிடந்த
முட்கள் குத்தியதில்
பாதங்களில் மட்டுமல்ல
இதயத்திலும்
குருதி கொப்பளிக்கிறது!

உங்களைப் பிரிந்து விட்ட
என்னுணர்வுகளின்
நிஜத்துக்காய் உயிர்
துடிதுடித்து அழுகிறது
என் மனது!

என்னுணர்வுகளை
எவரும் அறியாமல்
ஒவ்வொருவராய்
பிரிந்து செல்கின்றபோது
வெற்றுதடுகளால்
சிரித்துக் கொள்கின்றேன்!

இறைவனே!
இனியாவது சிரித்துக்
கதைத்துப் பேசும் நண்பர்களை
நிஜமாகவே தரமாட்டாயா?

சி. முரளிதரன்,
தேசிய கல்வியியற்கல்லூரி, யாழ்ப்பாணம்.

## எனக்குள்ளேயே நான்!

வாசம் தந்து
மறைந்த மலரல்ல நான்
என் நிலவிற்கு ஒளி கொடுக்க
பிறந்த சூரியன் நான்
முகவரி தேடி
பூமி எங்குமா உன் பயணம்?
பூக்கள் தோறும் கேட்டாய்
வானமெங்கும் வீணை மீட்டினாய்
உன் இதயத்தைக் கேட்டாயா?
அங்கே கேட்குமடா - என்
காதலின் ராகம்

கண்ணா...
என் கல்லறையின் கற்களும்
உனக்காய்
ஓர் காதல் கோட்டை கட்டுமடா...
நம் காதலை
உணர்வெனும் பேனா கொண்டு
அதரத்தின் வழியால் உன்
உள்ளத்தில் எழுதினேன்
புத்தகத்தில் இனி எதற்கடா?

உன் விழியின் நீர் கொண்டு
கால முட்களுக்கிடையில் - காதல்
ரோஜாவை மலரச் செய்தாயடா!-இதோ
இன்று இவள் இதயத்தில்
உதிரம் முத்துக்களாகின்றது

இன்னும் காத்திருப்பேன்
என் நினைவுகளுக்கு ஒத்தடம் தர
மீண்டும் ஒருநாள் திரும்புவாயென்று...
அதுவரை...
என் முகவரி எனக்காய் வரையும்
கவிகளை இவள் இதய
அஞ்சல் பெட்டி
சுமந்துகொண்டிருக்குமடா?

ஜா. மிஸ்மீரா, புத்தளம்.



## தேன் கிண்ணம்

## எப்போதும் போலவே!

உதடுகள் விரித்துச்
சிரிக்கத் தான் இல்லை!
பற்களையேனும் (சரி)
பார்க்கிறேன்!
ஒருமுறை என்னைக்
கடித்துவிட்டுத் தான்
போயேன்!

வார்த்தை தான் இல்லை!
ஏன்? உன் வாய்க்குள்ளே
எச்சிலுமா ஊறவில்லை?
என் முகத்தைப் பார்த்து
நன்றாகத் துப்பித்
திட்டிவிட்டேனும்
போயேன்!

என்னை ஸ்பரிசிக்கத்தான்
உன் விரல்கள் விரும்பாது
நீ நகங்கள் கூடவா
வளர்க்கவில்லை? பலமுறை
கிள்ளிக் காயப்படுத்திவிட்டுப்
போயேன்!

உனக்கு என்னைப்
பார்க்கத்தான் சகிக்கவில்லை
போகட்டும் - வேறெங்கோ
பார்க்காமல்
பாதையையேனும்
ஒழுங்காகப் பார்த்துப்
போயேன்!

இப்போது கூட
நீ என்னைக் கடந்தே
போகிறாய்...ம்...
எப்போதும் போல
இன்றும்
நான் உன்னையெண்ணி
அழுதுகொண்டே
போகிறேன்!

சம்பூர், எம். வதனரூபன்.

## இயற்கையின் சீற்றம்

முற்றத்து அரைவானில்
முற்றிலும் இத்துப்போன
கூரையின் ஈர்க்குகளில்...

சொட்டுச் சொட்டாய்
வடியும் மழைத் துளிகளை
சிமிட்டாமல் சீர் பார்க்கும்
விழிகள்!

பத்தும் பறந்திடும்
பசியிலே பாதி ரொட்டியும்
பாலில்லா தேநீரும் பருகும்
மழலைகள்!

விடிவெள்ளி எதிர்பார்த்து
தூக்கம் விழித்து
வரம்போரம் காவல் காக்கும்
தலைவனும்!

உச்சி வெயிலிலும்
உடலையும் வருத்தி
சிந்திய வியர்வையில்
சிரித்திடும் நெற்கதிர்களும்!

விட்டது மழையென
விரைவுடன்
வெட்டிச் செல்லும்
கூலிகள்!

கட்டுக்கட்டியும்
கடைசி வரை
சூடும் போட்டதும்...

மிச்சமில்லாமல்
அடித்துச் சென்று விட்டதே!

கூழுக்கும் வழியில்லா
ஏழையின் நெஞ்சத்தைக்
கூறு போட்ட வெள்ளம்!

கை. ரமேஸ், பொத்துவில்.

## அர்த்தம் காண்பித்த பைத்தியம்!

இப்போதெல்லாம்
அவனுக்குச்
சிரிப்பு மட்டுந்தான்:

ஒரு நாளைக்கு
முன்னூறு தடவைக்கு மேல்
முகம் கழுவுவதும்
துடைப்பதும்...

நிமிடத்துக்கு நிமிடம்
டௌசர் மாற்றுவதும்
ரீசேட் அணிவதும்...

பவுடர் பூசுவதும்
தலைக்கு
எண்ணெய் வைப்பதும்...

கண்ணாடி பார்ப்பதும்
பின்னர்
பின்னாடி ஓடிச்சென்று
வீதியைப் பார்ப்பதும்...

சைக்கிளைத் தள்ளுவதும்
சேலைத் துண்டால்
அதைத் துடைப்பதும்
இடைக்கிடை
தானும்
'குளோன்' பூசிக்கொள்வதும்...

வீட்டிலுள்ளோர்
பயந்தார்கள்!
ரோட்டில் கண்டோர்
வியந்தார்கள்!

இவனுக்கென்ன பைத்திமா...?
பைத்தியந்தான்!!

நாலைந்தாண்டுகளாக
பிச்சைக்காரனைப் போல்
பின்னால் அலைந்த
அவனுக்கு நேற்றுத் தான்
அவள் விருப்பம் சொன்னாள்!


வாழைச்சேனை, ஷல்மானுல் ஹரீஸ்.

## முடிவெடுங்கள் காத்திரமாய்...

சுதந்திரக் காற்றைச் சற்றும்
சுதந்தரிக்காது சுற்றித்திரியும்
செல்லரித்த சில்லறைகளே!
☆☆
ஊமையாகிப் போன
உயிர்த்துடிப்புக்கள்-உம்மில்
ஓரங்கட்டப்பட்டுச்
சிதறவிட்ட சிந்தனைகள்
அர்த்தமற்று நிதம்
பூச்சியமாய்
அலைக்கழிகின்றதே தினந்தினம்
உருக்குலையும்
எம்மினப் புனிதங்களை
புதினங்களாக்காதே
நாளை அர்த்தமற்ற
அரவணைப்புக்கள் சில
வாக்கிற்காக வாசற்படியைத்
தட்ட வருகின்றன-நீயும்
சொர்ப்பனங்கள் துளிர்விட
தினம் உதிர்ந்த உதிரும்
உறவுகளைச் சிந்திக்காது
வண்ணமடித்து மதில்களில்
மந்திகளாய் பல்லிளித்து நிற்கிறாய்!
வாய் வலிக்காது
வாக்குறுதிகளைத் தினம்
வாரியிறைக்கிறாய்!
எத்தனை தேர்தல்களில்
நித்தமும் ஏமாந்து
சத்தமாய் நீர் உரைத்த
தத்துவங்கள் அனைத்தையும்
மொத்தமாய் செவிமடுத்தோம்!
இன்று
அத்தனையும் பூச்சியமாய்...!
☆☆
இனியும் முடிந்த முடிவுகளுக்காய்
நாம் இறந்த இதயங்களுடன்
உறைந்திருக்கப் போவதில்லை
இன்றுவரை அர்த்தமற்ற
அரங்குகளில் அரங்கேறும்
ஆணிவேரற்ற உமது
அர்ப்பணிப்புக்களை வெளிச்சம்
போட்டுக் காட்டிடுவோம்!
எனவே சிரம் நிமிர்ந்து
சிந்தியுங்கள்!
சல்லடை போடும் சன்னங்களும்!
புதிர் போடும் புல்லட்களும்!
எமக்குத் தேவை தானா?
சிந்தியுங்கள் சீக்கிரமாய்!
முடிவெடுங்கள் காத்திரமாய்!!

த. இரவிவர்மன், வவுனியா.

## பேனா நண்பர்கள்



பெயர்:
ஏ.எச். ஹாரிஸ்
வயது: 22
முகவரி:
P.O.BOX- 9259
HOLLY MAKKAH
K.S.A.
பொழுது போக்கு:
பத்திரிகை, ரி.வி.



பெயர்:
ஏ.பி. ரஜனிகாந்
வயது: 17
முகவரி:
மெயின் வீதி,
பழுகாமம்-01,
பெரியபோரதீவு.
பொழுது போக்கு:
கிரிக்கெட், பத்திரிகை.



பெயர்:
வ. சதீஸ்
வயது: 19
முகவரி:
கந்தையா வீதி,
தம்பட்டை-02.
பொழுது போக்கு:
வழமையானவை.

## வாரம் ஒரு வார்த்தை

முதுமையை நாம யாரும் ஆசைப் பட்டு கூப்பிடறதில்லை. ஆனா அதுவா ஆசைப்பட்டு நம்மை நெருங்கி வந்துக் கிட்டிருக்கு.

அதுகூட பாருங்க விவரம் தெரியாமே பெண்கள்ன்னா கொஞ்சம் சீக்கிரமா வந்துடுது. ஆண்களோட ஒப்பிட்டுப் பார்க்கறப்போ பெண்களுக்கு முதுமை சீக்கிரமே வந்துடுது! இது ஒரு பொதுவான அபிப்பிராயம். விஞ்ஞான ரீதியா இது உண்மையா?

### பெண்களின் முதுமை!

இதைத் தெரிஞ்சிக்கறதுக்காக அமெரிக்காவுலே 'யேல்' பல்கலைக்கழகத்துலே ஒரு ஆராய்ச்சி நடந்திருக்கு. அதிலேருந்து சில முக்கியமான தகவல்லாம் கிடைச்சிருக்கு.

'மனுஷ உடம்புலே செல்கள் தொடர்ச்சியா இறந்துகிட்டே இருக்கும்! இதை 'செல்களில் இனப் பெருக்கம்'ன்னு சொல்றாங்க.

ஒரு குறிப்பிட்ட வயசு ஆகறப்போ, ஆண்களுக்கும் பெண்களுக்கும் புது செல் உண்டாகிறது குறைஞ்சுடும். அந்த சமயத்துலேதான் உடம்பிலே தசைகள் சுருங்க ஆரம்பிக்குது. அதனாலேதான் வயசான தோற்றம் உண்டாவது!

இப்ப நடந்த ஆராய்ச்சிகள்லேயிருந்து என்ன தெரியுதுன்னா... "இந்த செல்களின் இயக்கம் ஆண்களை விட பெண்களுக்கு சீக்கிரமாகவே குறைய ஆரம்பிச்சுடுது"ன்னு தெரிய வந்திருக்கு!

குறிப்பா எந்த வயசுலே இந்த இயக்கம் குறைய ஆரம்பிக்குது? அதை துல்லியமா சொல்ல முடியலே! இருந்தாலும் ஆண்களுக்கு 35 வயசுலே இது ஆரம்பிக்கும்ன்னா பெண்களுக்கு 30 வயசுலேயே இந்த இயக்கம் குறையலாம்ன்னு கண்டுபிடிச்சிருக்காங்க!

அதனாலேதான் பாருங்க. சில சமயம் கிட்டத்தட்ட ஒரே வயசுலே கல்யாணமான தம்பதிகளை கொஞ்ச நாள் கழிச்சி பார்த்தா. கணவனைவிட மனைவிக்கு வயசு அதிகமா தோணும்!

பல பேரு நினைச்சிக்கிட்டிருக்காங்க... குழந்தை பெறக்கறதுனாலே தான் பெண்களுக்கு முதிர்ச்சி அதிகமாகுதுன்னு! அது சரியில்லையாம். குழந்தை பேறுக்கும் முதுமைக்கும் சம்பந்தமில்லைன்னு சொல்லுது இந்த ஆராய்ச்சி.

அது இருக்கட்டும். பெண்கள் உடம்புலே சீக்கிரமா குறையற இந்த செல்களின் தன்மையை மேம்படுத்தறதுக்கு ஏதாவது வழியுண்டா? புது ஹார்மோன் எதையாவது கண்டுபிடிச்சாதான் அது முடியும். 'ஜெனிடிக் கோடிங்' அப்படிங்கற புதிய துறையிலே இது சம்பந்தமான ஆராய்ச்சியெல்லாம் மும்முரமா நடந்துகிட்டிருக்கு. அதனாலே பெண்கள் அதிகமா கவலைப் பட வேணாம்.

உங்களுக்கு மட்டுமா அந்த கவலை. அதனாலே ஆண்களும்தான் ரொம்ப அவஸ்தை பட வேண்டியிருக்கு! எப்படிங்கறீங்களா? ஒரு பத்திரிகை நிருபர் ஒரு சினிமா நடிகையை பேட்டி காணப் போனார். அந்த அம்மா ஒரு 30 வருஷ காலமா சினிமாவுலே நடிக்கறவங்க. கேக்கக்கூடாத ஒரு கேள்வியை கேட்டுட்டார். அதாவது "உங்க வயசு என்ன்?"ன்னார்.

அந்த அம்மாவும் கொஞ்சம்கூட அலட்டிக்காமே "இந்த ஜூன் வந்தா 20 முடிஞ்சி 21 ஆரம்பம்!" ன்னாங்க.

இந்த நிருபர் திடீர்ன்னு புத்தி கலங்கினது மாதிரி தன் கையாலேயே தன் தலையிலே ஓங்கி ஓங்கி தட்டிக்கிட்டார். அந்த அம்மா...

"என்னங்க.. நான் ஏதாவது தப்பா சொல்லிப் புட்டேனோ? என் பதில் சரியில்லேன்னா நினைக்கிறீங்க?"ன்னாங்க. அதுக்கு இவர்...

"உங்க பதில் சரிதாங்க. என் கேள்விதான் சரியில்லே. இந்த கேள்வியை 20 வருஷத்துக்கு முன்னாடி உங்ககிட்டே கேட்டிருக்கணும். நான்தான் ரொம்ப லேட்! அதுதான் தட்டிக்கிறேன்!"ன்னு மறுபடியும் குட்டிக்கிட்டார்.

## இந்தவாரம் உங்கள் பலன்

10.03.2002 தொடங்கி 16.03.2002வரை

### கிரக நிலை

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், புதன் |
| மீனம் | - வெள்ளி |
| மேடம் | - செவ்வாய் |
| இடபம் | - இராகு, சனி |
| மிதுனம் | - வியாழன் |
| விருட்சிகம் | - கேது. |

சந்திரன் துலாம் விருச்சிகம் தனு மகரம் இராசியில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் விருத்தி, முயற்சிகள் பலிதம், பணவரவு, பெரியோர் உதவியுண்டு. உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் உள்ள தடைகள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஸ்டநாள்: புதன்,
அதிஸ்ட இல.: 5.

### இடபம்

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) எதிர்பார்த்த கருமங்களில் தடை. பொருள் விரயம். வீண் சிரமங்கள் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் உதவிகிடைக்கும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.

அதிஸ்டநாள்: திங்கள்,
அதிஸ்ட இல.: 4.

### மிதுனம்

(மிருகசீரிடத்து பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) காரியானுகூலம், செய் தொழில் விருத்தி, மறைமுக எதிர்ப்பு, கௌரவ குறைவு உண்டாகும். உத்தியோகத்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சி ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஸ்டநாள்: வெள்ளி,
அதிஸ்ட இல.: 6.

### கர்க்கடகம்

(புனர்பூசத்து நாலாம்கால், பூசம், ஆயிலியம்) முயற்சிகள் பலிதம், பொருள்வரவு, பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி ஏற்படும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு வந்து சேரும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.

அதிஸ்டநாள்: செவ்வாய்,
அதிஸ்ட இல.: 4.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழிலில் சிக்கல், மனக்கவலை, குடும்பத்தில் எதிர்பாராச் செலவுகள், வீண் பிரயாணம் உண்டாகும். உத்தியோகத்தர்கள் விழிப்புடன் செயற்படவும். மாணவர்களுக்குக் கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் அவதானத்துடன் செயற்படவும்.

அதிஸ்டநாள்: திங்கள்,
அதிஸ்ட இல.: 2.

### கன்னி

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) பெரியோர் நட்பு,காரியங்களில் வெற்றி, குடும்ப மகிழ்ச்சி ஏற்படும். உத்தியோகத்தில் ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் தீரும். மாணவர்கள் கல்வியில் மந்த நிலையடைவர். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்டநாள்: வெள்ளி,
அதிஸ்ட இல.: 7.

### சோதிட மாமணி தில்லை

### துலாம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்துமுன் முக்கால்) குடும்பத்தில் பிரச்சனை, மனக்கவலை, பொருள்விரயம்,வெளியிட பிரயாணம் உண்டாகும். உத்தியோகத்தில் மாற்றங்களைச் சிலருக்கு ஏற்படுத்தும். மாணவர்களுக்குக் கல்வி நிலையில் முன்னேற்றமுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஸ்டநாள்: புதன்,
அதிஸ்ட இல.: 3.

### விருட்சிகம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழிலில் மந்த நிலை, பணமுடங்கல், பெரியோர் மனஸ்தாபம், வெளியிடத்தால் மனக்கசப்பு ஏற்படும். உத்தியோகத்தில் ஏற்பட்டிருந்த கஷ்டங்கள் குறையும். மாணவர்கள் கல்வியில் திட்டமிட்டுச் செயல்படுவது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்டநாள்: திங்கள்,
அதிஸ்ட இல.: 1.

### தனு

(மூலம் பூராடம், உத்தராடத்து முதற்கால்) முயற்சிகளில் வெற்றி, பணவரவு, பெரியோர் உதவி, மறைமுக எதிர்ப்பு, கௌரவம் உண்டாகும். உத்தியோக ரீதியாக ஏற்பட்டிருந்த தொல்லைகள் மறையும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம் அடைவர்.

அதிஸ்டநாள்: செவ்வாய்,
அதிஸ்ட இல.: 4.

### மகரம்

(உத்தராடத்து பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) பெரியோர் உதவி, பணவரவு, குடும்ப மகிழ்ச்சி, வீண் செலவேற்படும். உத்தியோக ரீதியாக ஏற்பட்டிருந்த தடைகள் மறையும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி நிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஸ்டநாள்: புதன்,
அதிஸ்ட இல.: 2.

### கும்பம்

(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். பொருள் வரவு, பெரியோர் சகவாசம், குடும்ப மகிழ்ச்சி உண்டாகும். உத்தியோக ரீதியாக ஏற்பட்டிருந்த தடைகள் மறையும். மாணவர்களுக்கு கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஸ்டநாள்: வியாழன்,
அதிஸ்ட இல.: 7.

### மீனம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்தரட்டாதி, ரேவதி) முயற்சிகளில் தடையுண்டு, பொருள் விரயம், மனக்கவலை, குடும்பத்தில் வீண் பிரச்சனைகளுக்கு இடம் தரும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கோபத்துக்கு சிலர் ஆளாக நேரிடும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் விழிப்புடன் செயற்படுவது நல்லது.

அதிஸ்டநாள்: திங்கள்,
அதிஸ்ட இல.: 1.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## உங்கள் கணவர் நகரீகம் தெரிந்தவரா?



பழகும் விதத்தில், நடத்தையில், பேச்சில் என சகலதிலும் தன் கணவர் நாகரிக மானவராக நடந்து கொள்ள வேண்டும் என்றே எல்லாப் பெண்களும் விரும்புவர். ஆனால் பெரும்பாலான கணவன்கள் அப்படி அமைவதில்லை. உங்கள் கணவரும் அப்படித்தானா? உங்களை தர்ம சங்கடத்திற்குள்ளாக்கும் அவரது சில நடத்தைகளும், அதற்கான உங்கள் அணுகு முறைகளும்...

நீங்கள் எப்போது எந்த உதவியைக் கேட்டாலும் அதைத் தட்டிக் கழிக்க ஏதேனும் உடல் நலக் கோளாறைக் காரணம் காட்டுபவரா?

அவரது பிறந்த நாள், திருமண நாள் என எல்லா தினங்களுக்கும் மருந்து, மாத்திரைகளாக வாங்கிப் பரிசாகக் கொடுங்கள். மனிதர் நொந்து விடுவார். அடுத்த முறை உங்களிடம் அதே சாக்கைச் சொல்லித் தட்டிக் கழிக்க மாட்டார்.

பொது இடத்தில், உங்கள் தோழிகள் முன்னிலையில் என நினைக்கும் இடங்களில் எல்லாம் கொஞ்சமும் நாகரிகம் பார்க்காமல் பெரிதாக ஏப்பம் விடுபவரா?

.....எங்க மாமாகூட இப்படித்தான். அதனாலத்தான் எங்க அத்தை அவரை விட்டு ஓடிப் போயிட்டாங்க... என்று சும்மா சொல்லி வையுங்கள். அடுத்த முறை அவர் வாயிலிருந்து வெறும் காத்து கூட வராது.

பல பேர் சூழ்ந்திருக்க, வீட்டில் எல்லாரும் டி.வி. பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் கணவரோ, டி.வியில் வரும் அழகுப் பெண்களை வைத்த கண் எடுக்காமல் பார்த்து ஜொள் விட்டுக் கொண்டிருக்கிறார். மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று உங்களுக்கு மகா எரிச்சலா?

...இவர் எப்பவும் இப்படித்தான். டி.வில யாராவது புது டிசைன்ல புடவையும், நகையும் போட்டுட்டு வந்துடணுமே! உடனே அதை உத்து, உத்துப்பார்த்து அடுத்த நாளே அதே டிசைன்ல எனக்கும் வாங்கிட்டு வந்துடுவாராக்கும்... என்று சொல்லிக் கொள்ளுங்கள். பர்ஸைப் பத்திரப்படுத்தவாவது பல் இளிப்பதைத் தவிர்ப்பார் உங்களவர்.

எந்த இடத்திற்கும் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து பழக்கப்படாத நபரா உங்கள் கணவர்? அவருக்காக எல்லா இடங்களிலும் காத்துக் கிடப்பதே உங்களுக்கு வாடிக்கையாகி விட்டதா?

அவரது சட்டைப் பாக்கெட்டினுள் ஒரு குட்டி அலாரம் வைத்து விடுங்கள். அதில் நீங்கள் குறிப்பிடட நேரத்தைவிட அரை மணி நேரம் முன்னதாகவே செட் செய்து வைத்து விடுங்கள்.

வியர்வை நாற்றம் எட்டு ஊருக்கு வீசினாலும், அதைக் கொஞ்சமும் கண்டு கொள்ளாமல் எனக்கேன் என்று எல்லார் முன்னிலையிலும் வந்து நின்று விடுகிறாரா?

அவருக்கே தெரியாமல் அவரது உடைகள், உள்ளாடைகள் உட்பட அனைத்திலும் மூச்சை அடைக்கும் அளவுக்கு சென்ட்டை அடித்து வைத்து விடுங்கள்.

நீங்கள் உங்கள் தோழிகளுடன் பேசிக் கொண்டிருக்கும்போது சம்பந்தமே இல்லாமல் உங்கள் கணவர் திடீரென மூக்கை நுழைத்து எதையாவது உளறுகிறாரா?

உங்கள் தோழிகள் அவரைப் பற்றிச் செய்யும் கிண்டல், கேலிகளை அப்படியே அவரிடம் சொல்லி விடுங்கள். அதிகம் பேசாத ஆண்களைத்தான் அவர்களுக்குப் பிடிக்கும் என்றும் சொல்லி வையுங்கள்.

கடைகளுக்குச் செல்லும் போது அங்கு வரும் பெண்களிடமும், விற்பனைப் பெண்களிடமும் அனாவசியமாக வழிகிறாரா? உடனே அவர்கள் பக்கத்தில் போய் நின்று கொண்டு நீங்கள் எதையோ தொலைத்து விட்டதாகவும், அதற்கு உதவுமாறும் உங்கள் கணவரைக் கூப்பிடுங்கள். அவர் அந்தப் பக்கம் நகர்ந்ததும், அந்தப் பெண்களிடம் உங்களவர் ஏதேனும் பணமோ, உதவியோ கேட்டால் செய்ய வேண்டாம் என்று சொல்லி வையுங்கள். அடுத்த முறை கடைக்கு வரும்போது உங்கள் கணவர் பக்கமே திரும்ப மாட்டார்கள் அந்தப் பெண்கள்.




செல்வாஸின் 7

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் J

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 16- 03-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
அரியாலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

திருமதி ஏ. ஷர்மிளா,
883, நாவலர் வீதி, அரியாலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


நீ தான் இங்கே இளவரசி. தலைவி, ராணி! அனிதா... என்னை மாதிரி ஒரு சிக்கலான ஆசாமிக்கு தின வாழ்க்கையில பல வேஷங்கள் இருக்குது. பல முகங்கள்... ஜப்பான்கானோட ஒரு முகம், கவர்ன்மெண்ட் அதிகாரிங்களுக்கு ஒரு முகம், ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில ஒரு முகம், யூனியன் கூட ஒருமுகம், மைசூர்ல ஒரு அகர்பத்தி ஃபக்டரி இருக்குது... அங்க குடிசைத் தொழிலாளி கூட ஒரு முகம், அப்பா கூட ஒண்ணு, அம்மா கூட ஒண்ணு... சாயங்காலம் நான் ஒரு இலக்கியக் கூட்டத்தில பேசினேன். அங்க ஒரு முகம்... வரவேற்புரை, அறிமுகஉரை, தலைமை உரைன்னு! எத்தனையோ வேஷங்கள் போட வேண்டியிருக்கு. இவங்க அத்தனை பேரும் என்னைப் பங்கு போட்டுக்கறாங்க!...

இன்னிக்கு ஆபீஸ் அறையில் என்னையும் சீதளையும் பார்த்த போது உனக்கு ஷாக்கா இருந்திருக்கும். "என்னடாது... அத்தனை சகஜமாத் தொட்டுப் பேசறாளேன்னு... அதனால அவ கொத்தாகப் பிடித்து ரொம்ப மோசம் நீ என்றாள்.

"ஏன்?" என்றான் வைரவன்.

"ரொம்ப கொஞ்சறே... போறும்... திகட்டறது" என்றாள் அனிதா.

"இப்பத்தான் வரவேற்புரையே முடிஞ்சிருக்கு. இதுக்கப்புறம் அறிமுக உரை, அதுக்கப்புறம் தலைமை உரை, நன்றியுரை... எத்தனை இருக்கு" வைரவன் சொன்னான்.

அனிதாவுக்கு தன் உடல் முழுவதும் மிதக்க, அந்தத் தருணத்தில் அந்த எச்சரிக்கைக் குணம் எழ, எதிரே காற்றில் ஆடிய திரையைக் கவனித்தாள்.

"யாரோ பார்க்கிறா" என்றாள்.

"பார்க்கட்டும்... என் பொண்டாட்டிய நான்..." வைரவன் சொல்ல,

"வைரு.. ப்ளீஸ் ப்ளீஸ்.. இங்க வேண்டாம்ப்ளீஸ்..." என்றாள் அனிதா.

"பின்ன எங்க?" வைரவன் கேட்டான்.

"இப்ப வேண்டாம்."

"பின்ன எப்ப?"

"யாரோ பார்க்கறா..."

"டோண்ட் பி ஸில்லி..."

"கொஞ்சம் இரு" என்று டெலிபோனில் பதின்மூன்று எண்களை ஒத்தினான்.

அனிதா அவன் கவனத்தைக் கலைக்க முற்பட்ட போது, மறுபடி போன் ஒலித்தது.

"இன்னொரு போன்..." படுக்கையிலிருந்தபடியே அதை எடுத்து "ஹலோ" என்றான். சட்டென்று எழுந்து உட்கார்ந்தான்... சட்டையை மாட்டிக் கொண்டான்.

"அனிதா... எழுந்திரு, போகலாம்."

"எங்கே?"

"நம் ஹனிமூன் இப்பவே துவங்குது. வெளிநாடு போறோம். அஞ்சு நிமிஷத்தில கிளம்பு..."

வைரவனும், அனிதாவும் வெளிநாட்டுப் பயணத்துக்காக ராத்திரியில் அவசர அவசரமாகக் கிளம்பினார்கள். அனிதாவுக்கு உடுக்கத் துணி எடுத்துக்கொள்ளக் கூட நேரமில்லை.

"எல்லாம் சிங்கப்பூர்ல வாங்கிக்கலாம்... நீ புறப்படு.." என்றான் வைரவன். பதற்றம் சற்று அதிகமாகவே இருந்தது.

# அனிதாவின் காதல்கள் 35

கூட படுக்கைல படுத்திருப்பேனான்னு நினைக்க வேண்டிய அவசியமில்லை. அந்த மாதிரி ஏதாவது எண்ணங்கள் இருந்தா சுலபமா அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு இருக்க முடியும். ஏன்... உன் ஃப்ரெண்டு மதுகூடத்தான் நேரா என்னை வந்து கேட்டுது! அனிதா... நம்புறியோ இல்லையோ... நீ ஒருத்திதான் எனக்கு இந்த மேம்போக்கான அத்தனை முகங்களையும் வேஷங்களையும் கடந்து ஒரே ஒரு ஸ்திரமான காதலி.

நான் வேற யாருக்கும் சொந்தமில்லை. அவங்களுக்கெல்லாம் நான் ஒரு பஸ் ஸ்டாண்டு போல. அப்பப்ப என் நிழல்ல ஒதுங்கறாங்க... அவ்வளவுதான்! ஆனா... நீ? நான் நிக்கிற பூமி நீ தான்" என்றான்.

அனிதா பேசாமல் மௌனமாக, வைரவன் அவள் படுக்கையருகில் காலடியில் உட்கார்ந்து கொண்டு அவள் கால்களில் நகத்தை ஆராய்ந்தான். சின்னதாக ஒரு ஸ்கொட்ச் ஊற்றிக்கொண்டான்.

"எனக்கு இது பிடிக்கலை" அனிதா சொன்னாள்.

"எது?"

"குடிக்கறது."

"எனக்குப் பிடிக்குதே!"

அனிதா முகத்தைத் திருப்பிக் கொள்ள, அரை பெக் ஸ்காட்சுக்காகச் சண்டை போட வேண்டாம் என்று அதை ஸிங்கில் கொட்டினான் வைரவன்.

"சிகரெட்டும் பிடிக்கலையா?" வைரவன் கேட்க,

"பிடிக்கலை" என்றாள் அனிதா.

"சரி... உனக்குப் பிடிச்சமாதிரி நடந்துக்கறேன்.."

அவன் அவசரத்தில் தன் கோட்டைக் கழற்றும் போது, பாஸ்போட், விமான டிக்கெட்டுக்கள் தரையில் சிதறின. அனிதாவைக் கட்டிலிலிருந்து சரித்து இறக்கினான். டெலிவிஷன் அர்த்தமில்லாமல் ஓடிக்கொண்டிருந்தது. ஸிடி பியேளயரிலிருந்து வயலின் இசை சுத்தமான ஓடைநீர் போல் வடிந்து கொண்டிருந்தது. அனிதாவை முழுவதுமாகப் புரட்டித் தன் மார்பின் மேல் வைத்துக் கொண்டான். மெள்ள மெள்ள மிக மெள்ள இடமாற்றங்கள் ஏற்பட்டு அவள் நெஞ்சில் நிரம்பி மூச்சு முட்டினான். அவன் கைகள் எங்கெல்லாம் செல்கின்றன என்று அவளால் தீர்மானமாகச் சொல்ல முடியவில்லை. அனிதாவின் அடிப்படை ஆசைகள் எழுப்பப்பட்டு, அவன் காதுகளைப் பிடித்து முடியைக்



"அந்தத் திரை!"

வைரவன் ஆயாசத்துடன், "நீ தேற மாட்டே" என்று அந்தத் திரையை விலக்கி "பாரு..." என்றான். அங்கே யாரும் இல்லை.

**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

அப்போது டெலிபோன் ஒலிக்க, அதை எடுத்து வைரவன் பேச ஆரம்பித்தான்.

"ஜோஷி தானே பேசறது?" என்று சொல்லிவிட்டுப் பதற்றத்துடன் எழுந்தான். அவன் முகம் இறுகியது.

"டெலிபோன் இல்லாத ஒரு தீவுக்குப் போகணும்" என்ற அனிதா, வைரவன் தோளைக் கைகளால் மாலையிட்டாள். அவன் கொஞ்சம் ஸ்காட்ச் ஊற்றிக் கொண்டு சிகரெட் பற்ற வைத்தான்.

"இப்பத் தான் வேண்டாம்னு சொன்னேன்" என்று அனிதா அதைப் பிடுங்கிய போது, "அனிதா... அங்கே ஏதோ முக்கிய ப்ராப்ளம் என்றான்."

அனிதா அவன் தோள்களில் சுற்றிக் கொண்டு, "எல்லாம் காலைல பார்த்துக்கலாம்..." என்றாள்.

"அப்பா, அம்மா கிட்ட சொல்லிட்டுப் புறப்பட வேண்டாமா?"

"அதெல்லாம் அப்புறம் போன் பண்ணிக்கலாம்..." என்றான்.

மீனம்பாக்கம் விமான நிலையம்வரை வைரவனே ஓட்டிக்கொண்டு வந்த காரை, அங்கு டிரைவர் பொறுபேற்றுக் கொள்ள... வைரவன் ஆபீஸிலிருந்து மற்றொரு ஆசாமி வந்து நின்றான்.

அவனிடம் ஃப்ளைட் "சரியான டயத்துல வருதாமா?" என்று கேட்டான் வைரவன்.

"வந்தாச்சு... நீங்க இமிக்ரேஷன் க்ளியரன்ஸ் வாங்கிட்டுப் போன உடனே புறப்பட்டுடும்..."

"இமிக்ரேஷன்ல பிரச்சனை இருக்காதே?"

"இருக்காது.. ஸ்ரீராம்கிட்ட சொல்லி வைச்சிருக்கேன்..."

அந்தச் சிப்பந்தி அனிதாவைப் பார்த்து "அவங்களையும் கூட்டிட்டுப் போறீங்களா?" என்றான்.

"ஆமாம்.. இங்க எதுவும் தகராறு வந்திடக் கூடாது.. ஜோஷி என்ன சொல்றான்?" வைரவன்.


"எதுக்கும் தயாரா இருக்கணும் நான்..."

வைரவன் இரண்டு சிகரெட்டுகளைப் பற்ற வைத்து அணைத்ததை அனிதா கவனித்தாள்.

[அனிதா வருவாள்...]



காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்குந்திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்
-சுப்பரமணியப் பாரதியார்-



## பாப்பா முரசு சிறுகதை


# புத்தியால் ஜெயித்த ஜெசிந்தன்

எப்போதும் வகுப்பில் முதல் மாணவனாக வரும் ஜெசிந்தன்... கடைசி வகுப்பேற்றுத் தேர்வில் மூன்றாவது மாணவனாக வந்தான். "எப்போதுமே முதல் மாணவனாய் வரும் நீ, ஏனடா மூன்றாம் இடத்திற்குப் போனாய்?" என்று அவன் அப்பாவும், அம்மாவும் சேர்ந்து திட்டியதைப் பொறுக்காமல் ஜெசிந்தன் கோபத்துடன் வீட்டை விட்டு வெளியேறி காட்டை நோக்கி பயமின்றி நடந்தான். நடந்து வந்த களைப்பில் ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்தான். தன்னையே அறியாமல் மரத்தின் அடியிலேயே கண் அயர்ந்து உறங்கி விட்டான்.

கண்களை விழித்துப் பார்த்த ஜெசிந்தனுக்குப் பாதி உயிரே போய் விட்டது போல் இருந்தது. அவனைச் சுற்றி இரண்டு ராட்சதர்கள் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் அவனைக் கடித்துக்குதறிவிடும் வெறியில் இருந்தனர்.

ராட்சதர்களில் ஒருவன் மற்றவனைப் பார்த்து "நீ இவனுடைய கழுத்து ரத்தத்தைக் குடித்துக்கொள். நான் இவன் கால் ரத்தத்தைக் குடிக்கிறேன்" என்றான்.

இனிமேல் கூச்சல் போட்டுப் பயனில்லை என்று நினைத்த ஜெஸிந்தனுக்கு மனதில் ஒரு எண்ணம் உதித்தது. நம் உயிர் போகப் போவது உறுதிதான். என்றாலும் இவர்களிடமிருந்து தப்பிக்க ஏதாவது ஒரு முயற்சி செய்யலாமே? என்ற நோக்கில் தன் திட்டத்தை செயல்படுத்த



கைகொட்டி உரத்த சத்தத்துடன் சிரித்தான்.

ஜெசிந்தன் சிரிப்பதைப் பார்த்து ஒன்றும் புரியாமல் திகைத்த ராட்சதர்கள், "ஏய்! உனக்கு சாவதற்கு பயமில்லையா? சாகப் போகிற நேரத்தில் அழாமல் ஏன் சிரிக்கிறாய்?" என்றனர்.

'நான் சாகப் போகிறேனா? யார் சாகப்போகிறார்கள் என்பதைப் பார்ப்போம்' என நினைத்தபடி ஜெசிந்தன் மீண்டும் சிரித்துக் கொண்டு,

"என் ரத்தம் குடித்தால் உங்கள் இருவரில் ஒருவர் கண்டிப்பாகச் செத்துப் போவீர்கள். ஏனென்றால் என் கழுத்து ரத்தம் மட்டுமே நல்லது. கால் ரத்தத்தில் விஷம் கலந்துள்ளது. அதைக் குடிப்பவருக்கு உடனே மரணம்தான்!" என்றான்.

உடனே இரண்டு ராட்சதர்களும் ஜெசிந்தனின் கழுத்தை நோக்கிப் பாய்ந்தனர்!

அப்போது சுதாரித்துக் கொண்ட ஜெசிந்தன், "என் கழுத்து ரத்தம் உங்கள் இருவருக்கும் போதாது. இதனால் ஒரு காரியம் செய்யலாம். உங்கள் இருவரில் யார் சக்தியுள்ளவரோ அவர் என் கழுத்து ரத்தத்தைக் குடித்துக் கொள்ளலாமே!"என்றான்.

யோசிக்கத் தெரியாத ராட்சதர்கள் இருவரும் உடனே தங்களுக்குள் பலப்பரீட்சை நடத்தினார்கள். இருவரும் முட்டி மோதி அடித்துக் கொண்டு, கட்டிப்புரண்டு சண்டையிட்டு இறுதியில் ரத்த வெள்ளத்தில் மிதந்து உயிர் விட்டனர். கடைசியில் ஜெசிந்தன் போட்ட திட்டமே ஜெயித்தது. தனது புத்தியால் உயிர் பிழைத்த ஜெசிந்தன் இரு ராட்சதர்களும் வைத்திருந்த பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தான். தங்கங்களும், ரத்தினங்களுமே இருந்தது. அத்தனையையும் எடுத்துக் கொண்டு, தன் பெற்றோர் மீது கொண்ட கோபம் மறந்து வீட்டை நோக்கி நடந்தான்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **16.03.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **437**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 435

பரிசுக்குரியவர்:
பாதிமா நிஷ்மா நஜீம்,
320, இரத்தினபுரி வீதி, பலாங்கொடை.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| யு. நிலாவாசன், கமு/இராமகிருஷ்ணா பாடசாலை, அக்கரைப்பற்று. | யோகராசா கலாரஞ்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. |
| எம். ஐ. தில்றஸ் பானு, அல்-மனார் வீதி, மருதமுனை-2, கல்முனை. | ஆர். வேல்விழி, இ.கி. வித்தியாலயம், மண்டூர். |
| த. நிஸ்ரின், உடதலவின்னை, மடிகே, கட்டுகஸ்தோட்டை. | யசீர் அரபாத், வெலித்துறை முஸ்லிம் ம.வி., பலப்பிட்டிய. |
| சந்தியா, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, பதிய நகரம், அநுராதபுரம். | கவசெல்வி பஸ்லினா, அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரி, திஹாரிய. |
| சு. சத்தியதர்ஷன், சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை. | எம். எ.ப். பாத்திமா ரிப்னா, மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. விதையில்லாமல் படரும் கொடி, விடிந்தால் மலரும் கொடி அது என்ன கொடி?

2. காலில்லாப் பந்தல், காணுமிடமெல்லாம் களைகட்டியிருக்கும் பந்தல் அது என்ன பந்தல்?

3. கொம்படா கொம்படா புளியங்கொம்படா நின்று தாக்கடா உயிரைப் போக்கடா அது என்ன?

4. ஒல்லியாயிருப்பாள், உயர்ந்திருப்பாள், பிறருக்கு ஒளிகொடுத்து உயிர் துறப்பாள் அவள் யார்?

5. பொந்தில் பொந்து புளியம் பொந்து பொந்திலிருக்கும் தேவி உயிரை வாங்கும் தாவி அது என்ன?

**விடைகள்**

1. கோலம் 2. வானம்
3. துப்பாக்கி
4. மெழுகுவர்த்தி 5. வெடி

பாத்திமா நஸ்ஹா,
அல்.புர்ஹான் மு.ம.வி.
கலேவெல.

## தெரிந்து கொள்ளுங்கள்

* அயர்லாந்து, ஐஸ்லாந்து, நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் பாம்புகளே கிடையாது.
* சிலவகைப் பூச்சிகளின் தலையை வெட்டினாலும், அவை ஒரு வருடம் வரை உயிர் வாழும்.
* சந்திரனின் பரப்பில் 59% வீதத்தையே நாம் புவியிலிருந்து பார்க்க முடியும்.
* முதலாவது சார்க் விளையாட்டுப் போட்டி இடம்பெற்ற நாடு நேபாளம் ஆகும்.
* வண்ணத்துப்பூச்சி தன் பின்னங் கால்களால்தான் சுவையை அறிகின்றது.
* கடலின் அடித்தளத்தில் வாழும் "ஆங்கலர்" எனும் மீன் தனது திறந்த வாயிலிருந்து ஒளியின் உதவியால் உணவை ஈர்க்கும்.
* பாம்புகள் ஒலியலைகளை அவற்றின் நாக்குகளால் தான் அறிகின்றன.
* நாயின் ஆயுட்காலம் சுமார் 15 ஆண்டுகளாகும்.
* "நயகரா" நீர்வீழ்ச்சி அமெரிக்காவிலுள்ளது.
* மிகப்பெரிய விண்மீன் "பிளாஸ்கட்" ஆகும்.

எம்.எஸ்.ரமீஷா,
பது/பசறை தமிழ் மகா வித்தியாலயம்.
(தேசிய பாடசாலை) பசறை.


## நீர் யானை



நீர்யானையின் இரை இளம் தளிர்கள். அது ஒரே இரவில் 40 கிலோ தழைகளைத் தின்று அழித்துவிடும். தாவரங்களுக்கு இது எதிரி தான். நீர்யானை, ஒரு நாளின் பெரும் பகுதியை நீரிலேயே கழிக்கும். தண்ணீருக்குள் முழுவதுமாக அமிழ்ந்திருந்தாலும், எளிதாகச் சுவாசிப்பதற்கு ஏற்றபடி இதன் மூக்குத் துளைகள் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். இது இரவு நேரங்களில் நீரிலிருந்து வெளியே வந்து மேயும்.

## முதலாவது கலங்கரை விளக்கம்

எகிப்து நாட்டின் புகழ்பெற்ற துறைமுகம் அலெக்ஸாண்டிரியா. அந்தத் துறைமுகத்தின் பரோஸ் என்னும் கலங்கரைவிளக்கமே உலகில் முதன்முதலாகக் கட்டப்பட்ட கலங்கரைவிளக்கம். பரோஸ் கலங்கரைவிளக்கத்தின் உயரம் 400 அடி. இது கி.மு.280ம் ஆண்டில் கட்டப்பட்ட அழகுமிக்க கலங்கரை விளக்கமாகும்.



## உலகிலேயே அதிக...



உலகிலேயே அதிக நூல் நிலையங்கள் உள்ளது ரஷ்ய நாட்டில் தான். இங்கு சுமார் நான்கு லட்சம் நூல் நிலையங்கள் உள்ளன. நூல் நிலையங்களைப் பராமரிக்கும் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதற்காக 103 கல்லூரிகள் உள்ளன.

## விஞ்ஞானக் கருவிகள்

அல்டி மீட்டர் - விமானம் பறக்கும் போது உயரத்தை அளக்கும் கருவி.
அமீட்டர் - மின்னோட்டம் அளக்கப் பயன்படும் கருவி.
அனிமோ மீட்டர் - காற்றின் வேகம் திசை என்பவற்றை அளக்கப்பயன்படும் கருவி.
அடியோ மீட்டர் - ஒலியின் அளவை வலிமையை அளக்கப்பயன்படும் கருவி.
பரோ மீட்டர் - காற்றின் அமுக்கத்தை அல்லது நமுவு வீதத்தை அளக்கும் கருவி.
கலோரி மீட்டர் - வெப்பத்தின் அளவை அளக்கும் கருவி.
காடியோ கிராப் - இருதயத்துடிப்பைக் காட்டும் கருவி.
பைனாகுலோர் - தொலைவிலுள்ள பொருட்களைப் பெரிதாக்கிக் காட்டும் கருவி.
குரோனோ மீட்டர் - கப்பலில் வடதிசையைச் சரியாகக் காட்டும் கருவி.
எலக்ட்ரோஸ்கோப் - மின்னோட்டத்தைப் பரிசோதிக்கும் கருவி.
ரேடர் கருவி - விமானத்தின் திசை, தூரம் உட்படப் பல்வேறு தேவைகளையும் பதியுங்கருவி.
ரோபோ - இயந்திர மனிதன், தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் இயந்திர மனிதன்.
நொட்ஸ் - கடலில் கப்பல், படகு போன்றவற்றின் வேகத்தை அளக்கும் முறை.
கலோரிப் பெறுமான மீட்டர் - உடல் கொள்ளும் உணவுப்பொருட்களின் வெப்பத்தினளவு.

வ. மணிமாலா, மட்டக்களப்பு.

# கடன்

"அப்ப நாங்க போயிட்டு வாறம் பெரியம்மா" என்றபடி மரியமும், அவளது இரு பிள்ளைகளுமாகத் தங்களது பைகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

"சரிம்மா நல்லபடியாய் போயிட்டு வாங்க... அடிக்கடி வந்து போய்க்கிட்டு இருங்க" என்று தனது மகளுக்குக் கூறிக்கொண்டே, வாசலில் நின்ற ஓட்டோக்காரனைப் பார்த்து... "இந்தாப்பா.. கொண்டுபோயி ஸ்டேஷன் வாசல்ல விட்டுடு.." என்று கூறினாள் பெரியம்மா.

மரியமும், பிள்ளைகளும் ஓட்டோவில் ஏற, அது ரயில்வே ஸ்டேஷனை நோக்கி ஓடத் தொடங்கியது.

மரியமின் பெரியம்மா ஒருத்தி, வெளியூர் ஒன்றில் தனியாக வாழ்ந்து வந்தாள். அவளது தங்கை மகள் தான் மரியம்.

பெரியம்மாவுக்கு உடல்நலக் குறைவு என்று தகவல் வந்ததால்,



பார்த்துவிட்டுப் போகலாமே என்று தனது இருபிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு வீட்டில் மாமியாரை வைத்துவிட்டு பெரியம்மாவின் ஊருக்கு வந்திருந்தாள் மரியம்.

மூன்று நான்கு நாட்கள் தங்கி, பெரியம்மாவுக்கு உடல் நலம் சற்றுத் தேறியதும் புறப்பட்டாள் அவள்.

ஓட்டோ டிரைவர், ஓட்டோவை ஸ்டேஷன் வாசலில் நிறுத்த, மரியமும் பிள்ளைகளும் இறங்கி உள்ளே சென்று தயாராக நின்ற அவர்கள் ஏற வேண்டிய ரயிலில் ஏறிக் கொண்டார்கள்.

அவர்கள் இருந்த பெட்டிக்கு வெளியே 20,25 அடி தூரத்தில் ஒரு 12, 13 வயதுப் பையன் ஆப்பிள், மாம் பழம் கொண்ட கூடையை வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தான். பழக்கூடையைக் கண்டதும் பிள்ளைகள் இருவரும் மரியத்திடம் பழம் வாங்கித் தருமாறு கேட்டார்கள்.

மரியம், ரயிலை விட்டிறங்கி பழக்கூடை அருகே வந்து விசாரித்து அரை டசின் ஆப்பிள் வாங்கிக் கொண்டு நூறு ரூபாய் நோட்டை எடுத்துப் பழக்காரப் பையனிடம் கொடுத்தாள்.

"என்னங்கம்மா.. பதினைஞ்சு ரூபாக்கி, நூறு ரூபாயைத் தாறீங்களே! சில்லறை இல்லையேம்மா.." என்றபடி நோட்டை வாங்கிக்கொண்டு அங்குமிங்குமாகப் பார்த்தான்.

"எங்கிட்டையும் சில்லறை இல்லையேப்பா.... அப்ப பழத்தை வைச்சிடவா?" என்றாள்.

பழக்காரப் பையனுக்குப் பதினைந்து ரூபா வியாபாரத்தை விட்டு விட மனமில்லை. எனவே, "கொஞ்சம் இருங்கம்மா.. இதோ ரெண்டு நிமிஷத்திலே மாத்திக்கிட்டு ஓடியாறேன்..." என்று கூறிக்கொண்டே நூறு ரூபா நோட்டுடன் கடைகள் இருந்த பகுதியை நோக்கி ஓடினான் அவன்.

அவன் ஓடியதைப் போலவே நேரமும் ஓட, ரயில் விசில் ஊதிக்கொண்டு அசையத் தொடங்கியது... ரயில் அசைவதைக் கண்ட மரியம், "ஐயோ! போனவனைக் காணமே.. ரயிலு போகப் போகுதே!" என்று அங்கலாய்த்துக் கொண்டே அங்குமிங்குமாகக் கண்களை அலையவிட்டுத் தேட, சிறுவன் தட்டுப்படாமல் போக, பெட்டியிலிருந்த பிள்ளைகள் இருவரும் "உம்மா.. உம்மா.. ரயில் போவுதேம்மா" என்று கத்த, மரியம் யோசிக்காமல் ஓடிப்போய் ரயிலில் ஏறிக்கொண்டாள்.

ரயில் கொஞ்சம் கொஞ்சமாக வேகமெடுக்கத் தொடங்கியது.

மரியம் மனக்குழப்பத்துடன் "பாவிப்பய.. பதினைஞ்சு ரூபா பழத்தைக் குடுத்துப்புட்டு, நூறு ரூபாயை வாங்கிட்டுப் போயி ஏமாத்திட்டானே! அவன் நல்லாயிருப்பானா? கடங்கார நாயி!" என்றெல்லாம் புலம்பியபடி, தலையை ஜன்னலுக்கு வெளியில் விட்டு, எட்டிப் பார்த்தாள்.

அங்கே 70,80 அடி தூரத்தில் ஒரு பையன் வேகமாக ஓடி வந்துகொண்டிருந்தான்.

ரயில் எடுத்த வேகத்துக்கும், அவன் வந்த வேகத்துக்கும் பெரிய வித்தியாசம் இருந்ததால், சிறுவன் சில நொடிகளில், தலையை வெளியே நீட்டிக் கொண்டிருந்த மரியத்தை அண்மித்து ரயிலோடு அவனும் ஓடி வந்து கொண்டே,

"இந்தாங்கம்மா... சில்லறை கிடைக்கல... நீங்க கொடுத்த நோட்டு!" என்று கூறிக்கொண்டே மரியம் கொடுத்த நூறு ரூபா நோட்டை அவளிடம் கொடுத்தான்.

நோட்டு அவள் கைக்குப் போனதும், அவன் ஓடிவந்த வேகத்தைக் குறைத்துக்கொள்ள ரயில் மேலும் வேகம் எடுத்து ஓடத் தொடங்கியது.

சிறுவன், நோட்டை அவளிடம் சேர்ப்பித்துவிட்ட திருப்தியில் திரும்பி அவனது பழக்கூடையை நோக்கி நடந்தான்.

மரியம் திகைத்துப்போய், மறுபடியும் வெளியே எட்டிப்பார்த்து எதுவும் செய்ய முடியாமல் திணறிக்கொண்டிருந்தாள். பழங்களை எடுத்து வெளியில் வீசி விடலாமா? என்ற எண்ணம் வந்தபோது, பிள்ளைகள் ஆளுக்கு ஒன்றாக அவற்றைக் கடித்துக் கொண்டிருந்தார்கள். ஆக செய்வதொன்று மறியாமல், "நான் அந்தப் பையனைக் கடங்கார நாய் என்று சொன்னேனே... இப்ப நான் தான் அவனுக்குக் கடன் காரியாய் போய்விட்டேன்! அல்லாஹ் இந்தக் கடனை எப்படி நான் தீர்ப்பேன்?" என உண்மையாகவே அவள் வேதனைப் பட்டுப் புலம்பத் தொடங்கினாள்.

சிறுவன் தனது பழக்கூடையருகே சென்றதும், "என்னடா, பணம் வாங்கினியா அந்தம்மாகிட்டே, இல்ல... விட்டுட்டு வந்திட்டியா?" என்றார்கள், சக வியாபாரத் தோழர்கள்.

"வாங்கலெங்க... வண்டி வேகமாகப் போயிருச்சி!" என்றான் சிறுவன்.

"அடப் போடா பைத்தியம்! இப்ப பதினைஞ்சு ரூபா நஸ்டமாச்சுல்லே!" என்று கண்டித்தார் ஒருவர்.

"இல்லங்க.. எனக்குப் போனா பதினைஞ்சு ரூபாதான் நஸ்டம். அந்தம்மாவுக்குப் போனா எம்பத்தைஞ்சு ரூபாயில நஸ்டமாவுது, அதனால தான் ஓடிப்போயி கொடுத்துட்டு வந்துட்டன்" என்றான் சிறுவன்.

பக்கத்தில் நின்றவர்கள் அவனது நாணயமான எண்ணத்தையும், உதாரண குணத்தையும் பார்த்து வியப்படைந்து போனார்கள்.

"நான் மதரஸாவில ஓதறப்போ, எங்களது மதரஸா ஒஸ்தாது(ஆசிரியர்), யாரையும் ஏமாத்தக்கூடாது, மோசம் பண்ணக்கூடாது என்று அடிக்கடி சொல்லுவாரு. அதனால தான் ஓடிப் போயி பணத்தைக் குடுத்துட்டு வந்துட்டேன்" சிறுவன் விபரம் சொல்லிவிட்டுத் தனது வியாபாரத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினான்.

**எம்.ஐ.எம். தௌபீக்–அபுதாபி**

# விடிய... விடிய...

தூங்கிக் கொண்டிருந்த மதன் போர்வையினை விலக்கிக்கொண்டு விழித்தெழுந்தான். நேரம் நள்ளிரவு பன்னிரெண்டு மணியையும் தாண்டி ஒரு மணியுடன் ஒட்டிக்கொண்டு கண்சிமிட்டியது. பக்கத்தில் பவ்வியமாகத் தூங்கிக்கொண்டிருந்தாள் பவித்ரா. தூக்கத்தின் அடர்த்தி அவளின் அசதியையும், களைப்பையும் கச்சிதமாய்க் கணித்துக் காட்டிக் கொண்டிருந்தது.

மெதுவாகப் பவித்ராவின் தலையினைக் கோதிய வண்ணம் சுவாசக் காற்றுச் சுடுகின்ற தூரத்திற்குச் சென்று அழுத்தமாக அவளின் கன்னத்தில் முத்தமிட்டான். என்றாலும் அசைவில்லாத ஜடமாய் கிடந்தாள் பவித்ரா. எதுவித பலனும் கிடைக்காத மதன் இன்னும் கொஞ்சம் முன்னேறி உணர்ச்சிகளின் உச்சப்பகுதியான அவளின் உதடுகளில் உதடு வைத்து மெத்தமாய் ஒரு முத்தமிட்டான். மதனின் முகத்தைத் தன் இடது கையால் தள்ளியவாறு கண்களை கசக்கிக் கொண்டு விழித்தாள் பவித்ரா.

மதனின் இந்தக் கொஞ்சல்கள், சேட்டைகள் இந்தக் கொஞ்ச நாட்களாகவே தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன என்பதால் இது ஒன்றும் பவித்ராவிற்குப் புதுமையல்லவே. இன்றும் அவன் கொஞ்சுவது அந்த விடயத்திற்காகவே என்பதைத் தெளிவாகவே விளங்கிக் கொண்டவள், அதனைத் தடுப்பதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்தத் தொடங்கினாள். "என்னங்க! எல்லாமே லிமிட்டோட இருக்கணும்னு நீங்க தானே அடிக்கடி சொல்லுவீங்க! நீங்களே சின்னப்பிள்ளை மாதிரி இப்பிடி அடம்பிடிக்கிறீங்களே! இது கொஞ்சம் கூட நல்லாயில்லீங்க!" ஏதோ இந்த விடயத்தில் கொஞ்சம் கூட விருப்பமில்லாதவளைப் போன்று வெறுப்பைக் கொட்டிக் குவித்தாள் பவித்ரா.

"இந்தா பாரு பவித்ரா! அக்கம்பக்கத்தில உள்ளவங்க விழிச்சுக்கிட்டிருந்து நீ இப்படிச் சொல்றது அவங்க காதுகள்ல விழுந்தா என்ன நினைப்பாங்க.." மதன் கூறி முடிப்பதற்குள் அவனை ஏறிட்ட பவித்ரா "என்ன நினைப்பாங்க..." என்றதொரு வினாவை அலட்சியமாக அவனுக்கு விடுத்தாள்.

இருவருக்குமிடையே தொடர்ந்த விதண்டாவாதத்தின் விடிவு ஒருவருக்கொருவர் ஊடல் கொள்ளுமளவிற்கு உக்கிரம் அடைந்தது. ஏதேதோ முனகிய பவித்ரா தன் முதுகுப்பக்கத்தைக் காட்டியவாறு புரண்டு படுத்தாள்.

மதனைப் பொறுத்தவரை இந்த மாதிரியான விடயங்களில் ஏலவே அனுபவங்கள் இருப்பினும், பவித்ராவிற்கு இது புத்தம் புதிய அனுபவமாகவே இருந்தது. அதனால் தானோ என்னவோ அளவுக்கதிகமாகவே அச்சமும், பயமும் கொண்டாள்.



மதனுக்கு நேரமாக ஆக என்னவோ போலிருந்தது. முயற்சியைக் கைவிடாதவனாக மீண்டும் அவளைச் சீண்டத் தொடங்கினான். இப்போது அவளின் மென்மையான இடைப்பகுதியில் மதனின் இடது கைவிரல்கள் சரஸம் பயிலத் தொடங்கியது.

"பவித்ரா! என்னதா நீ சொன்னாலும், என்னையொரு ஆம்பிளையா நிரூபிக்கிறதுக்கு இதைத் தவிர வேறு வழியில்லையே..." எத்தனை சொல்லியும் பவித்ரா அவனது வார்த்தைகளுக்குக் கட்டுப்படுவதாயில்லை. இனிப் பேசுவதில் பிரயோசனமில்லை என்பதை உணர்ந்த மதன் விரக்தியுற்றவனாய் நிமிர்ந்து படுத்தான்.

ஏதோ மனம்மாறியவளாய் மதனின் மார்பினில் சாய்ந்து கொண்ட பவித்ரா அவனின் முகத்தோடு முகம் புதைத்து முனகத் தொடங்கினாள். "என்னங்க! இன்னிக்கி மட்டும் வேண்டாங்க..." கண்களில் பரிதாபங்கள் படர மதனை இறுக அணைத்துக் கொண்டாள் பவித்ரா. "எனக்கென்னவோ என்னமோ மாதிரி இருக்குங்க... அதுவுமில்லாம ஆபீஸ்ல வேலையும் தலைக்கு மேல இருந்ததால உடம்புக்குச் சரியான அலுப்பா இருக்குங்க... அது தான் இன்னிக்கி வேண்டாம்னு சொன்னேன்..." மதனின் அணைப்புக்குள்ளிருந்த பவித்ரா அவனின் ஆலோசனைக்கு இணங்கியதைப் போல் நடந்து கொண்டாள். இப்போது எல்லாமே எதிர்மாறானது. மதன் சற்றும் எதிர்பாராத விதத்தில் பவித்ரா இறுக அணைத்து மாறிமாறி முத்தமிட்டு அவனின் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டாள். இவள் இப்படிச் செய்வதன் மூலம் தான் தன்னிணக்கத்தை வெளிப்படுத்துவது வழக்கம். மதன் சந்தோஷத்தில் துள்ளியெழுந்தான்.

பவித்ராவின் மாற்றத்தில் மகிழ்ச்சிக் கடலில் தள்ளப்பட்டவன் போல் அவனும் அவளை இறுக அணைத்து அள்ளிக்கொண்டான். பின் சிரித்த முகத்துடன் பவித்ராவிடம் விடை பெற்றுக் கொண்டு, ஊர் எல்லையில் விடியவிடிய காவல் காத்துக்கொண்டிருக்கும் கூட்டத்தில் இவனும் ஒருவனாகச் சேர்ந்து கொள்வதற்காய் வீட்டை விட்டு வெளியேறினான். தொடர்ந்து கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் கொள்ளைக் கூட்டத்தை எப்படியும் பிடித்துவிடும் எண்ணத்தோடு...

**துரைராஜ் பிரபாஹர் ஹப்புத்தளையூர்**

# மன்னிக்கவேண்டுகிறேன்

எட்டி எட்டிப் பார்க்கின்றேன். அவள் முகம் நீரில் விழும் விம்பம் போல் அசையத் தொடங்கியது. வெண்ணிலவில் கருமைபோல் அவள் கன்னங்களில் கரும்புள்ளிகள். அது பருக்கள் வந்த வடுக்களாகத்தான் இருக்க வேண்டும். இருந்தாலும் அது அவளுக்கு அசிங்கத்தைக் கொடுக்காமல் மேலும் அழகூட்டியது. கண்டதும் காதல் என்பார்களே! அது போலத் தான் அங்கே என் மனம் சற்றுத் தடுமாறித்தான் போனது. அத்தனை அழகு. மணந்தால் இவள் தான் என்றெண்ணி மெல்ல அவள் இருக்குமிடம் நோக்கி நகர "...யோவ்! பார்த்துப் போய்யா! காலத்திண்டுத்தான்" என்று அந்த வயது முதிர்ந்தவர் கதறவும் முன்னால போங்க! எத்தன தரம் சொல்றது மாடா? மனிசன்களா? ஒரு தரம் சொன்னா விளங்காதா? என்று பஸ் கண்டக்டர் கத்தவும் சரியாக இருந்தது. நத்தையாய் அந்தப் பெண் இருக்கும் இடத்தைக் கஷ்ரப்பட்டு



அடைந்தேன்.

அந்தப் பெண் என்னைப் பார்ப்பதாய் இல்லை. எங்கோ அவள் மனம். இங்கில்லை. பலமுறை சிரித்தும் அவள் சிரிக்கவில்லை. சிலவேளை திருமணமாகிய பெண்ணோ? நெற்றியில் பொட்டுமில்லை. இப்பயப் பெண்கள்ளரவில அதெல்லாம் வைக்கமாட்டாங்க என்று எண்ணிக் கழுத்தைப் பார்ப்போம் தாலியாவது கிடக்குதா என்று எண்ணியபடி பார்த்த நான் அதிர்ச்சியில் ஐஸ்கட்டியாய் உறைந்து போனேன். கழுத்தில கறுத்த நாடா. ஓ..! அது அதுதான் என அனுமானித்துக் கொண்டேன். நானா? இப்படி! ச்சீ! என்ன மனிசன் நான்? எமது உடன் பிறவா சகோதர சகோதரிகளையா இவ்வாறு? ச்சீ..! என் மனம் படுவேகமாகச் சுழல ஆரம்பித்தது. இப்போது அப்பெண்ணைப் பரிதாபத்துடன் பார்க்கின்றேன். ஒரு மரியாதை கலந்த பார்வையுடன்.

**கா.ரமேஸ்குமார் - ஆரையம்பதி-02**

# கண்ணாமூச்சி ரே... ரே... 15

## பட்டுக்கோட்டை பிரபாகர்

> "மதுலதா காரோட கடத்தப்பட்டா. அதே காரால சிதைக்கப்பட்டிருக்கா. கடத்தப்பட்டப்போ என்ன டிரெஸ் போட்டிருந்தாளோ அதே டிரெஸ்ல செத்துக் கிடந்தா. கடத்தின சந்திரஜித் வெறியர்கள் ரத்தத்தில முதல்ல லெட்டர் எழுதியிருக்காங்க. மறுபடி நாங்க தான் செஞ்சோம்னு ஒப்புதல் வாக்குமூலம் மாதிரி ரெண்டாவது லெட்டரையும் காரில வைச்சிருக்காங்க... ஸோ...

"சொல்லுங்க" என்றாள் சுசீலா, பென்சில் எடுத்துக் கொண்டு.

"நம்பர் ஒன்... மதுலதா கொலையை விசாரிக்கிற போலீஸ் ஆஃபீஸரோட ஒரு அப்பொயின்ட்மென்ட். நம்பர் டூ. கௌசல்யாவோட அக்காவோட ஒரு விசாரணை. நம்பர் த்ரீ. அந்தப் பைத்தியத்தைக் கண்டு பிடிச்சுச் சந்திக்க முயற்சி. நம்பர் ஃபோர். அணில்தூத்தோட ஒரு சந்திப்பு. நம்பர் ஃபைவ். மதுலதா கொலை சம்பந்தப்பட்ட அவ்வளவு பத்திரிகைச் செய்திகள் அண்ட் கடந்த மூணுமாசமா மதுலதா பத்தி பத்திரிகைகள்ல வந்த அத்தனை செய்திகளையும் சேகரித்துப் படித்தல். நம்பர் சிக்ஸ். மதுலதாவோட சித்தி, சித்தப்பாவோட ஒரு சந்திப்பு. நம்பர் செவன். மதுலதா நெருக்கமா பழகின வங்களோட சில்லறை விசாரணை. இப்போதைக்கு இவ்வளவு தான்..." என்றான் பரத்.

சுசிலா உடனே போனெடுத்து...

"மிஸ்டர் முருகேசன் இருக்காரா? பேசச் சொல்லுங்க. ஹலோ சார்... குட் மோர்னிங். நான் சுசிலா பேசறேன். நடிகை மதுலதா கேசை விசாரிக்கிறது யாரு? அசிஸ்டென்ட் கமிஷனர் மார்த்தாண்டம் தலைமையிலேயா? சரி. அவரைப் பார்க்கணுமே. இப்பவா? உடனேவா? ஓ. வர்றோம். எங்களைப் பத்தி நல்லதா நாலு வார்த்தை சொல்லி வைச்சிடுங்க. பொறுமையாப் பேசுவாரா? சரி. வர்றோம். பரத்தா? ரொம்ப பிஸியா கமெண்ட்ரி கேட்டுக்கிட்டிருக்கார்.

"போனை வைத்துவிட்டு வாங்க பரத். உடனே வரச்சொல்றார். ஆபீஸ்ல இருக்காராம்..."

"உடனேவா? நேரமில்லையே சுசி..."

"எதுக்கு?"

"உனக்கு பனியன் மாத்தக்கூட நேரமில்லையே" என்று புறப்பட்டு...

உதவி கமிஷனர் மார்த்தாண்டம் நரை மீசை வைத்திருந்தார். நரை புருவம் வைத்திருந்தார். நாளைக்கு மறுநாள் ஃபேர்வெல் பார்ட்டி முடித்துக்கொண்டு ரிட்டையராகிறவர் போலிருந்தார்.

"நைஸ் டு மீட் யு யங்மேன்... சிட்டவுன். வட் கேன் ஐ டூ ஃபார் யு?"

"தமிழ்ல சில தகவல்கள் வேணும்." என்றான் பரத். சற்றுமுன் குலுக்கிவிட்டு விடுவிக்கப்பட்ட வலது கையின் வலியை விழுங்கிக்கொண்டு.

"என்ன சொல்லுங்க?"

"மதுலதா கேஸ்ல ஒரு பார்ட்டி கேட்டுகிட்டதன் பேர்ல ஒரு இன்வெஸ்டிகேஷன்ல இறங்கியிருக்கோம். உங்களோட ஒத்துழைப்பு வேணும்."

"கொலைகாரங்களைக் கண்டு பிடிக்கிறீங்களா? டஃப் ஜாப் ஐ சே..."

"அதில்லை. கொலை செய்யப்பட்டதும், ஊர் கூடி ஊர்வலம் விட்டு புதைக்கப்பட்டதும் மதுலதாவைத் தனான்னு ஒரு சின்ன சந்தேகத்தைச் சரி பார்க்கணும்.... அவ்வளவு தான்..."

"வாட் நான்சென்ஸ் யு ஆர் டோக்கிங்?"

"அது நான்சென்ஸா இருந்தாலும், விசாரிச்சி, விபரம் சேகரிச்சி, உங்க சந்தேகம் நான்சென்சுங்கன்னு என் பார்ட்டிக்குச் சொல்ல வேண்டியது எங்க கடமை இல்லையா?"

"மூஞ்சு சிதைக்கப்பட்டிருக்கு. அதனால நாளைக்கு வம்பு வரக்கூடாதுன்னு ஒருத்தரை ரெண்டுபேரை இல்லை அஞ்சி பேரை பாடியைப் பார்த்து அடையாளம் காட்டச் சொன்னோம் மிஸ்டர் பரத்."

"யார் சார் இந்த அஞ்சி பேர்?"

"மதுலதாவோட சித்தி, சித்தப்பா, செகரட்டரி கௌசல்யான்னு ஒரு பொண்ணு, மதுலதா வீட்ல வேலை பார்த்த டிரைவர், வேலைக்காரன். அஞ்சி பேரும் இது மதுலதான்னு கையெழுத்துப் போட்ருக்காங்க."

"வேற எந்த வகையிலையும் உறுதி செஞ்சிக்கலையா? மதுலதாவோட சர்டிஃபிகேட்ல..."

"பாஸ்போட்ல குறிக்கப்பட்டிருக்கிறது ரெண்டு மச்சங்கள் பரத். வலது புருவத்துக்கு மேல ஒரு மச்சம். வலது புறம் மேலுதட்டுக்கு மேல ஒரு மச்சம். முகம் சட்னியாய்ட்டதாலே ரெண்டு மச்சத்தையும் சரி பார்க்க முடியலை. பட், சிச்சுவேஷனல் எவிடென்ஸ்னு ஒண்ணு இருக்கே..."

"என்ன சார் அது?"

"மதுலதா காரோட கடத்தப்பட்டா. அதே காரால சிதைக்கப்பட்டிருக்கா. கடத்தப்பட்டப்போ என்ன டிரெஸ் போட்டிருந்தாளோ அதே டிரெஸ்ல செத்துக் கிடந்தா. கடத்தின சந்திரஜித் வெறியர்கள் ரத்தத்தில முதல்ல லெட்டர் எழுதியிருக்காங்க. மறுபடி நாங்க தான் செஞ்சோம்னு ஒப்புதல் வாக்குமூலம் மாதிரி ரெண்டாவது லெட்டரையும் கார்ல வைச்சிருக்காங்க... ஸோ... இதில செத்தது மதுலதாதானாங்கிற சந்தேகத்துக்கு இடமே இல்லையே..."

"ஒப்புக்கிறேன் சார். சின்சியரா ஒப்புக்கறேன். ஏதோ எனக்குத் தெரிஞ்ச வகையில இங்க அங்க விசாரிச்சிட்டு என் பார்ட்டிகிட்ட யோவ், செத்தது மதுலதா தான்யான்னு சொல்லி நாலு காசு சம்பாரிக்கிறதிலே உங்களுக்கு அப்ஜெக்‌ஷன் இல்லையே..."

"தாராளமா செய்ங்க.."

"அப்ப நீங்க கொஞ்சூண்டு ஒத்துழைக்கணும் சார்..."

"என்ன செய்யணும்?"

"அந்த ரத்த லெட்டர்களோட ஒரு காப்பி, பி.எம். ரிப்போட் காப்பி, கொலை ஸ்பாட்டுல எடுத்த சில போட்டோ காப்பின்னு கொஞ்சம் கொடுத்தீங்கன்னா..."

"தப்பு சார் கேஸ் இன்னும் முடியலை..."

"தெரியுமே... என் முயற்சியால ஏதாச்சும் கொலைகாரப்பசங்களைப் பத்தி தகவல் கிடைச்சாலும் உங்க கைலதானே தரப்போறேன். அப்ப நீங்க சொந்த முயற்சில கண்டு பிடிச்சதாத் தானே சொல்லிக்கப் போறீங்க. இல்லைன்னா உங்களுக்கு யார் சொல்லணும்னு சொன்னா அவரை சொல்லச் சொல்றேன்..."

மார்த்தாண்டம் பரத் முகத்தை ஒரு மாதிரியாக நம்பியார் ஸ்டைலில் பார்த்துவிட்டு "என்னென்ன வேணும்னு எழுதிக் கொடுங்க... சாயங்காலம் வாங்க. ஏற்பாடு செய்றேன். ஏதாச்சும் தகவல் கிடைச்சா...?"

"கிடைச்ச அடுத்த விநாடி உங்க மேஜை மேல இருக்கும் சார்" என்ற பரத் எழுந்து கொண்டு முன்னெச்சரிக்கையாக இரண்டு கைகளையும் பின்னால் கட்டிக் கொண்டு மற்றொரு கைகுலுக்கலைத் தவிர்த்தான்.

★★★

அணில்தூத், "எடுத்துக்குங்க" என்றான்.

பரத்தும், சுசிலாவும், ஆளுக்கொரு காப்பியை எடுத்துக் கொண்டார்கள்.

"நானே உங்க ஆஃபீசுக்கு வரணுமின்னு இருந்தேன். நீங்களே வந்துட்டீங்க. கௌசல்யா என்கிட்ட சொன்னதும் நான் திகைச்சிப் போய்ட்டேன். அவ சொன்ன சந்தேகப்படி மதுலதா சாகலைன்றது உண்மையா இருந்தா உலகத்திலேயே...

"அதிக மகிழ்ச்சியடைகிற நபர் நீங்களாகத் தான் இருப்பீங்க... ஆனா மிஸ்டர் அணில், நேத்து முழுக்க நாங்க எடுத்துக்கிட்ட முயற்சிகள்ல எந்தப் பலனும் இதுவரை கிடைக்கலைங்கிறது தான் உண்மை" என்றான் பரத்.

"என்ன முயற்சி எடுத்துக்கிட்டீங்க?"

"மதுலதா கொலை சம்பந்தப்பட்ட முக்கியமான போலீஸ் டாக்குமென்ட்ஸ் எல்லாம் அக்கு வேற ஆணி வேறயா பார்த்தாச்சு. பைத்தியத்தைப் பார்த்த, கௌசல்யா வோட அக்காவைச் சந்திச்சோம். அந்தப் பொண்ணை அன்னிக்குத் தான் முதல் தடவை பார்த்தாங்களாம். இதுக்கு முன்னாடி பார்த்ததில்லையாம். எந்த ஸ்டேஷன்ல இறங்கினாங்கன்னும் பார்க்கலையாம். மறுபடி பார்த்தா போன் பண்ற தா சொன்னாங்க... பீச் டு தாம்பரம் எலெட்ரிக் டிரெயின்ல பாஸ் எடுத்துக்கிட்டு ரெகுலரா போய்ட்டு வர்ற நாலஞ்சு பேரை விசாரிச்சேன். யாருமே அந்தப் பைத்தியப் பொண்ணை பார்த்ததில்லைன்றாங்க. பார்த்தா தகவல் சொல்லச் சொல்லியிருக்கேன். மதுலதாவோட சித்தி, சித்தப்பாவைப் பார்த்தோம். சொத்து கைக்குக் கிடைக்காம கோர்ட்ல கிடக்குதேங்குறதிலேதான் வருத்தப்படுறாங்களே ஒழிய மதுலதா செத்ததில வருத்தம் தெரியலை. நல்லாப் பார்த்தீங்களா, செத்தது மதுலதா தானான்னு கேட்டதுக்கு சண்டைக்கே வந்துட்டாங்க. ஏற்கனவே சொத்துல பங்கு கேட்டு ஒருத்தன் வந்துட்டான். சாவுலயே சந்தேகத்தை எழுப்பி வில்லங்கம் பண்றதுக்குன்னு நீ புறப்பட்டுட்டியான்னாங்க..".

"ஸோ, என்ன சொல்ல வர்றீங்க?"

"செத்தது மதுலதாதான்கிறதிலே போலீஸ் உறுதியா இருக்காங்க. அதனால எங்க முயற்சிகளைத் தொடர்றோம். ஆனா கௌசல்யா சந்தேகப்படறது மாதிரி எதுவும் இல்லைன்னு தான் எனக்குப் படுது. நாங்க புறப்படறோம்..."

(கண்ணாமூச்சி தொடரும்)



# நெட்டிலிருந்து

## பாலங்கள் விற்பனைக்கு

அமெரிக்காவிலுள்ள பிரபலமான நான்கு பாலங்களை விற்பனை செய்ய அந்த நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் படி நியூயோக் நகரத்தின் வரவு செலவுத் திட்ட பற்றாக் குறையான 5000 மில்லியன் டொலர்களை ஈடுசெய்ய புறுக்கிளின் என்ற பாலத்தை விற்க கேள்வி மனு கோரப்பட்டுள்ளது.

நியூயோர்க் நகரத்திலேயே பிரபலமான மேலும் மூன்று பாலங்கள் விற்கப்பட இருக்கின்றன.

புறுக்கிளின் பாலம் அமெரிக்க நகரங்களில் உள்ள மிகவும் பழமைவாய்ந்த பாலங்களில் ஒன்றாகும். 1869ம் ஆண்டு இதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 14 வருடங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றது.

## உயிர் தப்பியது....

இறைச்சிக்காக அறுக்கப்பட இருந்த நிலையில் உயிர் தப்பிய பசுமாடொன்று தற்போது அமெரிக்காவில் மிகவும் பிரபலமாக இருக்கின்றது.

1200 இறாத்தல் எடைகொண்ட இந்த பசுமாடு வோஷிங்டனில் கென்மேயர் இறைச்சி விற்பனை நிலையத்தில் அறுக்கப்பட இருந்தது. கடைசி நேரத்தில் 6 அடி உயரமான மதிலிலிருந்து குதித்து அங்கிருந்து இந்த பசுமாடு உயிர் தப்பியது. அதன் பின்னர் 14 நாட்கள் வெவ்வேறு இடங்களில் சுற்றித் திரிந்து இறுதியில் வோஷிங்டன் நகர சபை அதிகாரிகளிடம் வந்து சேர்ந்த இந்த மாட்டை முதலில் வாங்கிய இறைச்சிக் கடைக்காரர்கள் அதனை பிடித்துத் தருபவருக்கு மாட்டு இறைச்சியுடன் 100 பணிஸ்கள் தருவதாக கூறியிருந்தனர். ஆனால் நகர சபை ஊழியர்களின் வற்புறுத்தலின் பேரில் மாடு இறைச்சிக் கடைக்கு வழங்கப்படுவது தடுக்கப்பட்டது.

இந்த விவகாரத்தை அமெரிக்காவின் பல பத்திரிகைகள் செய்தியாக வெளியிட்டதுடன் ஏதோ அமெரிக்க ஜனாதிபதி ஆபத்திலிருந்து உயிர் தப்பியதுபோல் மாட்டின் புகைப்படங்களையும்கூட வெளியிட்டிருந்தனர். கெரோலைஸ் என்று இந்த மாட்டுக்கு பெயர் வேறு சூட்டப்பட்டிருக்கிறது.

## பூச்சி விழுந்தால்

ஒரு கோப்பை தேனீயில் பூச்சி விழுந்துவிட்டால் ஒவ்வொரு நாட்டுக் காரரினதும் ரி-அக்ஸ்ஷன் எப்படி இருக்குமென்று ஒரு கற்பனை.

அந்தத் தேனீர் கோப்பையையே தூக்கி வீசிவிட்டு போய்விடுவார் பிரிட்டிஸ்காரர்.

பூச்சியை மட்டும் தூக்கி எறிந்துவிட்டு தேனீரை குடிப்பார் அமெரிக்கர்.

தேனீரை கீழே ஊற்றி விட்டு பூச்சியைப் பிடித்து உண்பார் சீனக்காரர்.

தேனீரை அமெரிக்கக்காரருக்கும் பூச்சியை சீனக் காரருக்கும் விற்றுவிட்டு அந்தப் பணத்தில் புதிதாக தேனீர் வாங்கிக் குடிப்பார் இந்தியக்காரர்.

பாகிஸ்தான் காரர் இதைவிடவும் சற்றுவித்தியாசமாக சிந்தித்து பூச்சியை தேனீரில் போட்டது இந்தியா தான் என்று குற்றம் சாட்டி சீனக்காரரையும் இந்தியரையும் மூட்டிவிட்டு அமெரிக்காவிடம் கடன் வாங்கி தேனீர் குடிப்பார்.

## இரண்டும் கெட்ட செய்தி

ஒரு முறை கடவுள் ரஷ்ய ஜனாதிபதியையும் மைக்ரோ சொவ்ட் நிறுவன அதிபதி பில்கேட்ஸ்சையும் அழைத்து ஒரு வாரத்தில் உலகம் அழியப் போகிறது என்று சொன்னார்.

ரஷ்ய ஜனாதிபதி தனது நாட்டுக்குப்போய் மக்களிடம் கூறினார்.

**இரண்டு கெட்ட செய்திகள்**

"முதலாவது கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் மற்றையது இந்த உலகம் அடுத்த வாரம் அழியப்போகிறதாம்."

பில்கேட்ஸ் தனது கெம்பியூட்டர் கெம்பனியான மைக்ரோ சொவ்ட் ஊழியர்களிடம் சென்று கூறினார்.

**"இரண்டு நல்ல செய்திகள்"**

ஒன்று எனது பெருமை தெரிந்து கடவுள் என்னை தனியாக அழைத்துப் பேசினார். அடுத்தது நமது கம்பனியில் பழுதடைந்திருக்கும் சொவ்ட் வெயார்களை திருத்த இலட்சக்கணக்கில் செலவழிக்கவேண்டாம்.

**இணையத்தில் இருந்து அனுப்பியவர்**
*எஸ்.பகீரதன்-கொழும்பு-12.*

## மன்னித்துவிடு....

என்னை மன்னித்துவிடு
என் வார்த்தைகளால்
உன்னை காயப்படுத்தியிருந்தால்
என்னை மன்னித்துவிடு
நான் செய்தவைகளுக்கும்
செய்யத் தவறியவைகளுக்குமாய்
என்னை மன்னித்துவிடு
என்றேனும் உன்னை நான்
புறக்கணித்திருந்தால்
என்னை மன்னித்துவிடு
என்றேனும் உன்னை நான்
கை விட்டிருந்தால்
கவலைப்பட வைத்திருந்தால்
என்னை மன்னித்துவிடு
என்றேனும் என்னை நான்
உன்னிலும் பெரியவனாய்
சிறந்தவனாய்
எண்ணியிருந்தால்

ஆனால் ஒன்று நண்பனே
என் நேசிப்பு நிஜமானது...

ஒன்றை மட்டும்
என்றும் மறவாதே
உன் உயர்விலும் தாழ்விலும்
வெற்றியிலும் தோல்வியிலும்
உவகையிலும் சோகத்திலும்
உன்னருகில் உனக்காய் நானிருப்பேன்

ஆதலினால்
என்னை மன்னித்துவிடு
நான் செய்த எல்லா தவறுகளுக்கும்

இதனை நான் ஏன்
இன்றே சொல்கிறேன் தெரியுமா..?

நாளை என்று ஒன்று
நாளை வராமலே போய்விட்டால்...?


நாம் நேசிப்போரை
நம்மை நேசிப்போரை
கட்டி அணைத்து விடைபெறும்
கடைசிச் சந்தர்ப்பம்
கிட்டாமலே போய்விட்டால்..?

நான் உன்னை நேசிக்கிறேன் என்றோ
என்னை மன்னித்துவிடு என்றோ
நாளை சொல்ல முடியாமல்
போய்விட்டால்..?

**இணையத்திலிருந்து எடுத்து அனுப்பியவர்:**
*கவிப்பிரியன் செல்வா-*
*வெள்ளத்தை.*

## 1வது பிறந்தநாள் வாழ்த்து

09.03.2002



## செல்வன் சந்தோஷ்

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த தர்மராசா-பவானி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சந்தோஷ் தனது முதலாவது பிறந்தநாளை 09.03.2002 அன்று ஜேர்மனி Augusbung இல் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா மட்டுவிலில் இருக்கும் அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, மாமா, பெரியப்பாவான தேவராசா, பெரியம்மாவான சந்திரவதனா, வின்சன் அண்ணா, டர்சிகா அக்கா, இந்தியாவில் வசிக்கும் தீபன் மாமா ஆகியோரும், கனடாவில் வசிக்கும் பரன் குடும்பத்தார், செல்வராசா குடும்பத்தார், சிறிக்காந் குடும்பத்தார், சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் தங்கராசா குடும்பத்தார், கொழும்பில் இருக்கும் வீராச்சாமி குடும்பத்தார், ஐயாத்துரை குடும்பத்தார் மற்றும் வெளிநாடுகளில் இருக்கும் மாமாமார்கள், மச்சான்மார்கள், அக்காமார்கள், அண்ணாமார்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சந்தோஷை பல்கலையும் கற்று இறைவன் அருள் பெற்று சீரும் சிறப்புற வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:-மட்டுவிலில் உள்ள ஜனா மாமா.

# மண்ணெண்ணெய் மகேஸ்வரன்

## யாழ் மக்களைச் சுரண்டுவது அம்பலம்!

**ஐக்கிய தேசியக் கட்சிக்கு மிகவும் நெருக்கமானவர்களால் நடாத்தப்படும் ஆங்கிலப் பத்திரிகையான 'சண்டே லீடர்' ஐ.தே.க. அரசில் உள்ள தமிழ் அமைச்சரான இந்துக் கலாசார அமைச்சர் ரி. மகேஸ்வரனின் மோசடி நடவடிக்கைகள் குறித்து ஆதாரங்களுடன் விரிவான கட்டுரைத் தொடர் ஒன்றை பிரசுரித்திருந்தது. ஐ.தே.க. ஆதரவுப் பத்திரிகை ஒன்றில் அதே கட்சி அமைச்சர் ஒருவரை இவ்வளவு தூரம் விமர்சனத்துக்கு உள்ளாக்கியமை வியப்புக்குரிய விடயமாக பலராலும் நோக்கப்படுகிறது. இந்தக் கட்டுரை டி.பி.எஸ். ஜெயராஜ் என்பவரால் எழுதப்பட்டது. அதன் சிலபகுதிகளை மொழி பெயர்த்து வாசகர்களுக்குத் தருகிறோம்.**



யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழ் மக்கள் இன்று சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். அத்தியாவசியப் பொருட்களையும், எரிபொருள், பாண்டங்கள் ஆகியவற்றையும் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்வதில் ஏற்படும் பாதுகாப்புப் பிரச்சனைகள் ஏற்றுமதிப் பிரச்சனைகள் ஆகிய காரணங்களால் பொருட்களுக்கான தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. அத்துடன், விலைவாசிகளும் பாரதூரமாக உயர்ந்து வருகின்றன. புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னரும் கூட யாழ்ப்பாண மக்களை வாட்டும் நெருக்கடிகளிலிருந்து மீட்சி கிடைக்கவில்லை. இத்தகைய நெருக்கடிகளிலிருந்து யாழ் மக்களுக்கு விடிவு கிட்டும் என்ற நோக்கத்தில் தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதன் தோழமைக் கட்சிகளுக்கும் மக்கள் அமோக ஆதரவு கொடுத்தனர். ஆனால், எதிர்பார்த்தபடி எதுவும் நடைபெறாமல் எதிர் விளைவுகளே ஏற்பட்டுள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணிபதவிக்கு வந்ததும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்தில் பாரதூரமான துயரங்களை அனுபவித்து வாழ்ந்து வந்த தமிழ் மக்களின் துன்பங்களைத் துடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளைப் புதிய அரசாங்கம் எடுத்தது. நீண்ட நெடுங்காலமாக அந்தப் பிரதேசங்களில் அமுலிலிருந்த பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தமிழ் மக்கள் படும் துயரங்களை நீக்குவதற்காக புதிய அரசாங்கம் இத்தகைய கவனம் செலுத்தியமைக்கு அரசியல் காரணமும் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. துயருறும் மக்களின் வயிற்றை நிரப்புவதன் மூலம் அவர்களுடைய நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் பெற்றுக்கொள்ளலாம் என்பதும் ஒரு காரணமாகும். இத்தகைய ஒரு அணுகுமுறையின் மூலம் விடுதலைப் புலிகளுடனான நேரடிப் பேச்சுவார்த்தைக்கு ஏற்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்று கருதலாம்.

வன்னிப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் புதிய அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தி வந்திருக்கிறது. இது யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு ஓரளவு அதிருப்தியை ஏற்படுத்தவே செய்துள்ளது. யாழ்ப்பாணத்தில் மீன்பிடித் தொழில் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்சனைகள் பூதாகாரமாக எழுந்து புதிய அரசாங்கத்தின் தீர்வினை எதிர்பார்த்துள்ளன. இப்போதுள்ள அரசாங்கத்தினால் இத்தகைய பிரசச்சனைகள் தோற்றுவிக்கப்படவில்லை என்ற போதிலும், இந்த அரசாங்கத்தினாலேயே இவற்றுக்கான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இத்தகைய பிரச்சனைகள் உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட முடியாதவை என்பதை யாழ் மக்கள் தெரிந்து வைத்துள்ளனர் என்பதனால் அவர்கள் ஓரளவு பொறுமையைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க எரிபொருள் போதியளவு கிடைக்காமை, உணவுப் பண்டங்கள் போதியளவு பெறமுடியாமை போன்ற பிரச்சனைகள் மக்களின் துயரங்களை மென்மேலும் அதிகரிக்கவே செய்கின்றன. இவற்றைத் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டும் காலதாமதம் செய்யுமானால் அரசாங்கத்திற்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் விரிசல் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

கொழும்பிலிருந்து பெற்றோல் மற்றும் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு போக்கு வரத்துச் சாதனங்கள் சீராக இல்லாமையினால் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் தட்டுப்பாடு நிலவுகிறது. இதன் பயனாக விலைவாசிகள் பாரதூரமாக உயர்ந்துள்ளன. வாழ்க்கைச் செலவு அதிகரிக்கவே செய்கிறது. ஏனைய பிரதேசங்களில் உள்ள விலைவாசியை விட யாழ்ப்பாணத்தில் அதிகரித்திருப்பதற்கு இவைகளே பிரதான காரணமாகும்.

ஆட்சிப் பொறுப்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாணத்திற்கான பிரதிநிதியாகவும், இந்து கலாசார அமைச்சராகவும் உள்ள தியாகராஜா மகேஸ்வரன் அவர்களே! தமது பிரதமருக்கும் தான் சார்ந்த கட்சிக்கும் யாழ்ப்பாண மக்கள் படும் துன்ப துயரங்களை எடுத்துக் கூறி அம்மக்களுக்கு உரிய விமோசனத்தை அளிக்க வேண்டிய பொறுப்பு வாய்ந்தவர்.

யாழ்ப்பாண மக்கள் "எங்கள் அமைச்சர்" என்று உரிமையுடன் இத்தகைய பிரச்சனைகளை சுமுகமாகத் தீர்த்து வைப்பார் என்று கருதுவது இயல்பானதே! குறிப்பாக எரிபொருள் தொடர்பான பிரச்சனைக்கு அவர் பொறுப்பானவர் என்றில்லாத போதும், அவர் இதனைத் தீர்த்து வைப்பார் என்றே கருதுகிறார்கள். இந்தப் பிரச்சனையில் அமைச்சர் மகேஸ்வரன் எந்தவிதமான அக்கறையும் செலுத்துவதாகத் தெரியவில்லை. ஏனெனில், இந்தப் பிரச்சனை தொடர்பான நெருக்கடியை அவர் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறார் என்பதே உண்மையாகும். சரியாகவோ, பிழையாகவோ இப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதை விட இப்பிரச்சனைக்கான காரண கர்த்தாவாகவும் அவர் விளங்குகிறார். இதன் பயனாக மகேஸ்வரன் தானே செல்வாக்கிழந்து வருவதுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பழிதேடித் தருகிறார்.

அமைச்சர் மகேஸ்வரனுக்கும் மண்ணெண்ணெய் வர்த்தகத்திற்கும் இடையிலுள்ள வரலாற்று ரீதியிலான நெருக்கத்தைச் சுட்டிக்காட்டு முகமாக அவருக்கு "மண்ணெண்ணெய் மகேஸ்வரன்" என்று மக்கள் பட்டம் சூட்டி அழைப்பதாகப் பாராளுமன்றத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான திரு. தவராஜா அவர்கள் சுட்டிக்காட்டினார்.

(தொடரும்)


### சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப்பதிவு செய்து திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவர் அவர்கள் வசதிகேற்ப செய்து தரப்படும். இலவச விமானநிலைய வாகன வசதி, இலவச காலை உணவு, சலுகை கட்டணத்தில் வாடகை கார்.

மேலதிக விபரத்திற்கு:-

LINGAM WEDDING SERVICE

10, Anson Road # 15-14 International Plaza, Singapore. 079903

Tel: Appu, கை தொலைபேசி எண்: அப்பு, 00,65 97514941 Tel. Fax:- 0065 2857494.

E.mail: Sakun @Singnet Com.Sg


### எழுத்தாளர்கள் கவனத்திற்கு

எமது ஒன்றியம் விரைவில் வெளியிடவுள்ள சிறுகதைத் தொகுப்புக்களுக்குப் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எழுத்தாளர்கள் இரண்டு சிறுகதைகளையும், இலங்கையில் வாழும் எழுத்தாளர்கள் ஒரு சிறுகதையையும் அனுப்பி வைக்கலாம். தொடர்பிற்கு:

S. Selvakumar,
19/1, Mackeyzer Road, Orr's Hill,
Trincomalee, Sri Lanka.
T.P No: 026-22802


### காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S.Mani

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.

சந்தைக்கு எதிர்ப்பக்கமாக

Tel: 074-519754

### சுவிஸ் பேர்ண் மாநகரில்.

Suji Jewellery Works

நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

K. Thurai
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.
T.P. 0041-31-8191837

உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

### லண்டன், பாரிஸ்
### இந்தியா ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும்

*இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்*

டாக்டர் ஆர்.தியாகராஜன் DHMS,AMRSH (LON.).

26.03.2002 முதல் லண்டன் பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார்.

மாறி மாறி வரும் ஆஸ்த்துமா (Asthuma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes) எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை-பேரின்மை (Sterrility) ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற்கொண்டு மனம், மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையை பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

முன்கூட்டி பதிவுக்கு

லண்டன் தொலைபேசி: 07984803488 / 07833341693

email: homoeocare @ rediffmail. com

தொடர்பு: 0091-9843051 (இந்தியா) 0094-776025 (இலங்கை)

பாரிஸ் விஜயம் 02.03.2002 முதல் 03.03.2002 வரை

பாரிஸ் தொலைபேசி: 0610225386, 0611401882

மார்ச் மாத இலங்கை விஜயம் 20.03.2002 முதல் 23.03.2002 வரை

### தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL SERVICES

1960 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு மலையாள மாந்திரீக வசிய சர்வதேச சமூக தெய்வீக சேவை. (Govt. Approved) கிரகதோஷம், காதல், (ஆண்-பெண்) பிரச்சனை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம், கல்வி தொழில் விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, கணவன்-மனைவி குடும்ப வாழ்க்கையில் சந்தோசமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை மருந்தீடு போன்ற தீமைகள் ஏற்படுகின்றது இது போன்ற எவ்வித பிரச்சனைகளானாலும் "காண்டம்" இறைசக்தியால் பிரச்சனைக்குரிய காரணத்தை கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளிக்கப்படுகின்றது. நேரில் வர முடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் அல்லது ;;பக்ஸ் பண்ணிவிட்டு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். பூசை, தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

டாக்டர். பாலுசோதிடர் S.(A).M.P J.P (S.L)

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்
DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE

THEIVEEGAM-NTSF-BATTICALOA.
SRI LANKA
TEL/FAX: 065-24825
வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு
TEL/FAX: 009465-24825,0094072875392

### மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

கொழும்பில் மார்ச் 17 முதல் 23 வரை

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

கண்டியில் மார்ச் 30 - 31 திகதிகளில்

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

கல்முனையில் மார்ச் 02, 03 திகதிகள்.

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

வவுனியாவில் மார்ச் 09, 10 திகதிகள்.

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019

DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

# ஸ்போர்ட்ஸ்

## ஒருநாள் போட்டிகளில் இருந்து மார்க்வோ நீக்கம்

ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான அவுஸ்திரேலிய அணியிலிருந்து நட்சத்திர துடுப்பாட்ட வீரர் மார்க்வோ நீக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்கா, ஸிம்பாப்வே அணிகளுடனான ஒரு நாள் போட்டிக்கான 15 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணி விபரம் நேற்று வெளியிடப்பட்டது. இதில் மார்க்வோவின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை.

தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றும் ஆஸி. வீரர்களில் ஸ்ரீவ்வோ, ஜஸ்ரின் லாங்கர், ஸ்டுவர்ட் மெக்கில் ஆகியோரும் ஒரு நாள் போட்டிகளுக்கான அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

மார்க்வோவின் சகோதரரான ஸ்ரீவ்வோ ஒரு நாள் போட்டிகளுக்கான அணித்தலைவர் பதவியிலிருந்து கடந்த மாதம் விலக்கப்பட்டுள்ளார்.

"மார்க்வோ, அவுஸ்திரேலிய ஒரு நாள் அணியின் சிறந்த வீரர்களில் ஒருவர். ஆனால், புதிய தலைமுறை வீரர்களுக்கு சந்தர்ப்பமளிப்பதற்கான உகந்த தருணம் இதுவென நாம் கருதுகிறோம்.

தென்னாபிரிக்கா,ஸிம்பாப்வே அணிகளுடனான ஒருநாள் போட்டிகளுக்காக அனுபவமிக்க வீரர் களையும், இளம் வீரர்களையும் கொண்ட ஆஸி. அணியைத் தெரிவு செய்துள்ளோம் என்று அவுஸ்திரேலிய தேர்வுக் குழுவின் தலைவர் ட்ரெவோர் ஹோன்ஸ் கூறினார்.

அவுஸ்திரேலிய அணி தென்னாபிரிக்க அணியுடன் 7 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் மோதவுள்ளது. இத்தொடரின் முதலாவது போட்டி மார்ச் 22ம் திகதி நடைபெறும்.

ஏப்ரல் 13ம் திகதி முதல் ஸிம்பாப்வே அணியுடன் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் அவுஸ்திரேலிய அணி பங்குபற்றவுள்ளது.

## டெஸ்ட் தொடரை இந்தியா வென்றது

இந்தியா சிம்பாப்வே அணிகளுக்கிடையில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி நான்கு விக்கட்டுகளால் வெற்றியீட்டிக்கொண்டது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி, முதலாவது இன்னிங்ஸில் 329 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 146 ஓட்டங்களையும் எடுத்தது.

சிம்பாப்வே அணியின் சார்பில் அதன் முதலாவது இன்னிங்ஸில் டியோன் இப்ராஹிம் (94), அண்டி பிளவர் (92), ஆகியோர் சிறப்பாக ஆடினர்.

இந்திய அணி, சௌரவ் கங்குலி (136), விரேந்திர் ஷெவாக் (74), சச்சின் டெண்டுல்கர் (36) ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டம் காரணமாக 354 ஓட்டங்களைப் பெற்று, சிம்பாப்வே அணியைவிட 24 ஓட்டங்கள் முன்னணியில் இருந்தது.

இந்நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த சிம்பாப்வே, இந்திய அணியின் இளம் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 146 ஓட்டங்களில் சகல விக்கட்டுகளையும் இழந்தது. இரண்டாவது இன்னிங்ஸிலும் சிறப்பாகத்துடுப்பெடுத்தாடி, 49 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், துரதிருஷ்டவசமான முறையில் அனில் கும்ப்ளேயின் பந்தில் ஆட்டமிழந்தார் அண்டி பிளவர். அரைச்சதம் பெற இருந்த வாய்ப்பு மயிரிழையில் நழுவிப் போனது.

சிம்பாப்வேயின் இரண்டாவது இன்னிங்ஸின்போது சிறப்பாகப் பந்து வீசிய ஹர்பஜன் சிங் 62 ஓட்டங்களுக்கு ஆறு விக்கட்டுகளையும், அனில் கும்ப்ளே 58 ஓட்டங்களுக்கு நான்கு விக்கட்டுகளையும் கைப்பற்றினர். பதிலளித்த இந்திய அணி ஆறு விக்கட்டுகளை இழந்த நிலையில், 126 ஓட்டங்களைப் பெற்று நான்கு விக்கட்டுகளால் வெற்றியீட்டிக் கொண்டது.

இதன் மூலம் 2-0 என்ற வகையில் ஸிம்பாப்வேயுடனான டெஸ்ட் தொடரை இந்தியா வென்றது.

# ஒளிந்திருக்கும் பேதை

இலக்கிய நயம் தருவது முழடில்யன்

ஆற்றில் குளித்துவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தாள் கார்த்திகா.

உலராத ஆடைகள் அவள் உடலோடு ஒட்டியிருந்தன.

இடுப்பு வளைவில் குடம் ஏறியிருந்தது.

துவைத்துப் பிழிந்து முறுக்கியிருந்த ஆடைகள் தோளிலிருந்தன.

அந்திப் பொழுதின் அழகு முழுவதும் அவளுருவாய் அசைந்து வந்தது.

அவள் அழகினால் சலனப்பட்டுக் காமமுற்றவனாகச் சூரியன் கண்கள் சிவந்திருந்தான்.

முதுகிற்குப் பின்னால் அவன் பார்வை உறுத்துவதை உணர்ந்து அவள் வேகமாக நடந்தாள்.

வீட்டினுள் நுழைந்து தண்ணீர்க் குடத்தை மூலையில் திருகணைமீது வைத்தாள்.

வீட்டின் பின்புறம் சென்று கயிற்றுக் கொடியில் தோளிலிருந்த ஆடைகளை ஒவ்வொன்றாக எடுத்து உதறி விரித்துப் போட்டாள்.

கடைசித் துணியையும் கயிற்றின்மீது போட்டுச் சரிசெய்துவிட்டுத் திரும்புவதற்கிடையில்-

பின்புறமிருந்து இரு முரட்டுக் கரங்களால் வலிந்திழுக்கப்பட்டாள்.

"ச்சீ.... விடுங்கள்.. வேலிக்கு அந்தப் பக்கம் அக்கா நிற்கிறார்கள்" என்றபடி அந்தக் கைகளை விடுவித்து விலக்கிவிட முயன்றாள்.

ஆனால், உடலுடன் ஒட்டியிருந்த ஆடையென பின்புறம் அவன் உடலும் சுற்றி வளைத்திருந்த கைகளும் மேலும் இறுகின.

அவள் தோளின் மீது மோவாயை வைத்து, குளித்துப் பளபளப்பாகியிருந்த கன்னத்தில் தன் கன்னத்தை உராய்ந்தான்.

அந்த நிலையிலேயே, "வேலி எதற்கிருக்கிறது?" என்று கேட்கவும் செய்தான்.

"வேலியை யாரும் மீறாமலிருப்பதற்கு" என்று சொல்லி, இடையை அழுத்திக் கொண்டிருந்த அவன் கரங்களின்மீது ஓங்கித் தட்டினாள். கூடவே, "அக்கா பார்த்துவிடப் போகிறார்கள்.." என்று அவன் கரங்களிலிருந்து விடுபடும் முயற்சியில் உடல் நெளிந்தாள்.


அந்த முயற்சி அவனை மேலும் உசுப்பிவிடும் விதமாக அவள் மென்மை முழுவதையும் அவனுடலில் இழைத்தது.

பிடியை மேலும் இறுக்கியபடி, "ஆற்று நீருக்கு இத்தனை வாசனையா?" என்றான் அவள் ஈரக் கூந்தலினுள் மூக்கை உரசிக் கொண்டு.

"அதோ ஓடுகிறது. அங்கே போய் மோந்து பாருங்கள்" என்று குரலில் கோபத்தைக் காட்டினாள்.

"வேண்டியதில்லை. அங்கே குளித்த தென்றல்தான் இங்கே வந்திருக்கிறதே... மோகினித் தென்றல்..." என்றபடி அவளைத் தன் பிடிக்குள்ளேயே திருப்பிவிட முயற்சி செய்தான்.

"நான் ஒன்றும் துவைத்த ஆடையில்லை.. என்னைப் பிழிய



வேண்டாம்..." என்றாள் கோபம் குறையாமல்

முயற்சி பலிக்காததால் அவளை அப்படியே அலாக்காகத் தூக்கிக் கொண்டு வீட்டினுள் நுழைந்தான்.

"இப்போது யாரும் பார்க்க மாட்டார்களே" என்றபடி கைகளை விலக்கி அவளை மறுபுறம் திருப்பினான்.

"விடுங்கள்... உடை மாற்ற வேண்டும்"

"நானும்தான்"

"என்ன?" சீறினாள்.

"பொறு பொறு.. இதோ எனது ஆடைகளும் முழுதாக நனைந்துவிட்டன. இதைச் சொன்னேன்" என்றான்.

போக எத்தனித்தவளின் கையை எட்டிப் பிடித்தான்.

இழுத்து அவள் முகமருகே நெருங்கி, "அடடா, இன்னும் ஈரம் உலராத கண்கள் 'ஏன் இப்படி அனலை வீசுகின்றன?"

அவள் கண்களை மூடினாள்.

அவன் அந்த இமைகளின் மீது முத்தமிட்டான்.

"விடுங்கள்... எனக்கு உள்ளே வேலையிருக்கிறது..." கண்களை மூடிய நிலையில் அவள் முணுமுணுத்தாள்.

"போ என்னும் வார்த்தையால் வா என்கிறாய்" என்று காதுக்குள் மெல்லப் பாடினான்.

"இல்லை. நிறைய வேலையிருக்கிறது..." என்றாள் நகர்வதற்கு எந்த எத்தனங்களும் செய்யாமல்.

"எனக்கும்தான். வா உள்ளே போகலாம்..." என்றபடி அவளைத் தூக்கிக்கொண்டு அறைக்குள் நடந்தான்.

அவள் எதிர்ப்புகளை முற்றிலுமாகக் கைவிட்டிருந்தாள்.

ஈரம் சற்றுக் காய்ந்துவிட்ட நிலையில் அவளைப் படுக்கையில் கொண்டு சென்று கிடத்தியவன், தனது உதடுகளால் அவளை மீண்டும் ஈரப்படுத்தினான்.

அவள் கரங்கள் இப்போது அவன் கழுத்தைச் சுற்றியிருந்தன.

"என்னை விடு" என்றான் அவன் இப்போது.

"ஏன்?" என்றாள் பிடியை விடாமல்.

"உன்னை ஆறு தொட்ட இடமெல்லாம் என் உதடுகளும் தொட வேண்டும்" அவள் ஆவேசம் கொண்டவளாய் இழுத்து, அவன் உதடுகளில் தன் உதடுகளைப் பொருத்தினாள்.

இருவருள்ளும் தேனாறு பாய்ந்தது.

உதடுகளினூடாக இருவர் உயிரும் இடம் மாறியது.

கார்த்திகா கனவில் பேசுகிறவளைப் போல, "விடுங்கள்... வேலையிருக்கிறது" என்று மீண்டும் முணுமுணுத்தாள்.

அவளது 'விடுங்கள்' என்பதை அவன் 'தொடுங்கள்' என்று சரியாகவே புரிந்துகொண்டான்.

ஒரு பூமாலை எனத் துவண்டு கிடந்த அவளை அள்ளிக் கைகளில் ஏந்தினான்.

'கள்ளி! குறிப்புகளால் எனை மயக்கும் வித்தையை இவள் நன்கறிவாள்' என்றெண்ணியபடி அவளுடலைத் தன்னோடு சேர்த்தான்.

'அழகிய பூமாலை போன்ற இவளது உடலுக்குள் என்னை மயக்கிப் பித்தாக்கிவிடும் குறிப்பு ஒன்றுண்டு. பூமாலைக்குள் வெளியே தெரியாமல் நார் ஓடுவதுபோல இந்தக் கள்ளியின் மனதிலும் ஆசை மறைந்திருந்து என்னைக் கட்டி இழுக்கிறது'.

**மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை**
**அணியில் திகழ்வதொன் றுண்டு.**

(குறள்: 1273)

# சிந்தியா பதில்கள்

**★ சிந்தியா, ஒற்றுமைதானே பலம்?**

தினேஷ்-லிந்துலை.

ஆமாம். ஆனால் உள்ளே வேற்றுமைகளை அங்கீகரிக்காத ஒற்றுமை ஹிட்லரின் பலத்தைப் போன்றது.

**★ தமிழர் விடுதலைக் கூட்டணி தனது வரலாற்றில் சாதித்தது என்ன?**

க.கமால்தீன்-ஏறாவூர்-03.

தமிழ் மக்களுக்கான ஏகப்பிரதிநிதியைத் தந்தது.

**★ ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் மூவரும் முக்கோணங்களில் போய்க் கொண்டிருப்பதால்...?**

எஸ்.புவனேந்திரன்-சப்ரகமுவ பகல்கலைக்கழகம்.

பூமியில் வேறெங்கோ ஓரிடத்தில் தான் சந்தித்துக் கொள்ளப் போகிறார்கள்.

**★ கப்பத்திற்காகக் கடத்தப்பட்ட பிள்ளையைக் காப்பாற்றித் தந்திருக்கிறார்களே விடுதலைப் புலிகள்?**

ம.விமலா-கொழும்பு-05.

கப்பம் வாங்குவதும், பிள்ளைகளைக் கடத்துவதும் விடுதலைப் புலிகள் அல்ல என்பதை இப்போதாவது புரிந்துகொண்டு, அரசாங்கம் இந்தச் சம்பவத்தைத் திரும்பத் திரும்பத் தன் ஊடகங்கள் மூலமாக அறிவிப்புச் செய்து கொண்டிருந்ததைப் பார்க்கவும், கேட்கவும் சந்தோஷமாக இருந்தது.

**★ இத்தனை சிறிய இலங்கை நாட்டில் ஏன் இவ்வளவு கட்சிகள்?**

எம்.ஹிஸான் ஹாஸீஸ், ஹேனமுல்லை.

உலகுக்கே வழிகாட்டும் தமிழன், ஒரே கட்சி விஷயத்திலும் காட்டும் எழுச்சியைப் பார்த்துத் திருந்த வேண்டியது பெரும்பான்மையினர் பொறுப்பு.

**★ இந்திய கிரிக்கெட் வீரர் சடகோபன் ரமேஷின் முகவரியைத்தர முடியுமா?**

தவராசா கமல்ராஜ், கூழாவடி.

இல: 114, சேரியர்ஸ் சாலை, சென்னை-600 035. தொலைபேசி: 4320638

**★ அசத்தல் நாயகி சிந்தியாவே! உலக நாயகன் கமலஹாசன் சகலகலாவல்லவர் தானே?**

எஸ்.பி.பீற்றர் போல், யாழ்ப்பாணம்.

ஆமாம்! ஆமாம்! ஆமாம்! உங்கள் கருத்துக்கு மறுகருத்து ஏது!

**★ 'சித்தி' மெகா தொடர் பற்றிச் சிந்தியா என்ன நினைக்கிறீர்கள்?**

எஸ்.பிரிட்டி, கொட்டகலை.

கலெக்டராக இருந்தாலும், கமிஷனராக இருந்தாலும் ஆணுக்கு அடங்கி நடக்கும் பெண் தான் போற்றப்பட வேண்டியவள் என்பதைச் சொல்ல ராதிகா எதற்கு? புருஷனை மதிக்கிறவள் கதாநாயகி; மதிக்காதவள் வில்லி என்ற கதை தான் எங்களுக்கு எத்தனையோ ஆண்டுகளாகத் தெரியுமே!

**★ நீங்கள் இறக்கும்போது அருகில் யார் இருக்கவேண்டுமென்று விரும்புவீர்கள்?**

இரா.பிரதீபன், கொழும்பு-12.

என்னை விடுங்கள். ஒரு சமயம் தன் படை வீரர்களின் அணிவகுப்பைப் பார்வையிட்டு வந்த ஹிட்லர், விறைப்பாக நின்றிருந்த ஒரு வீரரிடம், "சண்டையின் போது உனக்கு அருகே குண்டு விழ நேர்ந்தால் நீ யாரை நினைத்துக்கொள்வாய்?" என்று கேட்டதற்கு, அந்தப் படைவீரர் சொன்னது; "தளபதியவர்களே! தாங்கள் என்பக்கத்தில் நிற்க வேண்டும்."

**★ இஞ்சி தின்ற குரங்கை எங்கு பார்க்கலாம்?**

வி. திருவேங்கடம். வவுனியா.

அவரவர் வீட்டுக் கண்ணாடியில்.



கமல்-சிம்ரான்

**★ சிந்தியா உங்கள் "ஜொள்"ளரசி சிம்ரனைப் பற்றி ஏதாவது புது கிசுகிசு உண்டா?**

நா. தனேந்திரன், கண்டி.

தாளமுடியாத சோகத்திலிருக்கிறேன் தனேந்திரரே! இந்தப் பெண் இப்படியுமா செய்யும்? அவர் வயதென்ன? விவரம்புரியும் வயதில் பிள்ளைகள் ரண்டு வேறு. நடனக்காரர் இழுத்தடிக்கிறார் என்ற கோபத்தில் இப்படிப்போய் பழி வாங்குவதா? என்ன புதுமுக நடிகையா, வாய்ப்புக்காகப் போய் ஒண்டிக்கொள்ள? தனது அடுத்த படத்திலும் நாயகியாக விரும்பிப் போட்டிருக்கிறார். படப்பிடிப்பு முடிந்தால் அழைத்துச் செல்கிறார். அவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் எல்லாம் அழைப்பில்லாமல் இந்தப் பெண்ணும் ஆஜராகிவிடுகிறது... என்றெல்லாம் வரும் செய்திகளைப் பார்த்து வெறுத்துப் போகிறது மனது! அப்பா, அம்மா பேச்சைக் கேட்டு அலட்சியமாய் நடந்து கொள்ளும் நடனக்காரர் மீது கோபம் கோபமாக வருகிறது. அடுத்த படத்தில் இந்தப் பெண் முத்தமும் வாங்கிக்கொண்டு விடுமோ என்று நினைக்கையில் நெஞ்சு பதறுகிறது.

**★ சிந்தியா, "பொசிட்டிவ் திங்கிங்" என்கிறார்களே, அது என்னவென்று விளக்க முடியுமா?**

எம்.எம்.மிஹ்லார், புத்தளம்.

ஒரு குரு, சீடர்களுக்குப் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். "எதிலும் நிறைவைப் பார்க்கத் தெரிய வேண்டும். இந்தக் குவளை பாதி தண்ணீரோடு இருக்கும் போது பாதி நிறைந்திருக்கிறது என நினைப்பவனுக்குக் கடவுள் கதவுகளைத் திறந்து விடுகிறார்" என்று சொன்னார் குரு.

ஒரு சீடன் எழுந்து சென்று, அந்தக் குவளையிலிருந்த நீர் முழுவதையும் ஊற்றிவிட்டு, "இப்போது என்ன சொல்லுகிறீர்கள்?" என்றான்.

"இப்போதும் இந்தக் குவளை வெறுமையால் நிறைந்திருக்கிறது" என்றார் குரு.

# மன்னாதி மன்னன் 96

## ராஜரிஷியின் சாபவிமோசனம்

பிரதிஷ்டாபுரி அரசனும் அரசியும் தங்களுடைய மகள் சஞ்சீவி மடந்தையின் அந்தப்புரம் வந்ததும், அவர்களிடம் தன்னுடைய முற்பிறவிக் கதையைக் கூறினாள். முற்பிறவியில் தங்கமாபுரி அரசனாகவும் தனது கணவனாகவும் இருந்த தங்கேஸ்வர மன்னனே ஆதிசேடன் என்ற பெயருடன் அந்தணர் வீட்டில் வாழ்ந்து வந்துள்ளார் என்று கூறியதும் அரசனும் அரசியும் பெரு மகிழ்ச்சியடைந்தார்கள். இருவருக்கும் சிறப்பாகத் திருமணமும் நடந்தேறியது.

திருமணத்திற்கு மன்னர் விக்கிரமாதித்தனும் வந்திருந்தார். அவரிடம் சஞ்சீவி மடந்தை, தங்கள் இருவரையும் ராஜரிஷி விஸ்வாமித்திரரிடம் அழைத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டாள். விக்கிரமாதித்த மன்னர் வேதாளத்தின் துணையுடன், இமய மலைச் சாரலில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு வாழ்ந்த மகரிஷியிடம் மணமக்களை அழைத்துச் சென்றார்.

சஞ்சீவி மடந்தையைக் கண்டதும் விஸ்வாமித்திரமாமுனிவர் தான் கொடுத்த சாபம் நீங்குவதற்கான காலக்கெடு வந்துவிட்டதாக எண்ணினார். மாமுனிவரை வணங்கிய சஞ்சீவி மடந்தை, "மாமுனிவர் பெருமானே, தாங்கள் எனக்களித்த வரத்தின்படி, முற்பிறவி நினைவுகள் எதுவும் நீங்காமல் வாழ்ந்து, எனது முற்பிறவிக் கணவரையே அடைந்தேன். கருணை கூர்ந்து நாங்கள் மீண்டும் எங்கள் நாடு திரும்பி வாழவும் தங்களுடைய சாபத்துக்கு ஆளான தங்கமாபுரி மக்கள் விமோசனம் பெற்று மீண்டும் உயிர்பெற்று வாழவும் அருள் பாலிக்க வேண்டுகிறேன்," என்று கேட்டுக் கொண்டாள்.



சஞ்சீவி மடந்தையின் கற்புநெறியை மெச்சிய மாமுனிவர் அவளுடைய கோரிக்கையை நிறைவேற்றி ஆசீர்வதித்தார். மன்னர் விக்கிரமாதித்தனையும் ஆசீர்வதித்த முனிவர், தம்பதியினரை தங்கமாபுரிக்கு அழைத்துச் சென்று பட்டம் சூட்டி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

வேதாளத்தின் உதவியுடன் மன்னர் விக்கிரமாதித்தனும் ஆதிசேடனும் சஞ்சீவி மடந்தையும் தங்கமாபுரியை வந்தடைந்தனர். இம் மூவரையும் அனுப்பி வைத்த மாமுனிவர் தன்னுடைய கமண்டலத்துள் அதுவரை அடக்கி வைத்திருந்த தங்கமாபுரி குடிமக்களின் உயிர்களை விடுவித்தார். இதனால் ஆதிசேடன் முதலானோர் தங்கமாபுரியை வந்தடையும் போது அந் நகரத்தில் பல வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்து உயிரிழந்த அனைத்து ஜீவராசிகளும் உயிர் பெற்றெழுந்து நடமாடின.

தங்கமாபுரியில் மீண்டும் உயிர் பெற்றெழுந்த அந்நகர மாந்தர், தங்கள் மன்னர் தங்கேஸ்வரனும் அரசி சொர்ண காந்தரூபியும் வந்து விட்டதைக்கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர். இருவருக்கும் பட்டாபிஷேகம் நடத்தி அவர்களுடைய முற்பிறவிப் பெயர்களையும் சூட்டி விட்டு, அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு மன்னர் விக்கிரமாதித்தன் வேதாளத்தின் தோள் மீது ஏறிக் கொண்டு உஜ்ஜயினி மாகாளிபுரம் நோக்கிப் புறப்பட்டார்.

அன்றைய தினமே தனது காடாறு மாத வாழ்க்கையின் காலக்கெடு முடிவதனால் நகர எல்லையில் அமைச்சர் பட்டி மன்னரை வரவேற்பதற்காக ஆயத்தங்களுடன் நின்றிருந்தார். மன்னர் நகர எல்லையை அடைந்ததும் வேதாளத்தின் தோளிலிருந்து கீழே குதித்தார். இருவரும் கட்டித் தழுவிக் கொண்டு குல தெய்வமான காளிகாதவியின் ஆலயம் சென்று வழிபட்டுவிட்டு அரண்மனை சென்றனர்.

விக்கிரமாதித்த மாமன்னரின் சிம்மாசனத்திலுள்ள பத்தாவது படியில் ஏறி நின்ற போஜராஜ மன்னரிடம் இக்கதையைக் கூறிய கனகாபிஷேகவல்லிப் பதுமை, போஜமகாராஜனைப் பார்த்து, "மன்னரே, இத்தகைய வீரதீரப் பராக்கிரமச் செயல்களில் மகாசூரராகத்திகழ்ந்த விக்கிரமாதித்த மன்னரின் ஆற்றல்களில் ஒரு சிறிதளவேனும் உங்களிடம் இருக்குமானால் சிம்மாசனத்தில் தங்கள் ஏறி அமரலாம்" என்று கூறியது.

அப்பொழுது நள்ளிரவு கடந்து விட்டதால் போஜராஜன் களைப்புற்றிருந்தார். அவ்விடம் விட்டகன்று தன் அரண்மனை திரும்பி ஓய்வெடுத்தார்.

அடுத்த நாட்காலை துயிலெழுந்த போஜராஜன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு பரிவாரங்கள் சூழ சிம்மாசனம் வைக்கப்பட்டிருந்த மாளிகையை அடைந்தார். சிம்மாசனத்துக்குரிய பூசைகளை முடித்துவிட்டு ஒன்றன்பின் ஒன்றாக ஏறி பத்தாவது படியைக் கடந்து பதினோராவது படியில் கால் வைத்ததும் அப் படியில் நின்ற வித்வபூஷணிப் பதுமை தனது வலது கையை நீட்டி மன்னரை மேற்கொண்டு மேலே செல்ல விடாது தடுத்தது.

பதினோராவது படிக்குரிய பதுமை, "போஜமகாராஜனே, ஏற்கனவே இந்த அரிய அரியணையிலுள்ள பத்துப் பதுமைகளும் கூறிய கதைகளைக் கேட்டு எமது மாமன்னரான விக்கிரமாதித்த பூபதி அவர்கள் எத்தகைய அதிவீரதீர பராக்கிரமசாலியாகத் திகழ்ந்தார் என்பதைத் தெரிந்திருப்பீர்கள். பரோபகாரசிந்தை கொண்டவராகத் தன்னை நாடி வரும் எவராயினும் சரி அவரவர்களுக்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளைப் புரிந்து வந்துள்ளார் என்பதையும் புரிந்திருப்பீர்கள்.

அப்பேற்பட்ட பெருமகனின் அருங்குணங்களில் ஒரு சிலவற்றையேனும் தாங்கள் கொண்டொழுகினீரெனில் தாங்கள் மேற்கொண்டு சிம்மாசனம் ஏறலாம். அம் மாமன்னர் பெருமானின் ஆற்றல்கள் சிலவற்றை நானும் உமக்குக் கூறக் கடமைப்பட்டவள். எனவே நான் கூறும் கதைகளையும் கேட்டுப் பாருங்கள்" என்று கூறியது. போஜ மன்னரும் தமது பரிவாரங்களை அனுப்பிவிட்டு பதுமை கூறும் கதையைக் கேட்கலானார்:

### வித்வ பூஷணிப் பதுமை கூறிய கதை

மன்னர் விக்கிரமாதித்தன் உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தில் தனது நாடாறுமாத ஆட்சியை நீதி வழுவாது நடத்தி முடிக்கும் தறுவாயில் காடாறு மாதம் செல்ல வேண்டிய ஆயத்தங்களைச் செய்யலானார். அமைச்சர் பட்டி வேதாளத்தை அழைத்து, அடுத்து வரும் காடாறுமாத காலத்தைக் கழிக்க ஏற்ற இடம் ஒன்றைக் கண்டறிந்து கூறும்படி கேட்டுக் கொண்டார்.

வேதாளம் ஒரு சில நாளிகைகள் அவகாசம் கேட்டு, உரிய வேளையில் திரும்பி, தனது அபிப்பிராயத்தைக் கூறியது. (மன்னன் வருவான்...)

இராஜகுமாரன்

---

# காதில பூ கந்தசாமி



நோட்டீஸ்பலகை

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

-காதில பூ கந்தசாமி

கூட்டுக்கட்சிக்குள்ள தலைவரைத் தேர்ந்தெடுக்கப் பெருஞ்சண்டைமுண்டு, கடைசியா இதுக்குத் தீர்வு தரக்கூடிய ஆள் காதிலபூ கந்தசாமி தானெண்டு அறிஞ்சு என்னட்ட வந்தினம். ஒரு சிம்பிள் கேள்வி கேக்கறன் சரியான பதில் சொல்லிறவர் தான் தலைவர் எண்டன். சரியெண்டிச்சினம். ஒவ்வொருத்தராய் கேட்டன்.

**கா.பூ:** முதலில சுரேஷ் பிரம்மைச் சந்திரன் சொல்லுங்க பாப்பம். இதொரு சின்னக்கணக்கு. உமக்குத்தான் நல்லாக் கணக்கடிக்கத் தெரியுமே! ரெண்டும் ரெண்டும் எத்தனை?

**சு.பி:** ரெண்டும் ரெண்டுமெண்டால், எப்பவுமே நாங்கள் ரெண்டு பட்டுக்கொண்டு போகவேணுமெண்டு அர்த்தம். எதையும் ரெண்டாக்கிறதில எனக்கு நல்ல திறமை இருக்கு. ஈரோஸில இருந்து ஈ.பி.ஆர்.எல்.எப். ரெண்டாக நானொரு முக்கிய காரணம். ஈ.பி.ஆர்.எல்.எப்பில இருந்து ஈ.பி.டி.பி. உடையவும் நான் ஒரு முக்கிய காரணம். ஏன் இப்ப ஈ.பி.ஆர்.எல்.எப். ரெண்டாய் உடைஞ்சு ஒண்டு என்னோடயும், மற்றது வரதரணியாகவும் பிரிஞ்சு போய், பெயர் யாருக்கெண்டு தெரியாமல் வழக்கில தொங்கிறதுக்கும் நானே காரணம். ஆனபடியால, எதையும் ரெட்டிப்பாக்கத்தக்க திறமை படைத்த எனக்குத் தான் தலைமைப்பதவி பொருத்தம்.

**கா.பூ:** நல்ல பதில், பரிசீலிக்கிறன். அடுத்ததா அடைக்கலம் கேட்டு நிக்கிற செல்வத்தார்.

**செல்:** கணக்கு மட்டும் கேட்காதேங்கோ கா.பூ. நான் வாங்கிற காசுக்கு நானே கணக்கு வைச்சிருக்கிறதில்லை.

**கா.பூ:** இதொண்டும் நிதிக்கணக்கில்லை. பயப்பாடாதையும் ஒரு சின்னக் கூட்டல், ரெண்டும் ரெண்டும் எவ்வளவு, அவ்வளவுதான்!

**செல்:** அட, இதே, வன்னியில இது எல்லா யாபாரிக்கும் வாய்ப்பாடமாய் சொல்லிக்குடுத்திருக்கிறேனே! ரெண்டும் ரெண்டுமெண்டால், கிடைக்கிற லாபத்தில ரெண்டு உனக்கு, ரெண்டு எனக்கெண்டு அர்த்தம். இங்கிலீஷில சொல்லுறதெண்டால் ட்டூ ஃபார் மீ! அன்ட் ட்டூ ஃபார் யு! இதப் போய் யாரும் வரியெண்டலாம், கப்பமெண்டலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரை இதுக்குப் பெயர் செல்வம்! தலைமைப்பதவியை எனக்குத் தந்திட்டியள் எண்டால் அண்ணைக்கும் சேத்து ஒரு ரெண்ட வாங்கித்தாறன். காதும் காதுமா வைச்சுக்கொள்ளுங்கோ.

**கா.பூ:** என்ர காதில ஏற்கனவே ஒரு பூ இருக்குது. எதுக்கும் யோசிக்கிறன். அடுத்ததா சங்கார முழக்கம் போடுற ஆனந்தரக் கேப்பம்.

**ஆனந்தர்:** இதென்ன நீங்கள் எல்லாரிட்டையும் ரெண்டும் ரெண்டுமெண்டு நான் ரெட்டை வேஷம் போடுறதாச் சொல்லிக் காட்டிறியள். நானென்ன இந்தியாவுக்கு ஒரு மாதிரியும், பெடியளுக்கு ஒரு மாதிரியும் பேசிறனே? நான் ஒரே மாதிரித் தான் பேசிறதை அவையவை ரெண்டு விதத்தில எடுத்துக் கொள்ளுறதுக்கு நானே பாடு? நீங்கள் என்னை எம்.பி. சீற்றிலிருந்து றிசைன் பண்ணச்சொன்னதாவும் ஒரு வதந்தியைப் பரப்பியிருக்கிறியள் போல?

**கா.பூ:** கொதிக்காதேங்கோ அண்ண! பொறுமையாக்கேளுங்கோ. தலைமைப் பதவிக்குத் தகுதியா எண்டு பாக்கத்தான் அப்பிடி அவையிட்டக் கேட்டனான். நீங்கள் ஏனதை ரெட்டை வேஷமெண்டு எடுக்கிறியள்? உங்களுக்குத் தலைமை தாங்குற தகுதியிருக்குதெண்டால் நீங்கள் சொல்லுங்கோ பாப்பம் பதிலை?

**ஆனந்தர்:** அதே விஷயம். நானும் இப்ப யார நம்ப? யாரைச் சந்தேகிக்க எண்டு தெரியாமல் ரெண்டும் கெட்டான் நிலையிலிருந்து தவிக்கிறன். உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்யிறவைய ரெண்டாமிடத்தில் வைச்சதால தான் வந்த வில்லங்கம். சரி, ரெண்டும் ரெண்டுமெண்டால் என்னெண்டோ கேக்கிறீர்? நாலுபேர் சேர்ந்திட்டால் புதுக்கட்சியாய் பதியவேணுமெண்டு மிரட்டிப் பாக்கிறீரா? உதுக்கொரு வழக்குப் போட்டு ஒண்டுமில்லாமலாக்கிப் போடுவன் தெரிஞ்சுதே! அந்த இந்தக் கதையை விட்டிட்டு இதுக்கு ஒரிஜினல் விளக்கம் நான் தாறன் கேளும். ரெண்டு நல்ல வோட்டுப் போட்டால் ரெண்டு கள்ள வோட்டுப் போடு. ரெண்டையும் ரெண்டாம் நம்பரான எனக்கு மட்டும் போடு எண்டதத் தவிர வேற எதையும் கேளாதேங்கோ. எனக்கு விசரக் கிளப்பாதேங்கோ.

**கா.பூ:** கொதித்தாலும் குதித்தாலும் காரியத்தில கண்ணாயிருக்கிறியள். இதுவும் நல்ல தகுதிதான். சரி, கடைசியாக வினையுறு மூர்த்தியாரைப் பதில் தரச்சொல்லுங்கோ.

**வினை:** ஓமோம், எல்லாத்தையும் கேட்டுக்கொண்டு தான் இருக்கிறன். ஏகப்பிரதிநிதிகளா அவை இருக்கேக்கை, நீங்கள் ரெண்டும் ரெண்டுமெண்டு பிரிச்சுக் கேக்கிறது சரியில்லைக் கண்டியளோ!

**கா.பூ:** இல்லை. இது ஒரு சின்னக்கணக்கு மட்டும் தான். நீங்களாவது சரியான விடையைச் சொல்லி எங்கட சனத்தின்ர பிணக்கைத் தீருங்கோ ஐயா. ரெண்டும் ரெண்டும் எவ்வளவு?

**வினை:** இது வலு சிம்பிள்.

**கா.பூ:** சொல்லுங்கோவன்!

**வினை:** அதுவோ, அதை என்னட்டக் கேக்காதேங்கோ தம்பி. விடுதலைப் புலிகள் எதைச் சொல்லினமோ அது தான் அதுக்கு விடை.

**கா.பூ:** சரியான விடை. நீங்கள் தான் இந்தக் கூட்டுக்குத் தலைமை தாங்கச் சரியான தலைவர். இது தான் என்ரை தீர்ப்பு.

யாவும் கலப்படமற்ற கற்பனை












# இயந்திரப் பறவை

அதிக பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய விமானம் மிக வேகமாகப் பறக்கக்கூடிய விமானம் என்று நவீனத்துவத்தின் சாதனைகள் சகலதையும் விமானத்துறை தொட்டுக் கொண்டிருக்கும் காலத்தில் சிறிய அளவில் செய்து பார்த்த விமானத்தான் இது.

சிறிய எஞ்சின் பொருத்தப்பட்டு பாரம் குறைந்த உதிரிப்பாகங்களுடன் அமைக்கப்பட்டிருக்கும் இந்த விமானத்தின் நீளம் 9 அடி 4 அங்குலம் அகலம் 6 அடி 6 அங்குலம் மட்டும்தான். விமான உற்பத்தியில் இதுவொரு சாதனை அளவு.

உயரத்தில் பறக்கும் போது குளவி ஒன்று வானத்தில் வட்டமிடுவது போல காட்சியளிக்கும் இவ்விமானத்தினால் தொடர்ச்சியாக பல மணி நேரமெல்லாம் பறக்க முடியாது. காரணம் எரிபொருள் தீர்ந்து விடும் என்பதுதான். விமானியைத் தவிர வேறு எவரும் இதில் ஏற முடியாது. மேலெழுந்து செல்லும் போது பார்த்து ரசிக்க மட்டும்தான் முடியும்.



## 1வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் நாயவன் 04.03.2002

தொண்டைமானாற்றைச் சேர்ந்த [illegible] தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் நாயவன் தனது முதலாவது பிறந்த தினத்தை ஜேர்மனியில் [illegible] உள்ள தனது இல்லத்தில் 04.03.2002 திங்கட்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார், அத்தை, பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்கா, அண்ணாமார், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் நாயவன் [illegible] அருள் பெற்று பல்லாண்டுகாலம் சீரும் சிறப்பும் பெற்று நீடுழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அப்பப்பா சிவானந்தம்.

## 2வது பிறந்தநாள் வாழ்த்து 11.03.2002



மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ து. உமாசங்கரக் குருக்கள் - அபிராமி தம்பதிகளின் செல்வப் புதல்வி உ. ஹரினி தன்னுடைய 2வது பிறந்தநாளை இவருடைய அப்பா, அம்மா, ஹரிசங்கர் அண்ணாவுடன் சுவிஸில் உள்ள Lausanne இல் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை இவரது அன்பு அம்மா, அப்பா, ஹரிசங்கர் அண்ணா மற்றும் தாத்தாமார், பாட்டிமார், பெரியப்பா,

### செல்வி ஹரினி உமாசங்கரக் குருக்கள்

பெரியம்மா, அண்ணாமார், அக்காமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் மாவிட்டபுரம் ஸ்ரீராஜ ராஜேஸ்வரி அம்பாள் திருவருளும், சுவிஸ், ஜெனீவா அற்புத விநாயகரின் அருளாசிகளையும் பெற்றுப் பல்கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் நீடுழி வாழ்க! என வாழ்த்துகிறார்கள்.

தகவல்: சிவஸ்ரீ து. உதயராசக்குருக்கள், கொழும்பு - Tel: 584999

# அதிக விலை

சிலர் மிகப்பிரபலமான கலைஞர்களாக இருப்பார்கள். கோடிக்கணக்கில் ரசிகர்கள் இருப்பார்கள். ஆனால் அதே துறையில் அவர்களை விட கூடிய அளவு பணம் சம்பாதிக்கும் வேறு சிலர் இருப்பதுமுண்டு. இங்கே ரசிகர்களை நோக்கி கையசைத்தபடி உற்சாகமாகப் பாடும் பாடகியும் அப்படியான ஒருவர்தான். இசை நிகழ்ச்சிகள் நடாத்தி பணம் சம்பாதிப்பதில் இவரொரு கின்னஸ் சாதனையாளர். இவர் டொலி பார்ட்டன். ஆங்கிலப் பாடகி. பிரிட்டனின் ஸ்கொட்லாந்துப் பிரதேசத்தில் உள்ள அடின்பரோ நகரில் ஆண்டு தோறும் மிகப்பெரிய கலைவிழா நடைபெறுகின்றது. இத்தகையதொரு இசை நிகழ்ச்சியில் டொலிபார்ட்டன் பாடுவதைத்தான் காண்கிறீர்கள். இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் இவர் ஒரு இசை நிகழ்ச்சிக்காக பல இலட்சம் பவுண்களை கூலியாகப் பெற்றார். இந்தச் சாதனை இன்னும் முறியடிக்கப்படாமல் இருக்கிறது. பின்னைய காலங்களில் ஹொலிவுட் பாடகிகள் பலரும் புகழை எய்திய போதும் இவரின் அளவுக்கு ஒரு நிகழ்ச்சிக்காக பணம் கோர எவராலும் முடியவில்லை என்கிறது கின்னஸ் புத்தகம்!

## 1வது பிறந்தநாள் வாழ்த்து 09.03.2002



### செல்வன் துவாரகன்

ரூபகுமார் சுதர்சனி தம்பதிகளின் செல்வப் புதல்வன் துவாரகன் தனது முதலாவது பிறந்தநாளை 09.03.2002 அன்று சுவிஸ், Basselland பெஸல்லாண்ட்டில் உள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். துவாரகன் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, சித்தப்பா கவுடா, மாமா பிரான்ஸ், சித்தி-சித்தப்பா, அண்ணா சாது, தம்பி நரேன் நோர்வே பூட்டன், பூட்டி மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இவரைப் பல்கலைகளும் கற்றுச் சீரும் சிறப்புமாகப் பல்லாண்டு காலம் நீடுழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அப்பப்பா, அப்பம்மா (திரு.திருமதி. நடராஜலிங்கம்)-வெள்ளவத்தை.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் மார்ச் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.